




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:268 | 13-04-2026 | திங்கள்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

13.04.2026 பங்குனி 30
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.04

**திதி:**
இன்று இரவு 10.26 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

**நட்சத்திரம்:**
இன்று பிற்பகல் 1.22 வரை அவிட்டம் பின்பு சதயம்

**யோகம் :**
இன்று பிற்பகல் 2.42 வரை சுபம் பின்பு சுப்பிரம்.

**கரணம்**
இன்று காலை 10.27 வரை பவம் பின்பு இரவு 10.26 வரை பாலவம் பின்பு கௌலவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.03 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று பிற்பகல் 1.22 வரை புனர்பூசம் பின்பு பூசம்

**நல்ல நேரம்**
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
காலை 7.30 – 9.00.

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00.

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மகளிர் இடஒதுக்கீடு: நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்ற வேண்டும்

## கட்சி தலைவர்களுக்கு பிரதமர் கடிதம்

**புதுடெல்லி, ஏப்.13:**

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவைச் செயல்படுத்துவதற்கு ஆதரவு கோரி, மக்களவை மற்றும் மாநிலங்களவையில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் பிரதமர் நரேந்திர மோடி கடிதம் எழுதியுள்ளார். இந்த முயற்சி, எந்தவொரு கட்சிக்கும் அல்லது தனிநபருக்கும் அப்பாற்பட்ட தருணம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு பிரதமர் மோடி எழுதியுள்ள கடிதத்தில், "விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை அதன் உண்மையான உணர்வோடு நாடு முழுவதும் செயல்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. 2029-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்கள், மகளிர் இடஒதுக்கீடு மசோதா அடிப்படையில் நடத்தப்படுவது மிகவும் அவசியமாகும்.



இம்மசோதாவிற்கு ஆதரவளிப்பதன் மூலம், பெண்கள் மற்றும் வருங்காலத் தலைமுறையினரின் மீதுள்ள பொறுப்புணர்வை அரசியல் கட்சிகள் வெளிப்படுத்த வேண்டும். இது தொடர்பான அரசியலமைப்புத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவது இந்திய அரசியலில் பெண்களுக்குக் கிடைத்த ஒரு மகத்தான சாதனையாக அமையும்.

நாம் அனைவரும் ஒரே குரலில் ஒன்றிணைந்து இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இத்தலைப்பு குறித்து அவையில் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வது மிகவும் சிறப்பாக இருக்கும். இது எந்தவொரு கட்சிக்கும் அல்லது தனிநபருக்கும் அப்பாற்பட்ட ஒரு தருணமாகும்.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற விருப்பத்தை அனைத்து அரசியல் கட்சிகளும் நீண்ட காலமாகவே வெளிப்படுத்தி வருவதால், அந்த லட்சியத்தை நனவாக்குவதற்கு இதுவே மிகச் சரியான நேரமாகும்.

இது நாட்டின் பெண் சக்திக்கும், 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த ஒரு மாபெரும் சாதனையாகத் திகழும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நாடாளுமன்றத்தில் இந்த வரலாற்றுச் சாதனையை நிகழ்த்துவோம் என்ற முழு நம்பிக்கை எனக்கு உள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "பெண்கள் முன்னேறுவதற்கும், முடிவெடுப்பதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தலைமை தாங்குவதற்கும் வாய்ப்புகள் கிடைக்கும்போது மட்டுமே எந்தவொரு சமூகமும் வளர்ச்சி அடையும். வளர்ச்சியடைந்த நாடாகத் திகழ வேண்டும் என்ற இந்தியாவின் தொலைநோக்குக் கனவை நனவாக்குவதற்கு, இந்தப் பயணத்தில் பெண்கள் இன்னும் அதிக அளவிலும், மிகத் தீவிரமாகவும் பங்காற்றுவது மிகவும் அவசியமாகும்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டத் திருத்தத்திற்கு நீங்கள் அளிக்கும் ஆதரவானது, நமது நாட்டின் பெண்களுக்கு ஆற்றவேண்டிய ஒரு முக்கியப் பொறுப்பை நிறைவேற்றுவதாக அமையும்.

நமது மகத்தான ஜனநாயக மரபுகளை நாம் மேலும் வலுப்படுத்தி, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்தை நோக்கிய உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்" என்று பிரதமர் மோடி தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

# "வெற்றியை உறுதிசெய்யும் உழைப்பை எதிர்பார்க்கிறேன்": தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, ஏப்.13:**

"ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம். 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்பதை உறுதி செய்யும் உழைப்பை உடன்பிறப்புகள் வழங்கினால் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிதான். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்" என்று தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவுக்கு இன்னும் பத்து நாட்களே உள்ளன. செல்லும் இடம் எங்கும் கழக உடன்பிறப்புகளின் எழுச்சியைக் காண்கிறேன். தமிழ்நாட்டு மக்களிடம் மகிழ்ச்சியைக் காண்கிறேன்.

ஐந்து ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் ஒவ்வொன்றும் மக்களுக்குத் தந்திருக்கக் கூடிய பயனும், தொடரவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் நாம் நிறைவேற்றவிருக்கும் சாதனைத் திட்டங்களின் மீதான மக்களின் எதிர்பார்ப்பும் அனைத்து தொகுதிகளிலும் வெளிப்படுகிறது.

தேர்தல் களத்தில் திமுக தொண்டர்களின் பணி என்பது எதிரிகளாலும் வியந்து பார்க்கக் கூடியது என்பதே நம் வரலாறு. கடந்த ஓராண்டுக்கு மேலாக தமிழ்நாட்டில் உள்ள



75,000 பாகங்களிலும் கழக உடன்பிறப்புகள் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து வந்திருக்கிறார்கள். மக்களுடனான நம் உறவு எப்போதும் தொடர வேண்டும். குறிப்பாக இனிவரும் 10 நாட்களும் மக்களோடு மக்களாக உடன்பிறப்புகள் களப்பணி ஆற்ற வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீடு வீடாக சென்று துண்டறிக்கைகளை வழங்கி வாக்குகளைச் சேகரிப்பதில் முழுமையான கவனம் செலுத்துவதுடன், கூட்டணிக் கட்சியினர் போட்டியிடும் தொகுதிகளிலும் உங்களில் ஒருவனான நானே நிற்கிறேன் என்ற எண்ணத்துடன் களப்பணியாற்றி வெற்றியை உறுதி செய்ய வேண்டும்.

92 வயது நிறைந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கடும் வெயிலிலும் பரப்புரை செய்கிறார். அகவை 80-ஐ தாண்டிய அண்ணன் சிதம்பரமும், அண்ணன் வைகோவும் மூலைமுடுக்கெல்லாம் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்பதன் அருமையை விளக்கி வருகின்றனர்.

87 வயதான நம் கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் துரைமுருகனும், 28 வயதே ஆன அவிநாசி கழக வேட்பாளர் டாக்டர் கோகிலாமணியும் பம்பரமாகக் களத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் பணியாற்றி வருகிறார்கள்.

உடன்பிறப்புகளான உங்களின் உழைப்பின் மீது உள்ள நம்பிக்கையில் உறுதியுடன் சொல்கிறேன், இந்த தேர்தல் களத்தில் நாம்தான் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்போம். இதை மக்கள் முடிவு செய்து விட்டார்கள். குறிப்பாகத் தமிழ்நாட்டு பெண்கள் முகத்தில் வெளிப்படும் மலர்ச்சியும், இளைஞர்களின் மனதில் உள்ள நம்பிக்கையும், சிறுபான்மைச் சமுதாயத்தினர் உள்ளிட்ட அனைத்து மக்களின் ஆதரவும் நமது வெற்றிக்கு அடித்தளமாக உள்ளன. வாக்குப்பதிவு நாளில் அதை வெற்றியாகக் கட்டி எழுப்ப வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

முற்றிய நெற்கதிரைக் கவனமாக அறுவடை செய்வதுதான் தேர்தல் களப்பணி என நம் உயிர்நிகர் தலைவர் கருணாநிதி பலமுறை சுட்டிக்காட்டி இருக்கிறார். அதைத்தான் உங்களில் ஒருவனான நானும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம். 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்பதை உறுதி செய்யும் உழைப்பை உடன்பிறப்புகள் வழங்கினால் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிதான். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.

ஒற்றுமையாகவும் ஒருங்கிணைப்புடனும் உடன்பிறப்புகள் ஓயாது உழைக்கிறார்கள் என்ற செய்தி என் காதுக்கு வரும்போது எல்லாம் நான் உற்சாகத்துடன் உங்களை மிஞ்சும் உழைப்பை வழங்கும் ஆற்றலைப் பெறுகிறேன்.

கொளுத்தும் வெயிலையும், கோடை மழையையும் பொருட்படுத்தாமல் களத்தில் பணியாற்றுகின்ற உடன்பிறப்புகளுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சலிக்காமல் உழைப்பதில் நம் உடன்பிறப்புகளுக்கு நிகர் யாருமில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கின்ற உங்கள் உழைப்பினால், தோழமைக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து நீங்கள் ஒற்றுமையாக ஆற்றுகின்ற பணியினால், மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணி மகத்தான வெற்றியை உறுதி செய்து, இந்தியாவுக்கே வழிகாட்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சியை நம் உயிர்நிகர் தலைவர் கருணாநிதியின் உடன்பிறப்புகள் அமைத்துக் காட்டினார்கள் என்ற பெருமையை விட உங்களில் ஒருவனான எனக்கு வேறென்ன வேண்டும்! என தெரிவித்துள்ளார்.

# ஈரானில் 44 நாள்களாக இணைய வசதி முடக்கம்!

**தெஹ்ரான், ஏப்.13:**

ஈரானில் கடந்த 44 நாள்களாக இணைய வசதி முடக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையே போர்நிறுத்தம் மற்றும் சமாதான பேச்சுவார்த்தை பற்றி பாகிஸ்தானில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்த நிலையில் ஈரானில் இணைய முடக்கம் 44 நாள்களை எட்டியுள்ளது.

உலகம் முழுவதும் இதுவரை ஏற்பட்ட இணைய முடக்கங்களில் இறையாண்மை கொண்ட ஒரு நாட்டில் இவ்வளவு நாள்கள் இணையம் முடக்கப்படுவது இதுவே முதல்முறை என இணைய கண்காணிப்பு அமைப்பான நெட்பிளாக்ஸ் தரவுகளை வழங்கியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரானில் தொடர் தாக்குதல்களை நடத்தத் தொடங்கியதிலிருந்து ஈரான் அரசு அங்குள்ள இணைய வசதியை முடக்கியது. ஈரான் அரசு போரைக் காரணம் காட்டி அன்றுமுதல் பொதுமக்களுக்கான இணைய அணுகலுக்கு முழுமையான தடை விதித்தது.






# அடுத்த 6 நாள்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஏப்.13:**

இன்று(திங்கள்கிழமை) முதல் அடுத்த 6 நாள்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், சுமார் 0.9 கிமீ உயரத்தில், வடக்கு மத்தியப் பிரதேசம் முதல் தென் தமிழகம் வரை விதர்பா, மத்திய மகாராஷ்டிரா, மரத்வாடா மற்றும் உள் கர்நாடகா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது. இதன்காரணமாக கன்னியாகுமரி, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை லேசான மழையும் ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையும் நிலவும்.

13-04-2026 முதல் 18-04-2026 வரை: கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

# பாடகி ஆஷா போஸ்லே மரணம்: பிரதமர் மோடி, ராகுல்காந்தி இரங்கல்

**புதுடெல்லி, ஏப்.13:**

பழம்பெரும் பின்னணிப் பாடகி ஆஷா போஸ்லே(92) உடல் நலக்குறைவு காரணமாக தெற்கு மும்பையில் உள்ள பிரீச் கேண்டி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி காலமானார். இந்நிலையில், ஆஷா போஸ்லேவின் மறைவுக்கு திரைப்பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:-

இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற மற்றும் பன்முகக் குரல்களில் ஒருவரான ஆஷா போஸ்லே மறைவால் நான் ஆழ்ந்த வருத்தம் அடைகிறேன். பல தசாப்தங்களாக நீடித்த அவரது தனித்துவமான இசைப் பயணம், நமது கலாச்சாரப் பாரம்பரியத்தை வளப்படுத்தியதுடன், உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற மக்களின் இதயங்களைத் தொட்டது. அவரது குடும்பத்தினர், ரசிகர்கள் மற்றும் இசை ஆர்வலர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். அவர் வருங்கால சந்ததியினருக்கு தொடர்ந்து உத்வேகம் அளிப்பார், மேலும் அவரது பாடல்கள் மக்களின் வாழ்வில் என்றென்றும் எதிரொலிக்கும் என்றார்.



இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ் தள பக்கத்தில் இரங்கல் தெரிவித்து பதிவிட்டு உள்ளார் அதில் கூறியிருப்பதாவது:-

மாபெரும் பாடகி ஆஷா போஸ்லே அவர்களின் மறைவுச் செய்தி மிகுந்த துயரத்தை அளிக்கிறது. அவரது குரலின் வழியே, அவரது கலை நம்மிடையே என்றென்றும் அழியாமல் நிலைத்திருக்கும். இந்தத் துயர நேரத்தில், அவரது அன்புக்குரியவர்களுக்கும் ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## திருக்குறள் குறள்-588

**ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்**



ஓர் ஒற்றன் மறைந்து கேட்டுத் தெரிவித்தச் செய்தியையும் மற்றோர் ஒற்றனால் கேட்டு வரச் செய்து ஒப்புமை கண்டபின் உண்மை என்றுக் கொள்ள வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



அன்பு தரும்
உறவை மனதில்
வை....
அனுபவம்
தரும் உறவை
நினைவில் வை....

**உஷா முத்துராமன்**

## கிரிவலப் பாதையில் ஸ்ரீமாணிக்கவாசகர் ஆலயம் கும்பாபிஷேக விழா



**திருவண்ணாமலை ஏப்.13:**

திருவண்ணாமலை மாவட்டம் அடி அண்ணாமலை கிரிவலப் பாதையில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மாணிக்கவாசகர் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேக விழா ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல் 12 காலை 8.00 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா கோபுரத்தில் புனித கலச நீர் ஊற்றி வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் புனித கலச நீர் தெளிக்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு ஸ்ரீ மானிக்கவாசகரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மரக்கன்றுகள் பராமரிப்பு பணி



யானைமலை கிரீன் பவுண்டேஷன் 262 வது வார நிகழ்வு மதுரை உயர்நீதிமன்ற கிளை அருகில் தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமையில் நடைபெற்றது. உறுப்பினர் பாலமுருகன் முன்னிலை வகித்தார். தமிழ் இலக்கியா வரவேற்றார். மதுரை ஒத்தக்கடை உயர் நீதிமன்ற கிளை அருகில் உள்ள மரங்களுக்கு பராமரிப்பு பணி, கவாத்து பணி, நீர் ஊற்றும் பணி நடைபெற்றது. மரங்களில் அறையப்பட்டு இருந்த இரும்பு ஆணிகள், பெயர் பலகைகள் அகற்றப்பட்டன. மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த மரங்களின் கிளைகள் பராமரிக்கப்பட்டு சரி செய்யப்பட்டன. நிகழ்வில் அஞ்லக பணியாளர் பிரேம் , பாஸ்கரன், பசுமைச் சாம்பியன் அசோக்குமார், தியாகராஜர் நன்முறை மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கார்த்திக், ராகேஷ், பாண்டி, ஸ்டெல்லா மேரி, ஐஸ்வர்யா, சந்திரா, அரிய நட்சத்திரா , நிலா ஸ்ரீ, பிரசீத், ஜெய்சீத், பாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர். மாணவர் ரூபன் நன்றி கூறினார்.

## வேட்பாளர் P.சரவணன் வாக்கு சேகரிப்பு



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சட்டமன்றத் தொகுதி எடப்பிறை ஊராட்சியில் நேற்று மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர் P.சரவணன் தெ.மு.தி.க துணைவியார் வீடு வீடாக சென்று முரசு சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார். உடன் திமுக கிளை கழக பொறுப்பாளர்கள் அண்ணாமலை மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026



திருநின்றவூர் ஸ்ரீமத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீபக்தவத்சலப் பெருமாள் - விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026 எட்டாம் திருநாள் மாலைக குதிரை வாகனம் ( நேற்று இரவு)

## பட்டணம் பேரூராட்சியில் தீவிர வாக்கு சேகரிப்பு உதயசூரியன் சின்னம் வரைந்த நபருடன் மதிவேந்தன் தீவிர பிரச்சாரம்

**இராசிபுரம், ஏப் 13:**

ராசிபுரம் சட்டமன்ற (தனி) தொகுதியில் திமுக வேட்பாளரான அமைச்சர் மதிவேந்தன், பட்டணம் பேரூராட்சி பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட போது, உதயசூரியன் சின்னம் வரைந்த நபரை பிரச்சார வாகனத்தில் ஏற்றி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தார்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு திமுக வேட்பாளர் அமைச்சர் மதிவேந்தன் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நேரடி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அந்த வகையில், பட்டணம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று பொதுமக்களை சந்தித்து, திமுக அரசு மேற்கொண்ட நலத்திட்டங்களை விளக்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

இந்த பிரச்சாரத்தின் போது, உதயசூரியன் சின்னத்தை திறமையாக வரைந்த ஒருவரை கவனித்த மதிவேந்தன், அவரை உடனடியாக பிரச்சார வாகனத்தில் ஏற்றி கொண்டு சென்றார். இதனால் அப்பகுதி மக்களிடையே ஆர்வமும் உற்சாகமும் அதிகரித்தது.

பின்னர் பொதுமக்களிடம் பேசும் போது, “மக்களின் ஆதரவுடன் மீண்டும் வெற்றி பெற்று, மேலும் பல வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவோம்” என்று உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சி உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். உறுதியளித்தார்.

## சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு விழா




"பேராசிரியர் அய்க்கண் அவர்கள் நினைவுச் சிறுகதைப் போட்டி" ப்பரிசளிப்பு விழா 11.4.26 அன்று காரைக்குடியில் நடைபெற்ற போது, 3ஆம் பரிசுப் பெற்ற "தமிழ்ச் செம்மல்" நன்னிலம் இளங்கோவன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்துப் பரிசும் வழங்கப்பட்டது. செய்தி: குடந்தை பரிபூரணன்.

## மேல்மலையனூர் ஒன்றியம் திமுக வீடுவீடாக வாக்கு சேகரிப்பு



செஞ்சி சட்டமன்றத் தொகுதி திமுகவேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ,வை ஆதரித்து மேல்மலையனூர் ஒன்றியத்தில் கீழ் செவலாம்பாடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## அஞ்சல் வாக்குச்சீட்டு அச்சடிக்கும் பணியினை நேரில் ஆய்வு



**திருவண்ணாமலை, ஏப். 13:**

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள கூட்டுறவு அரசு அச்சகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்கு சீட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் அஞ்சல் வாக்குச்சீட்டு அச்சடிக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 2026 பொது தேர்தல் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் நிகழ்ச்சி



**திருவண்ணாமலை ஏப்,13:** திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள வேங்கிக்கால் ஜெய்பீம் நகரில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டை (booth slip) வழங்கினார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பிளாஸ்டிக் விசிறியை தவிர்த்து இயற்கை விசிறியை பயன்படுத்துவோம்..!



வீட்டில் புழுக்கமாக இருந்தால், மின்விசிறியைப் போட்டுக்கொள்கிறோம். அல்லது குளிரூட்டியைப் (ஏ.சி.) பயன்படுத்துகிறோம்.

அதுவே மின்சாரம் பரவலாக இல்லாத அந்தக் காலத்தில், காற்றுக்காக நம் மூதாதையர் என்ன செய்தனர்?

பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறியைத்தான் பெரிதும் பயன்படுத்தினர். இளம் குருத்தாக இருக்கும் பனை ஓலையை, அதன் மட்டையுடன் சேர்த்து வெட்டி எடுத்து வருவர். மட்டையை ஓலையுடன் இரண்டு பிளவாக பிளப்பர். மட்டை கனமாக இருந்தால் கைபிடிக்கும் அளவிற்கு சீவி எடுத்துக்கொள்வர். நீண்டிருக்கும் ஓலையின் நுனியை வெட்டி எடுத்துவிடுவர்.



வெட்டிய ஓலையை விரித்து மட்டையுடன் இருபுறமும் கட்டிவிடுவர். விரித்த ஓலை கிழிபடாமல் இருக்க, ஓரங்களில் மெல்லியதாக வளையும் மூங்கில் அல்லது ஈச்சம் குச்சியை வைத்து தைப்பார்கள். ஒரு ஓலையில் இரண்டு முழு விசிறிகள் செய்வார்கள். ஒரு பக்கம் மட்டும் வளைத்து செய்யப்படும் விசிறிகளும் உண்டு. இதை தொழில்முறையில் செய்வோர், இளம் ஓலைகளை வெட்டி எடுத்து காய வைக்கின்றனர். பின்னர் நீரில் நனைத்து சாயம் தோய்த்து, விசிறி செய்து விற்பனைக்கு வைக்கின்றனர். அழகுக்காக அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். பனை ஓலைகள் மனிதர்களுக்குத் தேவையான இயற்கைக் காற்றைக் கொடுத்தன. ஆனால், இப்போது நகர அங்காடிகளில், பெருவாரியாக நெகிழி விசிறிகள் (பிளாஸ்டிக் - *plastic*) ஆக்கிரமித்து இருக்கின்றன. நாம் அவற்றை, தவிர்க்க வேண்டும். மன்னர்கள் காலத்தில் அரசர்கள், மயிலிறகால் செய்யப்பட்ட விசிறிகளைப் பயன்படுத்தினார்கள்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## பணி நிறைவு பாராட்டு விழா




மண்டபம் காந்திநகர் நடுநிலைப்பள்ளி தலைமை யாசிரியை சா.பிரான்சிஸ் மேரி பணி நிறைவு பாராட்டு விழா, இராமேஸ்வரம் லிங்கம் மகாலில் நடைபெற்றது.

விழாவிற்கு, மண்டபம் பேரூராட்சி தலைவர் ராஜா தலைமை வகித்தார்.

1986 முதல் 2026 வரை 40 ஆண்டுகள் 11 பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியரை, அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள் பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தனர்.

நிகழ்வில், சின்னப்பாலம் நடுநிலைப்பள்ளி ஆசிரியர் ஜெ.ஜே.லியோன் வாழ்த்துரை வழங்கி, பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தார்

நிகழ்விற்கான ஏற்பாடுகளை காந்தி நகர் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தினர் செய்திருந்தனர்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026

## தேர்தல் களப்பணியில்...

### அருமைச் சகோதரர் ராகுல் காந்தி! - முதல்வர் ஸ்டாலின் நெகிழ்ச்சி!



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரசாரத்தில், 'பிரதமர் வேட்பாளராக இருந்த அருமைச் சகோதரர் ராகுல் காந்தி' என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் (ஏப். 11) நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: "நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறேன் – 'நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என்பது எங்கள் நிலைப்பாடு'. மத்தியில் 'இந்தியா கூட்டணி' ஆட்சி அமைந்திருந்தால், நீட் தேர்வு தமிழகத்தில் இருந்திருக்காது. அதற்கான உறுதியை, பிரதமர் வேட்பாளராக இருந்த அருமைச் சகோதரர் ராகுல் காந்தியே பேசியிருக்கிறார்; பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். ஆனால், கூட்டணி கட்சிகள் தயவுடன் ஆட்சியமைக்கிற பிரதமர் மோடியைப் பார்த்து, தமிழகத்துக்கு நீட் விலக்கு தாருங்கள் என்று எடப்பாடி பழனிசாமியால் கேட்க முடியுமா?

நீட் தேர்விலிருந்து விலக்கு பெற நாங்கள் சட்டப்பூர்வமாகப் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம்.

கொள்கையை விற்றுப் பிழைக்கும் அவர்கள் கூட்டத்துக்கு, சுய மரியாதை உரிமைகளும் இருக்காது; மாநில உரிமைகளும் புரியாது" என்றார்.

### விஜய் தொகுதிகளில் திமுகவுக்கு வாக்கு சேகரிக்கும் கமல்!



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரேகட்டமாக நடைபெற இருக்கிறது. இதற்காக அனைத்து கட்சிகளும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். புதுவரவான தவெக தேர்தலில் தனித்து களம்காண்கிறது.

அக்கட்சி 234 தொகுதிக்கும் வேட்பாளர்களை அறிவித்து விஜய் பிரசாரம் செய்து வருகிறார். கட்சியின் தலைவர் விஜய் சென்னை பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இரண்டு தொகுதிகளிலும் திமுக வேட்பாளரையே எதிர்த்து களமிறங்குகிறார்.

இந்த நிலையில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் பிரசாரம் செய்ய உள்ளார். கமலில் தேர்தல் பிரசார சுற்றுப்பயணம் தொடர்பான அட்டவணையை திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ளது. அதில், விஜய் போட்டியிடும் பெரம்பூரில் ஏப்ரல் 17ஆம் தேதியும், திருச்சி கிழக்கில் ஏப்.20ஆம் தேதியும் கமல் பிரசாரம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "மக்களவைத் தேர்தல் என ஸ்டாலின் நினைக்கிறார்" - அன்புமணி கிண்டல்

நடக்க உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை மக்களவைத் தேர்தல் என ஸ்டாலின் நினைத்துக் கொண்டிருக்கிறார் என்று பாமக தலைவர் அன்புமணி கிண்டலாகக் கூறினார்.

திருவண்ணாமலை சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் சி.ஏழுமலையை ஆதரித்து பாமக தலைவர் அன்புமணி நேற்று பிரச்சாரம் செய்தார்.

முன்னதாக அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் முழுவதும் திமுகவுக்கு எதிரான மிகப்பெரிய பேரலை உருவாகி உள்ளது. இன்னும் 10 தினங்களில் அது சுனாமியாக மாறி எங்கள் அணிக்கு மிகப்பெரிய வெற்றி தரும். பெண்களின் முழு ஆதரவு தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு உள்ளது. இந்த தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

நடக்க இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலை மக்களவை தேர்தல் என்று முதல்வர் ஸ்டாலின் நினைத்து கொண்டிருக்கிறார். தமிழக சட்டப்பேரவை தேர்தல் என்பது அதிமுகவுக்கும் திமுகவுக்குமான தேர்தல். மத்திய அரசை பற்றி ஏன் தேவையில்லாமல் பேசுகிறார், பிரதமர் மோடி மீது ஏன் ஸ்டாலினுக்கு பயம்? திமுக வேட்பாளர்களுக்கு ஸ்டாலின் மீது நம்பிக்கை இல்லை என்றார்.

## சென்னை தியாகராயர் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் கட்சிகள்

சென்னை மாநகரின் இதயப் பகுதியாக விளங்கும் தியாகராயநகர் தொகுதியில், திமுக வேட்பாளராக ராஜா அன்பழகன், அதிமுக சார்பில் தி.நகர் சத்யா, தவெக சார்பில் புஸ்சி ஆனந்த், நாம் தமிழர் கட்சி சார்பில் வி.அனுஷா, தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் எம்.எல்.ரவி, சுயேட்சை வேட்பாளர்கள் 21 பேர் என 26 பேர் களத்தில் உள்ளனர்.

**மறைந்த திமுக எம்எல்ஏ ஜெ.அன்பழகனின் மகனான திமுக வேட்பாளர் ராஜா அன்பழகன்**

தி.நகர் பேருந்து நிலையத்தை சீர்படுத்தி அடுக்குமாடி வணிக வளாகத்துடன் கூடிய பார்க்கிங் வசதி, தட்டுப்பாடு இன்றி குடிநீர்வசதி, டிஎன்பிஎஸ்சி, யுபிஎஸ்சி தேர்வுகளுக்கு தயாராகி வரும் மாணவர்களுக்கு உதவும் வகையில் இரண்டு பயிற்சி மையங்கள் அமைப்பது என பல்வேறு வாக்குறுதிகளை அளித்து வாக்கு சேகரித்து வருகிறார்.









**அதிமுக வேட்பாளர் தி.நகர் சத்யா,**

தி.நகரை வெளிநாட்டு தரத்துக்கு உயர்த்தும் வகையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவது, துரைசாமி சுரங்கப்பாதை, மேட்லி சுரங்கப்பாதையில் மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காதவாறு தடுத்தல், புதிதாக அரசு கலை அறிவியல் கல்லூரி அமைப்பது உள்பட பல்வேறு வாக்குறுதிகளை அளித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டு ள்ளார்.

**நாதக வேட்பாளரான வழக்கறிஞர் வி.அனுஷா,**

கட்சியின் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் மக்களுக்கு விளக்கிச் சொல்வதோடு, மாற்றத்தை உருவாக்குவோம் என்பதை மையப்படுத்தி பிரச்சாரம் செய்து வருகிறார்.

**தவெக வேட்பாளர் புஸ்சி ஆனந்த்,**

"தி.நகர் தொகுதியில் இந்த முறை நான் வெற்றி பெறுவது உறுதி.

மக்களுக்குத் தேவையான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணப்படும்" என்று பிரச்சாரம் செய்து வருகிறார்.

கோடை வெயில் தீயாய் பொசுக்கி வரும் தி.நகர் தொகுதியில் வேட்பாளர்களின் பிரச்சாரம் மேலும் உக்கிரத்தை ஏற்படுத்தியுள்ளது.

## லால்குடி அதிமுக வேட்பாளரின் சொத்து மதிப்பு ரூ. 6,000 கோடி: உதயநிதி ஸ்டாலின்



லால்குடி அதிமுக வேட்பாளரின் சொத்து மதிப்பு ரூ. 6,000 கோடி என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம், லால்குடி சட்டப்பேரவைத் தொகுதி திமுக வேட்பாளர் பாரிவள்ளலை ஆதரித்து லால்குடி ரவுண்டானா பகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசுகையில், பாரிவள்ளலுக்கு வாக்கு கேட்டு வந்துள்ளேன். ஆனால் உங்கள் ஆதரவை பார்க்கும் பொழுது ஏற்கெனவே நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைக்க முடிவு செய்து விட்டீர்கள்.

கடந்த முறை 17 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற வைத்த நீங்கள் தற்போது பாரிவள்ளலை ஐம்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பாரிவள்ளலை எதிர்த்து அதிமுகவில் லாட்டரி டிக்கெட் நிற்கிறார். அந்த அம்மையார் சொத்து மதிப்பு ரூ. 6,000 கோடி. அவர்கள் குடும்பத்தின் மேலே 200க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. ஆயிரம் கோடி சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கி வைத்துள்ளது.

அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொரு கட்சியிலும் துண்டு போட்டு வைத்துள்ளனர். அவரது நோக்கம் தமிழ்நாட்டில் லாட்டரி டிக்கெட்டை கொண்டு வந்து தமிழ்நாட்டை சீரழிப்பது தான் அவர்களது நோக்கம். லால்குடி மக்களை பணத்தால் ஜெயிக்கலாம் என தப்பு கணக்கு போட்டு வந்துள்ளனர்.

லால்குடி சுயமரியாதை மண். அன்புக்கு கட்டுப்பட்டவர்கள் நீங்கள், பணத்திற்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல. எதிர்த்து நிற்கும் வேட்பாளர் டெபாசிட் இழக்கும் வகையில் வாக்களிக்க வேண்டும் என்றார்.

## விசிலுக்குப் பதில் இரட்டை இலைக்கு வாக்கு கேட்ட செங்கோட்டையன்!



ஈரோடு : இரட்டை இலைக்கு வாக்கு கேட்டே பழகிவிட்டது என்று தவெக வேட்பாளர் செங்கோட்டையன் தேர்தல் பிரசாரத்தில் பேசினார்.

ஈரோடு மாவட்டத்தில் தாம் புதிதாகச் சேர்ந்துள்ள நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் கே. ஏ. செங்கோட்டையன் ஈடுபட்டார். அப்போது பிரசார வாகனத்தில் நின்றபடி பேசிய அவர், தவெகவுக்கு தேர்தல் ஆணையத்தால் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட ஒதுக்கப்பட்டுள்ள விசில் சின்னத்துக்குப் பதிலாக இரட்டை இலை என்று குறிப்பிட்டு சலசலப்பை ஏற்படுத்தினார்.

உடனடியாக சுதாரித்துக்கொண்ட அவர், இரட்டை இலை என்றே வாக்கு கேட்டுக்கேட்டுப் பழகிவிட்டதாகப் பேசி சமாளித்தார். இதனால் பிரசாரத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

## எடப்பாடி பழனிசாமி, டிடிவி தினகரன் ஒன்றாக இணைந்து தேர்தல் பிரசாரம்!

தஞ்சாவூரில் அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமியும், அமமுக பொதுச்செயலர் டிடிவி தினகரனும் இணைந்து ஒன்றாக தேர்தல் பிரசாரம் செய்தனர்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள எட்டுப் பேரவைத் தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி மற்றும் அமமுக பொதுச்செயலர் டிடிவி. தினகரன் இணைந்து தஞ்சாவூர் ரயில் நிலையம் அருகே பிரசாரம் மேற்கொண்டனர்.

அப்போது பேசிய எடப்பாடி பழனிசாமி, தஞ்சாவூர் என்றால் பொன் விளையும் பூமி. இந்த பூமியை ஸ்டாலின் துணை முதல்வராக இருந்தபோது ஹைட்ரோ கார்பன், மீத்தேன் எடுக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டார். அப்படி உங்கள் நிலத்தை அபகரித்தவர் ஆட்சி தொடர வேண்டுமா..?

நான் ஒரு விவசாயி, இன்றும் விவசாயம் செய்கிறேன். நம் பூமியை ஸ்டாலின் அபகரித்து பல்வேறு தொழில்களுக்குக் கொடுக்க முயற்சித்தார். அதிமுக அரசு எம்ஜிஆர் முதல்வராக இருந்தபோது காவிரி பிரச்னைக்கு நீதிமன்றம் சென்றது. அவருக்குப் பின்னர் அம்மா நியாயத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அம்மா இருக்கின்றபோதே நாம் தீர்ப்பை பெற்றோம். ஆனால் திமுக மத்தியில் ஆட்சியில் இருந்தபோதும் இதில் கவனம் செலுத்தவில்லை. அம்மா தொடர்ந்த வழக்கை நாம் தொடர்ந்து நடத்தி, விவசாயிகள் வயிற்றில் பால் வார்க்கும் வகையில் தீர்ப்பு பெற்றோம். விவசாயிகள் கனவை நனவாக்கியது அதிமுக அரசு.

இவ்வாறு அவர் பேசினார்.

## "சுந்தர்.சி ஒரு 'சினிமா சங்கி', ஏனெனில்..." - அமைச்சர் பிடிஆர் விவரிப்பு

"சுந்தர்.சி 11-ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் என்பதால், அவருக்கு எதையும் படித்துப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லை" என்று மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் காட்டமாக பேசியுள்ளார். மேலும், சுந்தர். சி-யை 'சினிமா சங்கி' என்று அவர் குறிப்பிட்டார்.



மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கிரம்மர்புரம், முரட்டன் பத்திரி உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது அவர் பேசியது: "எனது அரசியல் வாழ்க்கையில் எப்போதும் கட்சியின் கொள்கை, செயல்பாடு, ஆட்சியில் செய்த மற்றும் செய்யப்போகும் திட்டங்கள் சாதனைகள் பற்றியே பேசியுள்ளேன். என்னை எதிர்த்து நின்ற வேட்பாளர்கள் குறித்து நான் எந்த ஒரு வார்த்தைகூட தவறாக பேசியது இல்லை. அவர்களும் என்னை பற்றி தவறாக பேசியது இல்லை. ஆனால், மதுரை மத்திய தொகுதியில் புதிய நீதிக் கட்சி சார்பில் அதிமுகவின் இரட்டை இலை சின்னத்தில் வேட்பாளராக நடிப்பதற்காக 'சினிமா சங்கி' ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார். இவருக்கும் மதுரைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால், இவரது தயாரிப்பாளரான புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் இவரை வேட்பாளராக நடிப்பதற்காக களம் இறக்கியுள்ளார்.

இந்த வேட்பாளரின் மனைவி, ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போன்று கடந்த 15 – 20 ஆண்டுகளில் திமுக, காங்கிரஸ், பாஜக என மூன்று கட்சிகள் தாவியவர். தற்போது, நான்காவது முறையாக ஏ.சி. சண்முகத்தின் கட்சி வழியாக, 5-ஆவது கட்சியாக இவரது கணவரை அதிமுகவில் போட்டியிட வைத்துள்ளார். அந்த வேட்பாளர், தான் வெற்றி பெற்றால் மதுரையில் வெறும் 15 நாட்கள் மட்டுமே இருப்பேன் என்று வெளிப்படையாகவே கூறுகிறார்.

ஏன் அவரை 'சினிமா சங்கி' என கூறுகிறேன் என்றால், அவர் வந்தவுடன் முதலில் சென்றது ஆர்எஸ்எஸ் அலுவலகம்தான். அவருக்கு மதுரையைப் பற்றி எந்த புரிதலும் இல்லாமல், இயக்குநர் பார்த்திபன் குமார் என்பவர் கற்றுக்கொடுத்தபடி, எல்லா இடத்திலும் "இது சரியில்லை" என்ற வார்த்தையை மட்டுமே பேசி வருகிறார். குறிப்பாக, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றால், மன அமைதி கிடைக்கும் என்றுதான் மதுரை மக்கள் கூறுவர். ஆனால், இந்த வேட்பாளர் சென்றால், பார்த்து அழுகை வருவதாக கூறுகிறார். அவர், கோயில் வரலாற்றைப் படிக்க வேண்டும். கடந்த 2018-ம் ஆண்டு, அதிமுக ஆட்சியில் கோயிலில் உள்ள வீரவசந்தராயர் மண்டபத்தில் தீ விபத்து ஏற்பட்டது. அதன்பிறகு அந்த மண்டபத்தை சீரமைக்க அவர்கள் ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திமுக ஆட்சி 2021-ல் அமைந்த பின்னர். ரூ.35 கோடி மதிப்பீட்டில் 20 அடி உயர 70 கல் தூண்கள் ஆந்திரா, தெலங்கானா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கற்கள் கொண்டுவரப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. வரும் செப்.17-ம் தேதி கோயில் குடமுழுக்கு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் தெரிந்துகொண்டு பேசவேண்டும் என பேசினார்.

# கோடை வெயில்: எலுமிச்சை விலை கிடுகிடு உயர்வு

**கோவை, ஏப்.13:**

கோவையில் கோடை வெயில் வாட்டி எடுக்கிறது. இதனால் எலுமிச்சைக்கு கிராக்கி ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக விலையும் உயர்ந்துள்ளது. தற்போது எலுமிச்சை கிலோ ரூ.160-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் மற்ற பழங்களின் விலையும் உயர்ந்துள்ளது.

உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பழங்களின் விலை விவரம் (கிலோவில்) வருமாறு:-

மாதுளை-ரூ.240, கருப்பு திராட்சை-ரூ.100, ஆரஞ்சு-ரூ.140, சாத்துக்குடி-ரூ.60, ஆப்பிள்-ரூ.280, தர்பூசணி-ரூ.30, முலாம்பழம்-ரூ.35, பப்பாளி-ரூ.32.

மேலும் காய்கறிகளின் விலை விவரம்(கிலோவில்) வருமாறு:-தக்காளி (நாடு) ரூ.20, தக்காளி (ஆப்பிள்) ரூ.22, சின்ன வெங்காயம்-ரூ.30, பெரிய வெங்காயம்-ரூ.20, மிளகாய்-ரூ.42, கத்தரிக்காய்-ரூ.44, வெண்டைக்காய்-ரூ.58, அவரை-ரூ.62, பாகற்காய்-ரூ.45. இந்த தகவலை வியாபாரிகள் தெரிவித்தனர்.

# சென்னையில் மீன் வெட்டும் தொழிலாளி கத்தியால் குத்திக்கொலை

**சென்னை, ஏப்.13:**

சென்னை தண்டையார்பேட்டை, வ.உ.சி. நகரை சேர்ந்த நரேஷ்குமார் (வயது 28), மீன் வெட்டும் வேலை செய்து வந்தார். இவர் மீது புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் கொலை முயற்சி வழக்கு உள்ளது.

நரேஷ்குமார் நேற்று முன்தினம் நள்ளிரவு அவரது வீட்டின் கதவை தட்டினார். அவரது தந்தை வெங்கடேசன் கதவை திறந்தபோது கழுத்து, இடுப்பு, மார்பில் படுகாயங்களுடன் இருந்த நரேஷ்குமார், ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த வெங்கடேசன் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் நரேஷ்குமாரை மீட்டு, ஆம்புலன்ஸ் மூலம் ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர், நரேஷ்குமார் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தார்.

இதுகுறித்து புதுவண்ணாரப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து நரேஷ்குமார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் நடத்திய விசாரணையில், மர்ம நபர்கள் நரேஷ்குமாரை கத்தியால் குத்தியதில் படுகாயமடைந்த அவர், வீட்டுக்கு வந்து ரத்த காயங்களுடன் கதவை தட்டியதும், பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற அவர், தந்தை கண் எதிரே உயிரிழந்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து போலீசார் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சி பதிவுகளை ஆய்வு செய்து கொலையாளிகள் குறித்தும், கொலைக்கான காரணம் குறித்தும் விசாரித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் நரேஷ்குமாரின் நண்பர்கள் 2 பேரை பிடித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# நாகை: ஆயக்காரன்புலம் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்

**நாகை, ஏப்.13:**





நாகை மாவட்டம் ஆயக்காரன்புலம் ஒன்றாம் சேத்தியில் பழமை வாய்ந்த காமாட்சியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதன்படி புனரமைப்பு பணிகள் நடைபெற்றன. இப்பணிகள் நிறைவு பெற்றதையடுத்து கடந்த 9-ம் தேதி அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜையுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. அதன்பின்னர் யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

யாகசாலை பூஜைகள் இன்று காலையில் நிறைவு பெற்று மகா பூர்ணாஹுதி நடைப்பெற்று, சிறப்பு தீபாராதனைக்கு பிறகு கடம் புறப்பாடு நடைபெற்றது. மங்கல வாத்தியம் முழங்க புனித நீர் அடங்கிய கலசத்தை சிவாச்சாரியார்கள் ஊர்வலமாக எடுத்து வந்தனர். பின்னர் கோவிலின் மேல் உள்ள கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் கோவிலில் உள்ளே உள்ள மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழாவில் பங்கேற்ற பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# சோழவந்தான் திரௌபதி அம்மன் கோவில் பூக்குழி திருவிழா: முகூர்த்தக்கால் நடப்பட்டது

**சோழவந்தான், ஏப்.13:**



மதுரை மாவட்டம் சோழவந்தான் திரௌபதி அம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும், சித்திரை மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் திங்கட்கிழமை அன்று திருவிழா கொடியேற்றம் நடைபெறும். அதன்பின் மகாபாரத கதைக்கேற்ப ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேடமணிந்து அம்மன் புறப்பாடு நிகழ்ச்சி நடத்தப்படும்.

இதே போல் இந்த ஆண்டு திருவிழாவிற்கான கொடியேற்றம் வருகிற 20 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதிலிருந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறும். விழாவிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், திருவிழாவிற்கான முகூர்த்தக்கால் நடும் விழா இன்று காலை நடைபெற்றது. விழாவை முன்னிட்டு கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. பின்னர், முகூர்த்தக்கால் கம்பத்தை மேளதாளத்துடன் எடுத்து வந்து வெளியே பூஜை செய்து நட்டனர்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளாக ஏப்ரல 28ஆம் தேதி துரியோதனன் படுகளம், திரௌபதி வேடம்புரிந்து அம்மன் புறப்பாடு நடைபெறுகிறது. 29ஆம் தேதி மாலை பக்தர்கள் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

# "ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுகின்றனர்" - வைகோ

**திருவாரூர், ஏப்.13:**



தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுவதாக வைகோ புகழாரம் சூட்டிப் பேசினார்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு, நன்னிலம் தொகுதி திமுக வேட்பாளர் முகமது முபாரக்கை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது திருவாரூர் திமுக வேட்பாளர் பூண்டி கலைவாணனும் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

அப்போது வைகோ பேசியதாவது: தஞ்சை சோழ மண்டலத்தை காப்பதற்காக, தமிழ்நாட்டின் வளங்களைப் பாதுகாப்பதற்காக நான் திமுகவை ஆதரித்து வாக்கு சேகரிக்க வந்திருக்கின்றேன். சமத்துவ, சகோதரத்துவ நாடாக தமிழகத்தை ஆண்ட ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும்.

பல மாநில முதல்வர்கள் கலந்துகொண்ட இந்தியா கூட்டணி கூட்டத்தில், தமிழக முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றிய திட்டங்களை பின்பற்ற விரும்புவதாக தெரிவித்ததாக அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர். அந்த அளவுக்கு திறமையான ஆட்சியை நடத்தி வருகின்றார். திராவிட இயக்கத்துக்கு எந்தக் கேடும் நேராமல் பார்த்துக் கொள்வது என் கடமை என்றார்.





வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528




## நலம் தரும் மருத்துவம்

# உங்க கண்கள் 'குளு குளு'ன்னு இருக்கணுமா?



1/11. கோடைகாலத்தில் உங்கள் கண்களை குளிர்ச்சியாகவும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்க 10 எளிய டிப்ஸ்.

2/11. குளிர்ந்த வெள்ளரிக்காய் துண்டுகளை கண்களின் மேல் 10-15 நிமிடங்கள் வைத்திருப்பது உடனடி குளிர்ச்சியைத் தரும்.

3/11. சுத்தமான பஞ்சை ரோஸ் வாட்டரில் நனைத்து கண்களின் மேல் வைத்து வர, கண்களின் எரிச்சல் குறையும்.

4/11. ஒரு நாளைக்கு 4 முதல் 5 முறை சுத்தமான குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுங்கள்.

5/11. புதிய கற்றாழை ஜெல்லியை கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் தடவினால் சூடு தணியும். கண்களுக்குள் படாமல் கவனமாக இருக்கவும்.

6/11. வெளியே செல்லும்போது UV கதிர்களிடமிருந்து பாதுகாக்க தரமான சூரியக் கண்ணாடி அணிவது அவசியம்.

7/11. உருளைக்கிழங்கைத் துருவி அதன் சாற்றில் பஞ்சை நனைத்து கண்களில் வைத்தால் கருவளையம் குறைவதோடு கண்களும் குளிரும்.

8/11. இரவு 7-8 மணி நேர ஆழ்ந்த தூக்கம் கண்களுக்குத் தேவையான ஓய்வைத் தந்து சூட்டைத் தணிக்கும்.

9/11. மொபைல் மற்றும் லேப்டாப் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளவும். 20-20-20 விதியைப் பின்பற்றுங்கள். ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் 20 அடி தூரத்தில் உள்ள பொருளை 20 விநாடிகள் பார்க்கவும்.

10/11. வைட்டமின் A நிறைந்த உணவுகளை உட்கொள்வது கண்களின் ஆரோக்கியத்திற்குப் பலம் சேர்க்கும்.

11/11. காய்ச்சாத குளிர்ந்த பாலில் பஞ்சை நனைத்து கண்களின் மேல் வைப்பது சிறந்த பலனைத் தரும்.

# ADHD உள்ள குழந்தைகளுக்கு இந்த ஒரு பயிற்சி செய்தாலே மூளை கம்ப்யூட்டர் மாதிரி வேலை செய்யும்!



இன்றைய காலகட்டத்தில் நிறைய குழந்தைகளுக்கு கவனக்குறைவு மற்றும் அதீத சுட்டித்தனம் இருக்கிறது. மருத்துவ உலகில் இதை ஏடிஎச்டி (ADHD) என்று சொல்வார்கள். இந்த பிரச்சனை இருக்கும் குழந்தைகள் ஒரு இடத்தில் அமைதியாக உட்கார மாட்டார்கள், சொல்வதைக் கேட்க மாட்டார்கள். இதற்கு பெரும்பாலும் மாத்திரைகள் தான் கொடுக்கப்படுகின்றன.

ஆனால், மாத்திரை கள் இல்லாமல், விளையாட்டுகள் மூலம் இந்த பிரச்சனையை சரிசெய்ய முடியுமா என பல பெற்றோர்கள் ஏங்குவதுண்டு. அதற்கான ஒரு சூப்பரான பதிலை தான் ஆராய்ச்சியாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளார்கள்.

வெறும் உடற்பயிற்சி மட்டும் போதாது!

பொதுவாக குழந்தைகள் துருதுருவென இருந்தால் அவர்களை ஓட விடுவது, சைக்கிள் ஓட்ட வைப்பது போன்ற உடற்பயிற்சிகளை செய்யச் சொல்வார்கள். இதனால், அவர்களின் அதீத ஆற்றல் குறைந்து கொஞ்சம் அமைதியாவார்கள். ஆனால், சமீபத்தில் ஆறு முதல் பத்து வயதுடைய சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை வைத்து ஒரு பெரிய ஆராய்ச்சி நடத்தினார்கள். அதில் ஒரு குரூப் குழந்தைகளுக்கு சாதாரண ஓட்டப்பயிற்சியும், இன்னொரு குரூப் குழந்தைகளுக்கு மூளைக்கும் உடம்புக்கும் சேர்த்து வேலை கொடுக்கும் புதிய வகை பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அதாவது ஓடிக்கொண்டே இருக்கும்போது திடீரென நிற்க சொல்வது, கட்டளைகளை மாற்றி மாற்றி கொடுப்பது என மூளையை குழப்பும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. பன்னிரண்டு வாரங்கள் தொடர்ந்து நடந்த இந்த டெஸ்ட்டில் ஒரு மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருந்தது.

### புதிய பயிற்சி!

சாதாரணமாக ஓடிய குழந்தைகளை விட, மூளைக்கும் உடம்புக்கும் சேர்த்து பயிற்சி செய்த குழந்தைகளுக்கு சூப்பரான ரிசல்ட் கிடைத்தது. மூளையை கசக்கி உடலையும் இயக்கும் போது, குழந்தைகளின் சுயக்கட்டுப்பாடு அதிகமாகி இருந்தது. அதுமட்டுமில்லாமல், எதையும் உடனே ஞாபகம் வைத்துக்கொள்ளும் திறனும் பல மடங்கு அதிகரித்ததை டாக்டர்கள் உறுதிசெய்தனர்.

இது ஏதோ சாதாரண பயிற்சி கிடையாது. உடம்பு அசையும் அதே நேரத்தில் மூளையும் விழிப்புடன் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுவதால், அவர்களின் கவனம் சிதறுவது முற்றிலும் தடுத்து நிறுத்தப்படுகிறது. இது அவர்களின் நினைவாற்றலை கூர்மையா க்குகிறது.

### பக்கவிளைவுகள் இல்லாத தீர்வு!

இந்த ஏடிஎச்டி பிரச்சனைக்கு தொடர்ந்து மாத்திரைகள் கொடுக்கும்போது சில நேரங்களில் தேவையற்ற பக்கவிளைவுகள் வர அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த புதிய மூளை-உடல் பயிற்சி முறையில் எந்த ஒரு கெடுதலும் இல்லை என்பது தான் இதில் உள்ள மிகப் பெரிய ஹைலைட்.



இது ஒரு சுவாரஸ்யமான விளையாட்டு போல இருப்பதால் குழந்தைகளும் எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் சந்தோஷமாக இதை செய்கிறார்கள். தங்களின் குழந்தைகள் விளையாடிக்கொண்டே தங்களை அறியாமலேயே குணமடைவதை பார்த்து பெற்றோர்களும் திருப்தி அடைந்துள்ளனர்.

ஏடிஎச்டி பிரச்சனை இருக்கும் குழந்தைகளை வெறும் ட்ரெட்மில்லில் ஓட வைப்பதில் எந்த ஒரு பெரிய பிரயோஜனமும் இல்லை. அவர்களுக்கு உடலும் மூளையும் இணைந்து செயல்படும் வகையிலான சுவாரஸ்யமான விளையாட்டுகளை சொல்லிக் கொடுப்பது தான் மிகச் சிறந்த தீர்வு. பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகளில் இந்த சிம்பிளான டெக்னிக்கை பயன்படுத்தினால், எந்த ஒரு மருந்தும் இல்லாமல் குழந்தைகளின் கவனக்குறைவை ஈஸியாக சரிசெய்துவிடலாம்.

# களத்தில் சந்திப்போம்



என் ஒவ்வொரு நாளின்
பெரும்பான்மையைக்
கழிக்கும்
எனது அந்தப்
போர்க்களத்தில்...
நான்கு சுவர்களுக்குள்
அரங்கேறும் சண்டைகள்;
பூக்களைப் போலச்
சொற்களை வீசிக்
கொள்வார்கள்,
நானோ... இடையில்
புகுந்து சமாதானம்
செய்வேன்.
யாரையும்
விட்டுக்கொடுக்காமல் -
எல்லோரையும்அணைத்துச்
செல்லும் ஒரு பாலமாய்
நானிருந்தேன்!
ஆனால், ஒரு கட்டத்தில் விவாதம்
திசைமாறியது; என் மீது ஒரு சிறு
குறைபாடு சுமத்தப்பட்டது.
அதுவாக எழவில்லை... திட்டமிட்டு
எழுப்பப்பட்டது!
உருவாக்கப்பட்டது... ஊதிப்
பெருக்கப்பட்டது!
காரணமானவர்களைக் கடந்து என்
கடமையைச் செய்தேன்,
ஆனால், அங்கே கூச்சல்களும்
சண்டைகளும் ஓயவே இல்லை.
எல்லோருக்காகவும் குரல்
கொடுத்தவன் நான்;
எனக்காக ஒரு குரலாவது ஒலிக்குமா
எனக் காத்திருந்தேன்.
சுற்றிலும் மௌனம்... ஒருவரும்
பேசவில்லை!
என் பக்கமிருந்த நியாயங்கள்
எல்லாம் - அங்கே
அநியாயமாய் அனாதையாகிக்
கிடந்தன. ஏன் ஒருவரும்
பேசவில்லை என
யோசித்தபோதுதான்
உறைக்கும் அந்த உண்மை
புரிந்தது! அவர்கள் அனைவரும் ஒரே
சமூகத்தைச் சேர்ந்தவர்கள்;
மிச்சமிருப்பவர்கள் அச்சமூகத்திற்கு
நிகரானவர்கள். அவர்களுக்குள்
சண்டைகள் வரும், சச்சரவுகள்
வரும், ஏன்... அடிதடியே கூட
நடக்கலாம்! ஆனால், அவர்களை
மீண்டும் ஒட்டி வைக்க
'சாதி' எனும் பசை இன்றும்
இருக்கிறது... என்றும் இருக்கிறது!
ஒட்டி உறவாடும் அந்தப் பசைக்
கூட்டத்தின் நடுவே,
யாராலும் ஒட்ட முடியாத...
உடைந்து போன கண்ணாடி
கோப்பையாய் நான் கிடந்தேன்.
சிதறிக் கிடக்கும் என் துண்டுகளைக்
கூட்டி அள்ளி "வெளியே போ" என
அவர்கள் வீசியபோதுதான் -
"சாதிகள் இல்லையடி பாப்பா" எனும்
பாரதியின் வரிகள்,
என் நெஞ்சில் ரத்தமாய் வழிந்து
கொண்டிருந்தன!
இருப்பினும்...
உடைந்து போன கண்ணாடி
ஒருபோதும் ஒன்று சேராது;
ஆனால், சிதறிப் போன உங்களை
ஒன்று சேர்க்க என்னைப்போன்ற
யாராவது ஒருவன்
இந்தக் களத்திற்கு எப்போதுமே
தேவைப்படுவான்.
அது மீண்டும் நானாகக் கூட
இருப்பேன்!
களத்தில் சந்திப்போம்!!

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

# என்னை மட்டும் கண்டுக்குறாங்களா?



தாத்தா,,,தாத்தா,,,என
கத்தியப்படி வந்தான் சிவகுரு
அவரோட பேரன்தான் அவன்
ஐந்து வயசுதான் ஆகுது
என்னடா என்பதுபோல
அன்னாந்து பார்த்தார்
"என்னான்னு கேளு தாத்தா"
"சரி என்ன சொல்லு"
"நான் அம்மாவெல்லாம்
அந்த தெருவுக்கு வீடு பாக்க
போனமில்ல
அங்கப்போயி அம்மாவும்
அப்பாவும் கிச்சன்
இருக்கா,,,ஹால்
இருக்கா,,,பாத் ரூம் வசதியா
இருக்கான்னு ஓடியோடி
பாக்குறாங்க,,,
"சரிடா அவங்களுக்கு
அதெல்லாம் வசதியா
இருந்தாதானே நல்லது
நான் கிராமத்திலையே
இருந்தவன் ஏதோ ஓன் பாட்டி
போய் சேர்ந்துட்டான்னு
நான் இந்த நகரத்தில
வந்து நரகத்தில கிடக்கேன்
அவங்க சின்னச்சிறுசுங்க
வசதியாதானே பாப்பாங்க,,,"
"தாத்தா கொலவிழும்
நான் அத சொல்லல
அவங்களுக்கெல்லாம்
வசதி பாக்குறாங்களே நான்
சின்ன பையன்தானே நான்
வீட்டுக்குள்ளவே முடங்கி
கிடக்கமுடியுமா வாசலில்
விளையாட இடமிருக்கா
பக்கத்தில ஸ்கூல் இருக்கா
இதெல்லாம் பாக்க
வேண்டாமா,,,, அம்மாக்கிட்ட
சொன்னா நீ சின்னபையன்
சொல்றத கேளுடான்னு
சொல்றாங்க நீங்களாவது
சொல்லுங்க. வீடு ஸ்கூலுன்னே
இருக்கமுடியுமா அந்த
வீடு குருவிக்கூடுமாதரி
இருக்கு அத சொன்னா
அதான் நல்லதான்
சொல்றாங்க,,,தாத்தா,,,தாத்தா
ப்ளிஸ் நீங்க சொல்லுங்க"
"நான் சொன்னாலும்
அதான்டா சொல்லுவாங்க
உன்ன சின்ன பையன்
ஒன்னும் தெரியாதுன்னு
சொன்னாங்க,,,,என்னை
உங்களுக்கு வயசாயிட்டு
ஒன்னும் புரியாது இன்னும்
பழைய பஞ்சாங்கத்த
பொரட்டாதீங்கன்னு
சொல்லுவாங்க எதுக்குப்பா
நமக்கு வம்பு ஏதோ குடுக்குறத
குடிச்சிட்டு
போற வழிய பாத்துக்கிட்டு
நான் கெடக்கேன் அது ஒனக்கு
பொறுக்கலயா,,,போடா போயி
வீட்டுப்பாடம் படி,,,"
"என்ன தாத்தா இப்படி
சொல்றீங்க
வரவர நான் சொல்றத
அம்மாவும் அப்பாவும்
காதுல வாங்குறதே இல்ல
தெரியுமா,,,?"
"அடாப்போடா நான்
சொல்றத மட்டும் காதுல
வாங்குறாங்களா,,,"
"என்ன தாத்தா நீங்க இப்படி
சொல்றீங்க நீங்களாவது பேசி
புரிய வப்பீங்கன்னு சொன்னா
நீங்க நழுவுறீங்களே போ
தாத்தா
நான் உங்ககூட
பேசமாட்டேன்"
"சரி போடா நீ மட்டும்தான்
அப்பப்போ பேசுவே நீயும்
பேசமாட்டியா இனிமேல் நான்
மௌனவிரதம்தான்,,,"
"சாரி தாத்தா நான் பேசுவேன்
சும்மா சொன்னேன் யாருமே
என்னை கண்டுக்குறது இல்ல
அதனால்தான் சொன்னேன்
தாத்தா"
"என்னை மட்டும்
கண்டுக்குறாங்களா என்ன,,,!"
இப்படி சொல்லிட்டு ஏனோ
தெரியல தாத்தா குனிந்தப்படி
உட்கார்ந்திருந்தார் அவர்
காலடியில் சொட்டுச்சொட்டாக
கண்ணீர்த்துளிகள்
விழுந்தப்படி,,,.

**-நாகை ஆசைத்தம்பி**
கோவை

# திருவிளையாடல் புராணம் 30



▪சிவ.முத்து
லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## மெய்க் காட்டிட்ட படலம்

இறைவான சொக்கநாதர் தனது அடியவரான சுந்தர சாமந்தனுக்காக சேனை வீரராக வந்து படை பலத்தைக் காட்டியதை விளக்கிக் கூறுகிறது.

அனந்தகுண பாண்டியனின் மகனான குலபூடண பாண்டியனின் ஆட்சியில் சுந்தர சாமந்தன் என்றொரு சேனாதிபதி இருந்தான். அவன் சொக்கேசரிடம், அவருடைய தொண்டர்களிடமும் நீங்காத பக்தி கொண்டு இருந்தான்.

அப்போது சேதிராயன் என்பவன் வேடுவர்களின் தலைவனாக இருந்தான். அவன் பல வெற்றிகளைக் கொண்ட செருக்கால் குலபூடண பாண்டியனிடம் பகைமை கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுக்க எண்ணினான்.

இச்சேதியை குலபூடண பாண்டியன் அறிந்தான். தனது சேனாதிபதியான சுந்தர சாமந்தனிடம் "நீ நமது நிதி அறையினைத் திறந்து வேண்டுமளவு பொருள்களை எடுத்துக் கொண்டு புதிதாக சேனைப் படைகளை திரண்ட வேண்டும்" என்று கட்டளையிட்டான்.

சுந்தர சாமந்தனும் நிதி அறையினைத் திறந்து தனக்கு வேண்டுமளவு பொருட்களை எடுத்துக் கொண்டான். அப்பொருட்களைக் கொண்டு சிவபெருமானுக்கு திருக்கோவிலும், ஆயிரங்கால் மண்டபமும் எடுத்தான்.

சிவனடியார்களுக்கு திருஅமுது செய்வித்து எஞ்சியவற்றை உண்டு வாழ்ந்து வந்தான். இச்சேதியை ஒற்றர் மூலம் குலபூடண பாண்டியன் அறிந்தான்.

சிறிது காலம் கழித்து அரண்மனைக்கு திரும்பி புதிய சேனைப் படை வீரர்களை வரவழைக்க பொய் ஓலைகளை எழுதி அனுப்பினான். ஆறுமாத காலம்வரை எந்த படைவீரர்களும் பாண்டிய நாட்டுக்கு வரவில்லை.

ஒருநாள் குலபூடண பாண்டியன் சுந்தர சாமந்தனிடம் "நாளை சூரியன் மறையும் முன்னர் ஓலைவிடுத்த சேனைப்படை வீரர்கள் அனைவரையும் மதுரைக்கு அழைத்து வரவேண்டும்" என்று கட்டளை பிறப்பித்தான்.

அரசனின் கட்டளையை கேட்ட சுந்தர சாமந்தன் அதற்கு சம்மதம் தெரிவித்தான். பின்னர் திருக்கோவிலை அடைந்து "எம்பெருமானே, அரசன் அளித்த நிதியினைக் கொண்டு சிவதொண்டு செய்துவிட்டேன். இனி எப்படி பெரும் சேனைகளை நாளை திரட்டிக் காண்பிப்பது?" என்று விண்ணப்பம் செய்தான்.

அதற்கு இறைவனார் "நாளைக்குச் சேனைவீரர்களோடு நாமும் வருவோம். நீ பாண்டியனின் அவைக்குச் சென்று என் வரவை எதிர்பார்ப்பாயாக" என்று திருவாக்கு அருளினார்.

மறுநாள் சோமசுந்தரர் தமது சிவகணங்களை வேலேந்திய படைவீரர்களாகவும், தாமும் ஒருகுதிரை வீரனாக கோலம் பூண்டார். தன்னுடைய இடப ஊர்தியை குதிரையாக்கி அதன்மேல் ஏறி தன் பரிவாரம் சூழ ஒற்றைச் சேவகராய் மதுரையை நோக்கி எழுந்தருளினார்.

சேனையின் வரவினைக் கண்ட சுந்தர சாமந்தன் குலபூடண பாண்டியனின் முன்சென்று வணங்கி சேனைகளின் வரவு பற்றி தெரிவித்தான்.

குலபூடண பாண்டியனும் மனம் மகிழ்ந்து கடைவாயில் வந்து அங்கிருந்த மண்டப அரியணையின் மீது வீற்றிருந்து சேனைப் பெருக்கத்தின் சிறப்பினை நோக்கினான்.

சுந்தர சாமந்தன் அணிவகுத்து நின்ற ஒவ்வொரு பகுதியினரையும் காட்டி அவர்கள் எந்த நாட்டினைச் சார்ந்தவர்கள் என்று வரிசைபட மெய்க் காட்டிக் கூறினான்.

முடிவில் பாண்டியன் ஒற்றைச் சேவகராய் நின்ற சோமசுந்தராக் கடவுளைக் காட்டி "அவர் யார்?" என்று கேட்டான். அதற்கு சுந்தர சாமந்தன் "இச்சேனைப் பெருக்கத்துள் அவரை யார் என்று அறிந்து எவ்வாறு கூறுவேன்?" என்றான்.

உடனே பாண்டியன் "அவரை அழைத்து இங்கு வருக" என்று கூறினான். சேவகரும் தன்அடியவரான சுந்தர சாமந்தனுக்காக பாண்டியனின் அருகே வந்தார்.

பாண்டியன் மகிழ்ந்து அவருக்கு நவமணிகளையும், பொன்னாடைகளையும் பரிசளித்தான். அதனைப் பெற்ற சோமசுந்தரர் தம் சேனை வெள்ளத்தில் புகுந்து மறைந்தார்.

அப்போது அரசன் முன் ஒற்றன் ஒருவன் வந்து "அரசே சேதிராயன் வேட்டைக்குச் சென்றபோது புலியால் அடித்து கொல்லப்பட்டு இறந்தான்" என்று கூறினான். அதனைக் கேட்ட பாண்டியன் சுந்தர சாமந்தனுக்கு நிறைய பரிசுகளை வழங்கினான். பின் "இந்த சேனைகளை அந்தந்த நாட்டிற்கு அனுப்பி வை" என்று கூறினான். சோமசுந்தரர் மனித வேடம் கொண்ட வீரர்களாகிய சிவகணங்களோடு மறைந்தருளினார்.

நடந்தவைகளை சுந்தர சாமந்தன் விளங்கிய பின், குலபூடன பாண்டியன் சேனையாகவும், ஒற்றை வீராகவும் வந்தது சிவகணங்கள் மற்றும் சொக்கநாதர் என்பதை அறிந்து கொண்டான்.

உடனே அவன் சுந்தர சாமந்தனிடம் "உனக்கு மதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுள் எளிதில் வந்து அருளினார் என்றால் எனக்கு அக்கடவுள் நீயே" என்று கூறி அவனுக்கு பல சிறப்புகளைச் செய்தான். பின்னர் சிறிதும் மனக்கவலை ஏதுமின்றி மதுரையை ஆண்டு வந்தான்.

இறைவனார் தம் அடியவர்களுக்காக எந்த வேடத்திலும் வந்து அருள் புரிவார்.

அடியவர்களுக்காக எதனையும் ஏற்றுக் கொள்வார் என்பதே மெய்க் காட்டிட்ட படலம் கூறும் கருத்தாகும்.



(தொடரும்)

# பராபவ ஆண்டு பிறப்பின் மாற்றம் என்ன?






தமிழ் ஆண்டுகளில் இதுவரை நடந்து வந்த விசுவாவசு ஆண்டு நிறைவடைந்து, அடுத்ததாக பராபவ ஆண்டு பிறக்க உள்ளது. இந்த ஆண்டு 2026 தமிழ் புத்தாண்டு ஏப்ரல் 14ம் தேதி பிறக்க உள்ளது. தமிழ் பஞ்சாங்கத்தின் 60 ஆண்டுகள் சுழற்சியில், பராபவ ஆண்டு என்பது 40வது ஆண்டாகக் கருதப்படுகிறது. இந்த ஆண்டு வெறும் கால மாற்றம் அல்ல. மன மாற்றம், சமூக மாற்றம், உலக மாற்றம் என பல அடுக்குகளில் தாக்கம் ஏற்படுத்தும் சக்தி கொண்டது என சொல்லப்படுகிறது.

பராபவ ஆண்டின் **பிறப்பு :**

தமிழ் புத்தாண்டு 2026 பிறப்பு 14.04.2026 (சித்திரை 1)

நட்சத்திரம் சதயம்

லக்னம் ரிஷபம்

நேரம் காலை 8.46

இந்த நேரத்தில் சூரியன் மேஷ ராசிக்குள் நுழையும் பிரவேசம் நடைபெறுகிறது. இதுவே தமிழ் புத்தாண்டின் துவக்கமாகும்.

பராபவ ஆண்டின் வெண்பா :

"மிக்க பராபவத்தின் மேதினியிற்
பின் மழையாம் தக்க
பசைக்கடழைக்குமே இது பலிக்காது
நான்கு வகைப்பல்லுயிர்க்கும் துன்பம்
கல்லிக்காதனவே கருது"

**பொருள் :**

பருவமழை தாமதமாக வரலாம் பருவம் தவறிய மழை, வெயில் கலந்த காலநிலை கால்நடைகளுக்கு பெரிய பாதிப்பு இருக்காது பால் உற்பத்தி அதிகரிக்கும் விவசாயம் சார்ந்த துறைகள் முன்னேறும் ஆனால்... மக்கள் வாழ்வாதாரத்தில் சில சவால்கள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் உலக சந்தை மாற்றங்கள் உலகளாவிய சுழற்சிகள் ஏற்படும்.

பராபவ ஆண்டில் வரப்போகும் மாற்றங்களும், செய்ய வேண்டியவையும்: மத்திய கிழக்கில் நடைபெறும் பதற்றங்கள் குறையலாம். ஆனால் முற்றிலும் மறையாது. புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அதிகரிக்கும். இணைய வழி மோசடிகள், பண ஏமாற்றங்கள் அதிகரிக்கும். அரசுத்துறைகளில் நவீன மாற்றங்கள் தோன்றும். புதிய நோய்கள், வைரஸ் தாக்குதல்கள் ஏற்படலாம். வீண் செலவுகள் அதிகரிக்கும் அபாயம், மனஅழுத்தம், குழப்பம் ஆகியவை ஏற்படும். அதனால் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். சேமிப்பை அதிகரிக்க வேண்டும். விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இந்த ஆண்டின் மிகப்பெரிய வரம், குரு பகவான் ராஜாவாக இருப்பது. இதனால் ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோயில் வழிபாடு உயரும். தியானம், தர்மம், யோகம் போன்றவை வளர்ச்சி பெறும்.

மனித மனத்தின் மாற்றம் :

இந்த ஆண்டு ஒரு பெரிய மன மாற்றத்தை தருவதாக அமையும் என சொல்லப்படுகிறது. வஞ்சகம் குறைய வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். நல்லதை உற்று கவனிக்கும் மனப்பாங்கு அதிகரிக்கும். உண்மையான உறவுகளின் மதிப்பு புரியும். ஆனால், அரசியல் நிலைத்தன்மையில் மாற்றங்கள், அமைதி குறையும் சூழல் உருவாகும் வாய்ப்பு ஏற்படலாம் என பஞ்சாங்கத்தில் கணிக்கப்பட்டுள்ளது.

**தினம் ஒரு தலைவர்கள்**

# விநாயக் தாமோதர் சாவர்க்கர் வரலாறு

சுதந்திர வீரர் விநாயக் தாமோதர் சாவர்க்கர் (28 மே 1883 26 பிப்ரவரி 1966)

விநாயக் தாமோதர் சாவர்க்கர், 1883 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதி, நாசிக் நகருக்கு அருகிலுள்ள பக்பூர் என்னும் கிராமத்தில் பிறந்தார். விநாயக் தனது இளமைப் பருவத்திலேயே தனது பெற்றோரை இழந்தார்.

விநாயக்கரின் தேசபக்தி உணர்வு, அவர் உருவாக்கிய 'மித்ர மேளா' (MITRA MELA) என்னும் அமைப்பின் வாயிலாக வெளிப்பட்டது. அந்த அமைப்பின் உறுப்பினர்களை, "முழுமையான அரசியல் சுதந்திரத்தை" அடைவதற்காகப் பாடுபடுமாறு அவர் ஊக்கப்படுத்தினார். 'மித்ர மேளா'வின் வாயிலாக, "இந்தியா சுதந்திரமானதாகவும், ஒருங்கிணைந்ததாகவும், குடியரசு நாடாகவும் திகழ வேண்டும்; இந்தியாவுக்கு ஒரு பொதுவான மொழியும் எழுத்துமுறையும் இருக்க வேண்டும்," என்று சாவர்க்கர் பிரகடனப்படுத்தினார். சாவர்க்கரும், "மித்ர மேளா" அமைப்பின் பிற உறுப்பினர்களும் 'சுதேசி'ப் பொருட்களை மட்டுமே பயன்படுத்தினர். 1905-ஆம் ஆண்டு பூனாவில் நடைபெற்ற தசரா விழாவின்போது, வங்காளப் பிரிவினைக்கு எதிரான தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், சாவர்க்கரும் அவரது நண்பர்களும் இணைந்து வெளிநாட்டுப் பொருட்களைக் குவித்துத் தீயிட்டுக் கொளுத்தினர். 1909-ஆம் ஆண்டில், இந்தியர்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பழிவாங்கும் விதமாக, வைஸ்ராய் கர்சனைக் கொல்லும் முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, சாவர்க்கரின் ஆதரவாளரான மதன்லால் திங்ரா, 'இந்தியா அலுவலக' அதிகாரியான சர் வில்லியைச் சுட்டுக் கொன்றார்.

நாசிக்கின் பிரிட்டிஷ் ஆட்சியரான திரு. A.M.T. ஜாக்சன் என்பவரின் கொலைத் தொடர்பாக, சாவர்க்கருக்கு 50 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது; இத்தண்டனையை அவர் அந்தமான் சிறையில் கழிக்க வேண்டியிருந்தது. அப்போது "வீர" சாவர்க்கருக்கு வயது வெறும் 27 மட்டுமே! 1911-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி சாவர்க்கர் அந்தமான் சிறையை அடைந்தார். அங்குள்ள கைதிகளின் வாழ்க்கை மிகவும் கொடுமையானதாக அமைந்திருந்தது. சாவர்க்கர் தன்னைத் தானே தனிமைப்படுத்திக்கொண்டு, தனக்கு அளிக்கப்பட்ட பணிகளை அமைதியாகவும் இயந்திரத்தனமாகவும் செய்து வந்தார். சிறைக்குள்ளேயே ஒரு நூலகத்தைத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெறுவதில் அவர் வெற்றி கண்டார். மிகுந்த முயற்சியுடனும் பொறுமையுடனும், எழுதப் படிக்கத் தெரியாத சக கைதிகளுக்கு அவர் கல்வியைக் கற்பித்தார். 1920-ஆம் ஆண்டில், வித்தல்பாய் படேல் சாவர்க்கரை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்தார். திலகரும் காந்தியடிகளும் கூட சாவர்க்கரின் விடுதலைக்காக வேண்டுகோள் விடுத்தனர். 1921-ஆம் ஆண்டு மே 2-ஆம் தேதி, அவர் மீண்டும் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டார்.



1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி, சாவர்க்கர் மகாசபையின் காவிக் கொடியுடன் இணைந்து தேசியக் கொடியையும் பெருமையுடன் ஏற்றினார். காந்தியடிகளைக் கொலை செய்யச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, 1948-ஆம் ஆண்டு பிப்ரவரி 4-ஆம் தேதி சாவர்க்கர் கைது செய்யப்பட்டார். காந்தியடிகளைக் கொலை செய்த கோட்சேவும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்றொருவரான ஆப்டேவும், இக்கொலையில் சாவர்க்கருக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று மறுத்துரைத்தனர். "மகாத்மா காந்தியடிகளின் கொடூரமான படுகொலையை" சாவர்க்கர் வன்மையாகக் கண்டித்ததுடன், அக்குற்றத்தில் தனக்கு எவ்விதப் பங்கும் இல்லை என்றும் மறுத்தார். 1949-ஆம் ஆண்டு பிப்ரவரி 10-ஆம் தேதி, சாவர்க்கர் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

"வீர" சாவர்க்கர் 1966-ஆம் ஆண்டு பிப்ரவரி 27-ஆம் தேதி காலமானார்.

# வசூல் குவிக்கும் 'LIK'... தமிழ்நாட்டில் முதல் நாள் வசூல் எவ்வளவு தெரியுமா?




விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'LIK' (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி). இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும், எஸ். ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர்.

நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து சென்னையில் இப்படத்தின் பிரீ-ரிலீஸ் நிகழ்ச்சி, படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சி மதுரை மற்றும் திருச்சியில் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து 'LIK' படம் நேற்று முன்தினம் முதல் திரையரங்குகளில் வெளியாக வெற்றிக்கரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

ரசிகர்களின் வரவேற்பை பெற்றுள்ள 'LIK' படம் வசூலையும் குவித்து வருகிறது. அதன்படி, தமிழ்நாட்டில் 'LIK' படத்தின் முதல் நாள் வசூல் 7.2 கோடி என பட தயாரிப்பு நிறுவனம் போஸ்டர் வெளியிட்டு தெரிவித்துள்ளது.



நடிகை பிரியா வாரியர் மலையாள சினிமாவில் வளர்ந்து வரும் நடிகையாக இருப்பவர். அவர் கண்ணடிக்கும் வீடியோ வைரல் ஆன நிலையில் அவர் அதிகம் பிரபலம் ஆனது குறிப்பிடத்தக்கது.

தமிழில் அவர் அஜித்தின் குட் பேட் அக்லீ படத்தில் நடித்திருந்தார். அதில் அவரது டான்ஸ் பெரிய அளவில் பேசப்பட்டது.

தற்போது ஹாங் காங் சென்று இருக்கும் பிரியா வாரியர் அங்கு ஹாட் உடையில் வலம் வந்த ஸ்டில்களை பாருங்க. ரசிகர்களை கவரும் புகைப்படங்கள்.

# 'கருப்பு' படத்தின் 3-வது சிங்கிள் குறித்து வெளியான அப்டேட்



நடிகர் சூர்யா மற்றும் இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜி கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "கருப்பு." பலமுறை இந்தப் படத்தின் ரிலீஸ் தேதி மாற்றப்பட்ட நிலையில், இந்தப் படம் அடுத்த (மே) மாதம் 14-ந்தேதி தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது.

டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகி உள்ள "கருப்பு" படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். கதாநாயகியாக திரிஷா நடித்துள்ளார். மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

கருப்பு திரைப்படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், சமீபத்தில் இந்தப் படத்தில் இடம்பெறும் "நாங்க நாலு பேரு" பாடல் வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து கருப்பு திரைப்படத்தின் அடுத்த பாடல் தமிழ் புத்தாண்டுக்குள் வெளியாகும் என்று படத்தின் இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜி தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், கருப்பு திரைப்படத்தின் மூன்றாவது பாடல் தமிழ் புத்தாண்டு தினமான வருகிற 14-ந்தேதி அன்று வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா வருகிற 26-ந்தேதி நடைபெற உள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தீபாவளி ஸ்பெஷலாக கருப்பு படத்தின் முதல் பாடலான God Mode வெளியானது குறிப்பிடத்தக்கது.



தெலுங்கு சினிமாவில் முக்கிய நடிகையாக இருப்பவர் பிரக்யா ஜெய்ஸ்வால். அவர் தாராள கவர்ச்சி காட்டி ரசிகர்களை அதிகம் கவர்ந்து வருகிறார். கடைசியாக அவர் அகண்டா 2 படத்தில் நடித்திருந்தார்.

தற்போது பிரக்யா ஜெய்ஸ்வால் மாலத்தீவுக்கு ட்ரிப் சென்று இருக்கும் நிலையில் அங்கு பிகினியில் வேற லெவல் கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கிறார்.

அந்த ஹாட் புகைப்படங்கள் இணையத்தில் படுவைரல் ஆகி இருக்கிறது.

# ரீ- ரிலீஸ் ஆகும் 'அமர்க்களம்'



தமிழில் வெளியாகி வெற்றி பெற்ற முன்னணி நடிகர்களின் படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து மீண்டும் ரிலீஸ் செய்து வருகிறார்கள். ஏற்கனவே ரஜினியின் 'பாட்ஷா', 'பாபா', கமல்ஹாசனின் 'நாயகன்', 'வேட்டையாடு விளையாடு', 'ஆளவந்தான்', விஜயகாந்தின் 'கேப்டன் பிரபாகரன்', விஜய்யின் 'கில்லி', 'சச்சின்', சூர்யாவின் 'வாரணம் ஆயிரம்', தனுசின் 'யாரடி நீ மோகினி', சேரனின் 'ஆட்டோகிராஃப்' உள்ளிட்ட பல படங்கள் மீண்டும் திரையிடப்பட்டன.

இந்த வரிசையில், அஜித்- ஷாலினி இணைந்து நடித்த 'அமர்க்களம்' மீண்டும் வெளியாக உள்ளதாக இயக்குநர் சரண் ஏற்கனவே தெரிவித்து இருந்தார். ஆனால் எந்த தேதியில் வெளியாகும் என அறிவிப்பு வெளியாகவில்லை.

# 'ஜன நாயகன்' கசிவு.. தங்களுக்கு தொடர்ப்பில்லை என தணிக்கை வாரியம் விளக்கம்



அதன் விளக்கத்தில், ஜன நாயகன் படம் மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியம் மூலம் கசிந்துவிட்டதாக வெளியாகும் செய்திகள் அடிப்படையற்ற தவறான தகவல்.

திரைப்பட சான்றிதழுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து படங்களுக்கும் பாதுகாப்பான KDM முறையை சிபிஎப்சி பயன்படுத்துகிறது. படத்திற்கான அணுகல் கடவுச்சொல் பாதுகாப்புடன் இருக்கும். KDM முழுமையாக தயாரிப்பாளர், இயக்குநரிடமே இருக்கும். சரியான KDM இல்லாமல் அந்தப் படத்தை அணுகவோ அல்லது பார்க்கவோ முடியாது.

ஜன நாயகன் திரைப்படத்தின் டிஜிட்டல் சினிமா பேக்கேஜ் மார்ச் 17 அன்று மும்பையில் விண்ணப்பதாரரிடம் உரிய ஒப்புதல் பெற்று ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அது அவர்களிடமே உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிக்பாஸ் பிரபலம் மீது தாக்குதல்: கானா வினோத், புகழ், மாகாபா ஆனந்த் மீது போலீஸில் புகார்!



விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் குக் வித் கோமாளி நிகழ்ச்சியின் 7வது சீசன் ஏப்ரல் 4 அன்று தொடங்கியது. பிரபலமான இந்த நிகழ்ச்சியில் இந்த முறை திருமணமான ஜோடிகளும் அவர்களுடன் இணைந்து கோமாளிகளும் சமைக்கும் விதமாக நிகழ்ச்சி நடைபெறுகிறது.


இந்த நிலையில், நிகழ்ச்சியின் படப்பிடிப்பின் போது இந்த வாரம் ஒரு பரபரப்பான சம்பவம் நடைபெற்றதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிக்பாஸ் பிரபலமும் பாடகருமான கானா வினோத், விஜய் டிவி புகழ், மாகாபா ஆனந்த் ஆகிய 3 பேரும் இணைந்து பிக் பாஸ், இன்ஸ்டாகிராம் மூலம் பிரபலமான திவாகரை குக் வித் கோமாளி நிகழ்ச்சி அரங்கில் வைத்து அடித்ததாக அவர் காவல் நிலையத்தில் புகாரளித்துள்ளார்.

இதுபற்றி திவாகர் வெளியிட்ட விடியோவில், "குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் ஏப்ரல் 10 அன்று கலந்துகொண்டேன். அங்கு கானா வினோத் என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் தகாத வார்த்தகளில் பேசினார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பேசியதால் கானா வினோத், புகழ் இணைந்து என்னை அடித்தனர். இவர்களுடன் மாகாபா ஆனந்த் குடிபோதையில் என்னை இரும்பு கம்பியால் அடித்தார். அவர் அடித்ததில் என் காலில் ரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. இதனால், ஈவிபி ஃபிலிம் சிட்டி அருகே உள்ள காவல் நிலையத்தில் இதுபற்றி புகாரளித்துள்ளேன்" என்று தெரிவித்தார்.


Happy
Anniversary
ரஷீத் கான் - ராணி



WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Happy
Birthday!
Wishing you the
happiest and brightest
day ever! May you have
all the happiness your
heart can hold
KALAIVANI


RS.999/-
Best MLM
Software
Development
Company
In India
At Easy EMI
9853719337
7436914247
www.mlmperfect.com


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET,
ALWARPET CHENNAI


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


WANTED
MARKETING EXECUTIVES
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009






கல்வித்கு கடன் கொடுப்பது
அறிவு வட்டிக்கடையில்
அடகு வைப்பது....!

நுழைவு தேர்வு வைப்பது
வேலை கிடைக்கும் என்ற
நம்பிக்கையை மட்டும்
கொடுப்பது...!

குடிசையில் வாழ்ந்தாலும்,
மாளிகையில் வாழ்ந்தாலும்
உணவு விவசாயி
கொடுப்பது....!

விலையில்லாத வீட்டை
கொடுப்பது நிலையான
வாழ்வை சிதைப்பது...!



உணவால் பல உயிர்
வாழும்... உழவனால்
இந்த பூமியே வாழும்,
வளரும்....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## உழைப்பாளர் தினம் !

தினம் தினம் உழைப்பவன் உழைப்பாளி !
தித்திக்கும் உலகை உருவாக்கியவன் உழைப்பாளி !

தினங்கள் பல் வந்தாலும் எல்லாவற்றிலும்
உன்னத தினம் உழைப்பாளர் தினம் !

வியர்வையை மதிக்கும் விவேக்மான தினம் !
உழைப்பைப் போற்றும் ஒப்பற்ற தினம் !

ஆண்டு முழுவதும் தினங்கள் வந்தாலும்
ஆண்டாண்டாக மதிக்கும் தினம் உழைப்பாளர் தினம்!

இவ்வுலகின் வளர்ச்சி உழைப்பாளியின் முயற்சி !
இப்பூவுலகின் மலர்ச்சி உழைப்பாளியின் முயற்சி !

உலகில் உழைப்பவன் மட்டுமே மனிதன் !
உலகில் உழைக்காதவன் மனிதன் அன்று !

உழைக்காமல் உண்பவன் திருடன் என்று அன்றே !
உரைத்தார் உயர்ந்த தேசப்பிதா காந்தியடிகள் !

மரத்திற்கு அழகு பூக்கள் பூப்பது !
மனிதனுக்கு அழகு உழைத்து வாழ்வது !

உலகில் மேன்மையானது உடல் உழைப்பு !
உலகில் மென்மையானது மூளை உழைப்பு !

உடையில் இருக்கும் ! உள்ளத்தில் இருக்காது கறை !
உடல் நிறம் கருப்பு உள்ளமோ வெள்ளை !

கள்ளம் கபடம் அறியாதவர்கள் உழைப்பாளிகள் !
கற்கா விட்டாலும் பண்பாளர்கள்
உழைப்பாளிகள் !

பிறந்ததன் பயன் உழைப்பில் உள்ளது !
பிறந்தோம் இறந்தோம் என்பதில் என்ன உள்ளது !

உண்ண உணவு தந்தவன் உழைப்பாளி !
உடுக்க உடை தந்தவன் உழைப்பாளி !

வசிக்க வீடு தந்தவன் உழைப்பாளி !



ரசிக்க மலர் தந்தவன் உழைப்பாளி !

மண்ணை சிலையாக்கியவன் உழைப்பாளி !
பொன்னை சிலையாக்கியவன் உழைப்பாளி !

கல்லை சிலையாக்கியவன் உழைப்பாளி !
மரத்தை சிலையாக்கியவன் உழைப்பாளி !

வண்ணத்தை ஓவியம் ஆக்கியவன் உழைப்பாளி !
எண்ணத்தை விதையாக்கிவன் உழைப்பாளி !

உழைப்பாளி இன்றி உலகம் இல்லை !
உழைப்பாளி இன்றி உயர்வு இல்லை !

உழைப்பாளி இன்றி வாழ்க்கை இல்லை !
உழைப்பாளி இன்றி வசந்தம் இல்லை !

வெயில் மழை பாராது உழைப்பவன் !
வெந்தசோற்றைத் தின்று வாழ்பவன் !

தொழுவதை விடச் சிறந்தது உழைப்பு !
பூசாரியை விடச் சிறந்தவன் உழைப்பாளி !

வியர்வை காயும் முன் கூலியைக் கொடு !
வேதனை வராமல் உழைப்பாளியை காத்திடு !

வியாபாரியிடம் பேரம் பேசினால் தவறு அன்று !
உழைப்பாளியிடம் பேரம் பேசினால்
தவறு !



போற்றுவோம் !. உழைப்பைப்
போற்றுவோம் ! போற்றுவோம் !
உழைப்பாளிகளைப் போற்றுவோம் !

**கவிஞர் இரா .இரவி !**

அடர் வண்ண நீரோவியம்
போல் பறித்து வந்த கீரை
மேஜையின் மீது!


தண்டு வைத்தொன்று,இலை
வைத்தொன்று என
நிறமிகளின் இணையிழைவு
தாங்கி!

வரைகலையின்
துவக்கப்புள்ளியை
அப்பொழுதுதான் எட்டித்
தொட்டிருந் தவனின் பிசிறா
ஓவியமாய்!

ஆண்டுகள் கழித்து கைவரப்
பெற்ற உழைப்பும்,ஒத்துழைத்த
உடலும் சாத்தியமாக்கின
நடுகையையும்,
விதைத்தலையும்!

உழவும் உழவுக்கருவிகளுமாய்
உழைப்புடன் உயிர்
ஒட்டிக்கிடந்த காலமது!
கண் பார்த்ததை கை
செய்தது.கை செய்தது
உயிர் கொண்டது,உயிர்
கொண்டது வியர்வை பிசைந்த
விளைச்சலானது!

அன்றெழுதப்பட்ட
அம்மண்ணின்
விளைச்சல்
இப்பொழுது காலன்
கையளித்த மென்



மந்திரமாய்!

பக்கவாட்டு வெளியை
பண்டுதம் பார்த்த
நாளிலிருந்து இன்று
வரை தோட்டமாய்
தந்து கொண்டிருக்கிற
துதான்ஏதாவதொன்றை!

மேஜையின் மீதிருந்த
கீரைக்கட்டை தொடுகிறேன்,
குழந்தையை தொட்ட
வாஞ்சையுடன்!அதனருகிலிருந்த
கைபேசி சிணுங் குகிறது,
பேசுகிறேன்திரையொலிர்வு
பார்த்து!

என் கைபிடித்து தோட்ட
மழைத்து செல்கிறது
கீரைக்கட்டு!

அங்கு வேர்விட்டிருந்த
என்னை காற்றின்
அலைகளில் மிதக்கச் செய்து
தூரங்கொண்டு இட்டுச்
செல்கிறது!

மரபிற்கும் நவீனத்துக்குமான
இடைவெளியில் என்
பயணம்!

பழக்கப்படுத்திக்கொள்கிறேன்,
மரபினனாயும் நவீனனாயும்
வாழ!

**விமலன்.**



## பாதுகாப்பான தாய்மை!

நேரிசை வெண்பா!

கர்ப்பிணிப்பெண்களுக்குக்
காட்டு கனிவினை

அர்ப்பணித்து வாழ்ந்திடும்
அன்னாரின்.. கர்ப்பமுறுப்

பேறுகாலம் பீடுறக்காணவே
தாய்மையைக்கூறவேண்டும்
நல்லதாகக் கூறு!

தாய்மைக்குப்பாதுகாப்பு
தக்க மருத்துவம்

சேய்க்கும் நலவுதவி
செம்மாந்து.. ஏய்த்திடா

வண்ணம் எழிலுறுத்
திட்டங்கள் தந்தேதான்

கண்ணாகத்தாய்மையைக்கா!

## செல்லப் பிராணிகளைக் காப்போம்!

அறுசீர் மண்டிலம்.

செல்லப் பிராணிகளை
வளர்ப்போம் சீராய்
அவற்றைத்தான் காப்போம்
நல்ல வளந்தன்னைத்
தருவோம் நாளும்
நலந்தன்னைக்கொடுப்போம்!
வல்ல நடைப்பயிற்சி
செய்வோம்வளர்த்து
ஆளாக்கி
மகிழ்வோம் சொல்லும்
பொறுப்பாகக்காண்போம்
சூழல் தம்மையுமே ஏற்போம்!

அசைக்க முடியாத அன்பை
அருளாய்க் கொடுத்தேதான்
காண்போம் திசைகள்
எட்டிலுமே வளர்ப்போம்
தேர்ந்தே வளர்த்தேதான்
மகிழ்வோம்! இசைந்தே
பிராணிகளைச்சேர்ப்போம்
ஈடில் வசதிகளால்
பார்ப்போம் பசையாய்ச்
செல்லமுடன் காப்போம்
பண்பாய்ப் பிராணிகளைச்
சேர்ப்போம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.



## தூது சொல்..

காதலுக்குத் தோழி தூது செல்வாள்..
அந்த காதலிக்குத் தென்றல் தூதுசெல்லும்!

பாண்டவர்க்குப் பார்த்தன் தூது
சென்றான்! அந்தப் போர்க்களத்தில் அவனே..
கீதை சொன்னான்!

இராமனுக்கு அனுமன் தூது சென்றான்..
அந்த ஜானகிக்கு அவனே ஜீவன்
தந்தான்!

மேகத்துக்கு நிலவு தூது செல்ல.. காதல்
மோகத்துக்கு தென்றல் தூது செல்லும்.!

பூமிக்குப் பூக்கள் தூது சொல்ல.. அந்தப்
பூக்களுக்கு வண்டு தூது செல்லும்..

காதலுக்கு கவிதை தூது செல்ல..உயிர்க்
காவியமே காதலுக்கு பாடல் சொல்ல..

வீணைவழி ராகங்கள் தூது சொல்ல..
விழியின் வழி காதல் தூது செல்லும்!

தூது செல்லும் பண்பாடு தமிழர் மாண்பு..
அதில் காதலுண்டு வீரமுண்டு
கலவியுண்டு..



தூது சொல்ல பறவைகளும் பறந்ததுண்டு..
சங்க காலப் பாடல் தூதை புகழ்ந்ததுண்டு.!

**வே.கல்யாண்குமார்.**

## பொருளும் அருளும்

பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லை,

அருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லை,

பொருள் வாழ்வின் அடிப்படை,
அருள்ஆன்மாவின் மேன்மை!

பொருளும் அருளும்
வாழ்வின் இரு கண்கள்!

பொருள் உலகியல் வாழ்வை
இனிமையாக்கிறது,
அருள் ஆன்மீக வாழ்வை
முழுமையாக்குகிறது !

வியர்வை சிந்திச் சேர்க்கும்
பொருள், வறுமை நீக்கி
வாழ்வு தரும்!

உள்ளம் கனிந்து காட்டும்
அருள் உயிரைத் தழுவி
அமைதி தரும்!

பொருள் தேடி அலைந்தால்
சுகம் உண்டு, அருள் நாடி
நின்றால் நிலை உண்டு!

காசு இருந்தால் கவலைகள்
குறையும், கருணை
இருந்தால் கடவுள்
தெரிவார்!

இம்மைக்கு வேண்டும்
செல்வம் எனும்
பொருள்,

மறுமைக்கு வேண்டும் அன்பு
என்னும் அருள்!

பொருளும் அருளும்
வாழ்வின் தத்துவ தராசு!

காசும் பணமும் கையில்
இருந்தால் , கால்கள் நடக்கும்
புவிப்பரப்பில்,பாசமும்
கருணையும் நெஞ்சில்
இருந்தால், உயிர்கள்
துடிக்கும் உன் முதுகில்!

பொருள் என்பது உடல்
போன்றது, அருள் என்பது
உயிர் போன்றது !

உடல் இல்லையேல் உயிர்
இல்லை!

மண்ணைத் தேடி அலைந்தால்
பொருள், விண்ணைத் தேடி
கனிந்தால் அருள்!

பொருள் பசி ஆறும்
அருளால் விதி மாறும் !

பொருள் உன்னை
காப்பாற்றும் ஒரு ஆயுதம்,
அருள் என்பது உன்னை
மேம்படுத்தும் ஒரு ஆதாரம் !



இவை இரண்டும்
இணையும் புள்ளியில்
தான் மனிதன்
மகானாகிறான்!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

# நூல் விமர்சனம்

உயிரில் கலந்த சொற்கள்
மீ.யூசுப் ஜாகிர்
பக்கம் 142, விலை ரூ.150
மௌவல் பதிப்பகம்
வலங்கைமான், திருவாரூர்.
நூல் வேண்டுவோர்:
7010219221




உயிரில் கலந்த சொற்கள்
உணர்வில் கலந்த பாக்கள்

கவிஞர் யூசுப் ஜாகிரின் மூன்றாவது கவிதைத்தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ள "உயிரில் கலந்த சொற்கள்" கவிதைத் தொகுப்பு அவரது மூன்றாவது முத்தான நூல். ஏற்கெனவே "நினைவுகளின் நதி", "நீ உதிர்த்த சிறகின் பறவை" ஆகிய இரு கவிதைத் தொகுப்புகள் மூலம் இளங்கவிஞர்களின் படை வரிசையில் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்ற கவிஞர் யூசுப் ஜாகிர் மூன்றாவது கவிதைத் தொகுப்பின் மூலம் மேலும் சிறப்பு பெறுகிறார் எனின் அது மிகையன்று.

பொதுவாகவே இளைஞர்களின் மனம் கவிதை மனம். காதல்வயப்படாத இளைஞர்களும் உண்டோ எனின் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். கவிஞர் மட்டும் விதி விலக்காக என்ன? கடந்த இரு கவிதைத் தொகுப்புகள் மூலம் இவரது காதல் கவிதைகளை வாசித்த அனுபவத்தில் இத்தொகுப்பிலும் பெரும்பான்மையான காதல் கவிதைகளே வலம் வருவதை உணர முடிகிறது.

கவிதைகளைப் படைக்க முனையும்போது அழகியல், உவமைகள், தேர்ந்த சொற்கள் ஆகியவற்றுக்கு இவர் எந்த சிரமமும் சந்திக்காதவர். இயல்பாக அணி வகுக்கும் சொற்கள் வாசகர்களைக் கட்டிப் போடுகின்றன. ஆகவேதான் அவை உயிரில் கலந்த சொற்களாக அழுத்தமும் ஆளுமையும் பெறுகின்றன.

காதல் வயப்பட்டு காயப்பட்டு தவிப்பவர்கள் அனேகம் பேர் ஆண்களிலும் உண்டு. பெண்களிலும் உண்டு. கவிஞரும் காதல் வயப்பட்டு காயப்பட்டு எழுதியதால்தான் அவரது கவிதைகள் உயிர்ப்புடன் உலவுகின்றன என எண்ணத் தோன்றுகிறது. எதையுமே அனுபவத்தில் படைக்கும்போதுதான் யதார்த்தக் கவிதைகளாக அர்த்த அடர்த்தி மிக்கதாக அமைகின்றன.

"அன்பால் காயப்பட்டு தனிமையில் தவிக்கும் ஒருவரின் மீது அன்பை செலுத்தினால் வாழும் போதே கடவுளாவாய்" எனக் குறிப்பிடும் "இறை" தலைப்பிலான கவிதை ஒன்று போதும் சான்றுக்கு. "கைகளை கிடைமட்டமாய் உயர்த்திக்கொள் மனம் போதும் பறப்பதற்கு சிறகுகள் கட்டாயமில்லை" எனும் கவிதைக்கான ஓவியத்தில் கைகள் சிறகு முளைத்தபடி இல்லாமல் இருந்திருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

மிக நெருக்கமானவர்கள் நெருக்கமற்றுப் போகும்போது கவிஞரின் கவிதையைப் படித்துத் தான் உணர முடியும். இதோ:- "யார் இல்லாமல் ஒருநாள் கூட வாழ முடியாதென்று மனம் நினைத்ததோ அவர்களையே யாரோ போல கடந்து போகவும் வைக்கிறது.

அனேகமாக பெரும்பாலான இளைஞர்களுக்குக் கீழ்க்காணும் கவிதை அனுபவமாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. "மிதிவண்டியில் உன் தெருவுக்குள் பிரவேசிக்கும் போது உன் வீட்டை நோக்கி அனிச்சையாய் தலை திரும்புவது காதல் விசையா" ஒரு கவிதையில் கவிஞர் கையாண்டுள்ள நுட்பம் அசாதாரணமானது. எனக்கு மட்டுமல்ல. உங்களுக்கும் கூட அப்படித்தான் இருக்கும்.

"என்னை உனக்கு புரிய வேண்டும் என்று தான் உன்னைத் தவிர்க்கிறேன் உன்னைத் தவிர்ப்பதால் பிடிக்கவில்லை யென்று தவறாகவே நினைக்கிறாய், உன்னை தவிர்ப்பதற்கு நான் தவியாய் தவிப்பது புரியாமல்." பல கவிதைகளை எளிதாகக் கடந்து போக முடியவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் இதோ:-

"வார்த்தைகள் எல்லாமே வீண் என்று தெரிந்த பிறகுதான் மௌனத்தைப் போர்த்திக் கொண்டேன்.வார்த்தைகளால் வாளெடுத்து வீசுகிறாய் மௌனத்தின் போர்வையை இம்மியும் அசைக்கவில்லை இறுதியில் வார்த்தைகள் தொலைந்து நீயும் மௌனத்தின் போர்வையொன்றை எடுத்துச் செல்கிறாய்" உண்மையான காதலை இதைவிட எப்படிக் கூறிவிட முடியும்? "காதலுக்கும் நேசங்களுக்கும் பிரியமானவர்களுக்கும் எப்போதும் ஒப்பனைகள் தேவைப் படுவதில்லை" யாரும் எழுதாத பொருளாகக் தெரிகிறது இக்கவிதை. பாருங்களேன்.. பற்கள் தானாய் விழுந்து தானாய் முளைக்கும் பால்ய காலங்கள் எவ்வளவு வரமென்பதை மருத்துவமனையில் விலை கொடுத்து பிடுங்கி எறியப்படும் ஒற்றை சொத்தைப் பல்லின் சாபம் உணர்த்தி விடுகிறது."

சில கவிதைகள் தத்துவங்களை உதிர்க்கின்றன. "ஒன்றை இழந்து ஒன்றை பெறுவதற்கு துணிந்து விட்டால் இழப்பு ஒரு போதும் வலிக்காது" "இழப்பதும் மீள்வதும் தானே பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயான வாழ்க்கை" மாற்று சிந்தனையை கீழ்க்கண்ட கவிதையின் வினா மூலம் முன் வைக்கிறார் கவிஞர் யூசுப் ஜாகிர்.

"இழந்துவிட்ட யாரோ ஒருவருக்காக கைப் பிடித்து நடக்கவும் தோள் சாய்ந்து அழவும் காத்திருக்கும் ஒருவரை நிராகரிப்பது எப்படி சரியாகும்" தனிமை குறித்து சில கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று:- "நான் தனிமையை அணிந்து கொள்ளும்போது உன் நினைவுகளும் என்னை சேர்த்து உடுத்திக் கொள்கிறது" அற்புதமான உவமைக்கு எடுத்துக்காட்டாக...

"அறிமுகமில்லாதவருக்கு தாயின் முந்தானையில் ஒளிந்துகொண்டு மெல்ல எட்டிப்பார்க்கும் குழந்தை யாய் மேகங்களுக்கு இடையில் நிலா" இறுதியாக, "சொற்கள் வெறும் சொற்கள் இல்லை உயிரும் துடிப்பும் உள்ள சிறு உயிர்கள்" என கவிஞர் தமது நூல் தலைப்புக்கான கவிதையில் குறிப்பிடுவதையே இந்நூலின் சொற்களாக சிகரம் பெறுகின்றன எனலாம். நேர்த்தியான படங்களுடன் அச்சிட்ட மௌவல் பாராட்டுக்குரியது.

கவிஞருக்குள்ள சொல்லாற்றலின் மூலம் எளிய மக்களின் வாழ்க்கைப் பாடுகளைப் படம் பிடித்துக் காட்டலாமே.

**கவிஞர் எழுத்தாளர்.**
**பெரணமல்லூர்**
**சேகரன் 9442145256**




## தேர்தல் கூத்து

ஊர்உலகம் என்னத்தான் பேசினாலும்
உடல்கூசும் சொரணைசூடு இல்லார்போல
பேர்சொல்லித் திட்டியவர் ஏசியோர்கள்
பெரும்பகைவர் போ2நடந்து கொண்டவர்கள்
பார்வைகளைப் பரிமாறி நட்பு கூறிப்
பாசமுடன் சோதரராய் அணைத்துக் கொண்டு
தேர்தலுக்கு முன்பாகக் கட்சிகள்தாம்
தேவையான கூட்டணிகள் அமைத்துக் கொள்வர் !



தேர்தலென அறிவிப்பு வந்து விட்டால்
தேவையான இடங்களுக்குப் பேசிப்பேசி
யார்யாருக் கெந்தெந்த தொகுதி யென்று
யாவருமே சமரசமாய்ப் பிரித்துக்கொள்வர் !
தேர்தலன்று அன்பளிப்பு பொருள்கள் என்று
தேடியவர் வீடுசென்று கொடுத்துக் கையில்
ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக
அவர்கள்தம் வாக்குகளை வாங்கிக் கொள்வர் !

முடிவுகள்தாம் வந்தாட்சி அமைக்கும்போது
முன்பின்னாய்ப் பதவிகளைப் பிரித்துக்கொள்வர்
முடிவெடுக்கும் திட்டங்கள் தொகையை எல்லாம்
முறையாகப் பங்குபோட்டு எடுத்துக் கொள்வர் !
அடிமாட்டு விலைக்கன்று வாக்களித்தோர்
அடிமைகளாய் நின்றிப்பர் அவர்கள் முன்பு
அடிப்பட்டும் புத்தியின்றி மீண்டும் மீண்டும்
அவர்களுக்கே வாக்களிப்பர் விட்டில் போன்றே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**






## நீ ஒரு கவிதை !

'ஒரு கவிதை எழுது
என்றேன் ' அவளிடம் !
'கவிதை எழுதத் தெரியாது
' என்றாள் அவள் !
'நீ ஒரு ஆரம்ப புள்ளி
வைத்தாலே அது கவிதை
தான் என்றேன் ' !

புல்லாங்குழலை கொடுத்து
உதட்டில் வைத்து இசைக்க
சொன்னேன்... 'தெரியாது
' என்றாள். ! 'புல்லாங்குழல்
உன் உதட்டை தொட்டாலே
அது இசை தான் !"
என்றேன்

இப்போது அவள் முறை...
'உனக்கு பாட தெரியுமா.. '
என்றாள்... 'தெரியாது '
என்றேன் !

"நான் உன்னை விட்டு
பிரிந்து விட்டதாய்
நினைத்துக் கொள் தானாக
பாடுவாய் என்றாள் !'

உண்மை தான்....

இப்போது அவளை
நினைத்து பாடிக்



கொண்டுதான்
இருக்கிறேன்...
' முகாரி
ராகம் '

**எம்.பி. தினேஷ்.**
கோவை

## கெடுதலைச் செய்யாதே கேள்!

நேரிசை வெண்பா!

நற்பண்பில் தாழ்ந்து
நயன்மை இழக்காதே!
பொற்புடன் கண்டு
பொலிவாக.. பற்றாய்
அடுத்தவன் வாழ
வழிவிட்டமையாமல்
கெடுதலைச்செய்யாதேகேள்!

இன்னாத செய்தார்க்கும்
ஈங்கே இனியவை
அன்பாகச்செய்திடு!
ஆளுமைப்..பண்பாய்ப்
படுந்துன்பம்பாங்காய்ப்
பிறருமே காணாக்
கெடுதலைச்செய்யாதேகேள்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.

றொம்ப நேரமாய்ச்
சுற்றிக் கொண்டிருந்தது.
என்ன யோசனையோ..
தயக்கமோ.. பயமோ..
பின் கீழிறங்கி
என்னருகில் அமர்ந்த
அந்தப் பறவைக்கு
பொன் சிறகுகள்.

இருட்டில்தான் இருக்கிறது.
என்னைப் பார்ப்பதாகவே
உணர்கிறேன்..
பகலில் எனக்குப் புலப்படாத
அந்தப் பறவைக்கு
பொன் சிறகுகள்.

நானில்லாத நேரத்தில்
வந்து போயிருக்கிறது



அடையாளமாய்த்
தன்
பொன் சிறகை
விட்டுச்
சென்ற அந்தப்
பறவை.

**ரிஷபன்**

எல்லாருக்குள்ளும் ஒரு



மனிதன்
இருக்கின்றான்.
எளிதில்
சந்திக்கத்தான்
முடியவில்லை
அவனை.

**கே. பி. ஜனார்த்தனன்**



## பூங்காற்று

என்ன அதிசயம்?!
உன்னைப்பற்றி
ஆசையாக ஒரு
கா த ல் க வி தை
எழுதினால் அந்தப்
பூங்காற்று(ம்)கூட வந்து
தாளைப் புரட்டிப் படித்து
விட்டுப் போகிறது!
தமிழ்நாடு இ
செய்தித்தாளைப் பற்றிப்
பேசுகையில் பக்கம் பக்கமாக
அதனை விவரிக்கிறாய்!
உன்னை மட்டுமல்ல
படிக்கும் அத்தனை பேரின்
மனதையுமே
கொள்ளையடித்திருக்கிறது
தமிழ்நாடு இ செய்தித்தாள்!
வந்தாரை வாழ வைக்கும்
பழக்கம் நம் தமிழகத்து
நகரங்கள் மாநகரங்களுக்கு
இருப்பதைப் போல்
கா த லு க் கு ம் இருக்கிறது!
அமைதியாக இருந்தாலும்
ஆர்ப்பரித்தாலும்
தன்னை உண்மையாக நம்பி
வருபவர்களை கா த ல்



அரவணைக்கத்
தவறுவதில்லை
உன்னையும்
என்னையும்
சேர்த்து!

**முத்து ஆனந்த்**
வேலூர்




## ஒரு விரல் புரட்சி.!

மேய்ச்சல் எருமையின்
மேலே.. கரிச்சானின்
கனநேர சவாரி போல..
அற்ப சுகமாகத்தான்
இருக்கிறது..யார் யாரோ
நம்மை குனிந்து கும்பிடும்
போது..உருவ அணிவகுப்பு
நடத்துகிறார்கள்..
ஒன்றுபோலவே
இருக்கின்றன ஒட்டி
வைத்த குறுநகையோடு
உத்தமர்களின் வதனங்கள்..
மலையா.? மடுவா.?
மனக்கணக்குக்கு
விடையாய்.. கையிலிருக்கும்
தங்க நாணயத்தை...
ஆலய உண்டியலில்
அர்ப்பணித்த பிறகு..
மைக்கறையோடு
நிம்மதியாகத்தான்
வெளியேறுகிறோம்..
ஆனாலும் குறுகுறுக்கத்தான்
செய்கிறது.. இனி
எங்கெங்கேயோ...
யார்யாரையோ கும்பிட
வேண்டியிருக்குமோ.?'
என்று.. அனுதினமும்
அநியாயத்தை
தட்டிக்கேட்கவும்..
நியாயத்தை நிலை நாட்டவும்
நற்கதி இல்லையே..நம்மிடம்..
என்ன செய்ய..?
ஐந்து வருடங்களுக்கு
ஒருமுறை தானே நம்
விரலுக்கே விசித்திர சக்தி
கிடைக்கிறது..!

**க.குமாரகுரு**,மயிலாடுதுறை



மயக்கம் வருகிறது?
அந்த குளோரோஃபார்ம்
கண்களை கொஞ்ச நேரம்
மூடி தான் வையேன்டி!

கடன் வாங்குவது
அம்மாவுக்கு பிடிக்கவில்லை
அந்த கடனால் அன்பு கூட
முறிந்து போகுமாம்
அதனால் நேற்று கொடுத்த
ஒற்றை முத்தத்தை
மறுப்பேதும் சொல்லாமல்
வட்டியும்–முதலுமாக
இரட்டிப்பாக
வாங்கி கொள்!

கொஞ்சமாய் தானடி
பார்த்தாய் கொளுந்து விட்டு
எரிகிறது
உள்ளுக்குள் காதல் தீ!

ப்ரியமாய் பார்ப்பதால்



என்னவோ
எல்லா
ப்ரேமிலும்
நீ பேரழகாய்
தான்
தெரிகிறாய்!

**லி.நௌஷாத் கான்**

## நடுக்கு வாதம் (பார்க்கின்சன்)

அறுசீர் மண்டிலம்.

நடுக்கு வாதம் என்பரே
நரம்புக் கோளாறு என்பரே
உடலின் இயக்கம்
மெதுவாகும் உடலின்
விரைப்பும் கண்டிடுமே
நடக்க சிரமம் ஆகிடுமே
நல்ல மருந்து உண்ணனுமே
நடுக்கு வாதம் இருந்தாலும்
நலமாய் ஆகும்
விரைவினிலே!

நோயின் முதன்மை
அறிந்திட்டால் நேர்ந்த
நோயைத்தடுத்திடலாம்
ஆய்ந்து சத்தாய்
உணவினையே
அளித்தால் விரைவில்
எழுந்திடலாம்
நோயைக் காணப்பல்வாறாய்
நொடிந்து போகா
திருந்திடவே காயும் கனியும்
உண்டிடணும் கனிவாய்
அவரைக்காத்திடணும்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

1. தகுதி பார்த்து யாரிடமும்
பழகாதே உன் இறுதிச்
சடங்கில் தகுதி உள்ளவன்
கைகட்டி நிற்பான் தகுதி
இல்லாதவன் உன்னை
இறுதிவரை சுமந்து
செல்வான்

2. நாம் நல்லவர்கள்
என்பதால் அவர்கள் நம்மை
ஏமாற்ற மாட்டார்கள் என
நினைப்பது நாம் சைவம்
என்பதால் சிங்கம் நம்மை
சாப்பிடாது என்று
நம்புவதற்கு சமம்

3. நாம் ஒருவரை குறை
சொல்லும் போது நமது ஒரு
விரல் மட்டும் அவரை சுட்டிக்
காட்டும் மற்ற விரல்கள்
நம்மை தான் சுட்டிக் காட்டும்

4. நீ வைரமாக இருந்தாலும்
தகுதியற்றவர் கையில்
கிடைத்தால் கூழாங்கல்
தான் நீ கூழாங்கல்லாக
இருந்தாலும் தகுதி உள்ளவர்
கையில் கிடைத்தால்
வைரமாக மாற்றப்படுவாய்

5. மனிதன் மிகவும்
சுயநலமானவன்



நேசித்தால்
பிழைகளைப்
பார்க்க
மாட்டான்
வெறுத்தால்
நல்லதை
பார்க்க
மாட்டான்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

பிரிவோம் சந்திப்போம் என்ற
தருணங்களில் மனதை
பாறையாக வைத்து
கொண்டாலும் கண்கள்



குளமாகி
திரையிட்டு
விடுகிறது
இமைகளை.

**ஜயந்தி சிவக்குமார் ,**
திருச்சி.



நீயும் ,குளவியும் ஒன்று தான்
அவ்வளவு ஏன் உங்களை
பிரம்மா என்றும் கூறுவேன்
புழுவை கொட்டி,கொட்டி
வண்ணத்துப்பூச்சியாக்குகிறது
குளவி நீ கண்களால்
கொட்டி,கொட்டி
இந்த களிமண்ணை
கவிஞனாக்கினாய்!

அந்த ஆண் பட்டாம்பூச்சி
உன்னை சுற்றியே வட்டமிட்டு
திரிந்தது? உன்
வர்ணங்களை பூசிக்கொள்ள!

நீ சாதாரணமாய் வந்தாலும்
என் கண்களுக்கு
அசாதாரணமாய்
தெரிகிறாய்?!

உனக்கு வேலை இல்லையா
காலையிலேயே கவிதை
படைக்கிறாயே என்றது
சேலை கட்டி வந்த
தேவதையொருத்தி
எப்படி சொல்வேன்?
மனித குணம் எல்லாம்
பணத்துக்காக வேலைக்கு
பின்னே ஓடுகிறது
கிறங்க வைக்கும்
உறக்கத்தின் போது கூட
ஏக்கமாய் வந்து விழுகிறது
பாவப்பட்ட என் கவிதைகள்
ஏனோ சில தேவதைகளுக்கு
காதல் பித்து பிடித்தவனின்
கவிதைகள்
பிடித்து தான் போகிறது!

உன் காலடி பட்டால்
ஈரமில்லாத நிலத்தில்
மட்டுமல்ல நீரில்லாத
குளத்திலும்
தாமரை மலரும்!

இதயம் தர மறுத்த
ஈரமில்லாத உன்னை தான்
என்னை போலவே
இஷ்டப்பட்டு
இமோஜிக்களாக
சேமிக்கின்றன
அந்த மானம் கெட்ட
ஆண்ட்ராய்டு செல்போன்!

ஒரு நாளாவது நீ இறுக
கட்டியணைத்து,
முத்தமிட்டு இம்சித்து
உறங்கும் அந்த டெடிபியர்
பொம்மையாக மாற ஆசை!
ஏனெனில் உண்மையான
உன் பெண்மையின்
வன்மையை அது மட்டுமே
பிரதிபலிக்கிறது!

பருந்துகள் சுற்றித்திரியும்
பாலை நிலத்தில் சிக்கி
தவிக்கிறேன் ஏனோ
உன்னை நினைக்கும் போது
மட்டும் என்னைச் சுற்றி
பட்டாம் பூச்சிகள்
பறக்கின்றன!

**லி.நௌஷாத் கான்**

## சிலந்திவலை நட்பு...

உனக்கும் எனக்கும் உள்ள
நட்பைச் சிதைத்துவிட்டு
அகம் மகிழ்கிறது நம்மைச்
சுற்றியுள்ள உறவுகள்,

பாவம் எப்படித் தெரியும்
அவர்களுக்கு,

எத்தனை முறை
சிதைத்தாலும் மீண்டும்,
மீண்டும், பின்னிக்கொள்ளும்
சிலந்தி



வலை போல
நமது நட்பு
என்று...

**எஸ். தயாளன்**
காட்பாடி
சேவூர்



## தேர்தல்

விரல் நுனி மை நாட்டின்
பெயர், வாக்களிப்பது
நமது கடமை!

மாற்றம் தருவது
உன் உரிமை!

ஐந்து ஆண்டுக்கு
ஒருமுறை வரும்
அதிசயத் திருவிழா இது !

சாதி மதம் கடந்து நிற்கும்
சமத்துவக் களம் இது!

மை வைக்கும் ஒரு
விரல்–அது நாட்டின்
தலையெழுத்தை மாற்றும்!

பொய் சொல்லும்
வாக்குறுதிகளை
உன் வாக்குச்சீட்டு
வேரறுக்கும்!

காசுக்கு விற்காதே
உன் உரிமையை!

கவனமாய் தேர்ந்தெடு உன்
தலைமை யை!

மறக்காமல் பதிவிடு
உன் வாக்கை!

மலரட்டும் நம் நாட்டின்
விடியல்!

வண்ணங்கள் பல
இருந்தாலும் இன்று
எண்ணங்கள் ஒன்றாகட்டும்!

சின்னங்கள் பல
இருந்தாலும்–உன்
சிந்தனை சரியாகட்டும்!

வெறும் விடுமுறை நாள்
அல்ல இது தேசத்தின்
எதிர்காலத்தை எழுதும் நாள்!

விலைமதிப்பற்ற உன் ஒற்றை
வாக்கு ஊழல் இருளை
விரட்டும் ஒளி விளக்கு!


பணம் கொடுத்தால்
பணியாதே, பயமுறுத்தலுக்கும்
பணியாதே!



தகுதியானவரைத்
தேர்ந்தெடு–உன்
தலைமுறை உயர
வழியெடு!

மை இட்ட விரல்
இருக்கிறது– நம் நாட்டில்
மகுடம்!

**பெ.திருமுகம்** மணமேல்குடி



## "ஓய்ந்த அலைகள்"

ஓய்ந்த அலைகள்
கரையைத் தழுவும் போது
பேசுவதில்லை...
ஒரு காலத்தில்
உண்டாக்கிய ஓசை
மணலில் இன்னும்
உறைந்திருக்கிறது!

புயலைக் கடந்த கடல்
பொய்யான அமைதியோடு
கிடக்கிறது... அதனுள்ளே
உதிர்ந்த கனவுகளின் உப்பு
இன்னும் கரையவில்லை!

எத்தனை முன்னோட்டம்
எத்தனை பின்வாங்கல்...
அலைகளுக்கே தெரியும்
அதன் சோர்வு!
நானும் அப்படித்தான்
உன்னிடம் வந்து
என் முழு மனதையும்
உடைத்து திரும்பிச்
சென்ற பின் சத்தமில்லா
கடலாய் நின்றேன்!

ஓய்ந்த அலைகள்
அமைதியின் வடிவம் அல்ல...
அவை போராடி முடிந்த
இதயங்களின் சுவாசம்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

காடு கரையில் விளைய வைத்தவன் மனிதண்டா...!
தன் கடமைனு உழைச்சவனும் மனிதண்டா...!
உறிஞ்சி கின்ற பூமியிலே நீரை தேக்கியவன் மனிதண்டா...!



நீர் நிலைகளை காத்தவன் மனிதண்டா...!
நீடுழி வாழ நீரை சேமித்தவன் மனிதண்டா...!


காசு இல்லாத காலத்தில் பண்டத்தை
கொடுத்தவன் மனிதண்டா... இப்போ நாசமா
போனனும் இவந்தாண்டா...!!

**பொன்.கருணா** நவி மும்பை



## சித்திரைத் திருநாள்

தமிழ்ப் புத்தாண்டு சித்திரை
1 ஆம் தேதியா?
இதிலும் ஒரு முரண்பாடு.
தமிழ்ப் புத்தாண்டு சித்திரை
ஒன்றாம் தேதியா அல்லது
தை மாதம் ஒன்றாம்தேதியா?
தை மாதம் ஒன்றாம் தேதி
தான் தமிழ்ப் புத்தாண்டு
என்று மறைமலை அடிகளார்
போன்ற அறிஞர் குழு சுட்டிக்
காட்டுகின்றனர்.
ஆகவே, இதில் மாற்றுக்
கருத்து உள்ளவர்கள்
அவரவர் பகுத்தறிவுக்கேற்ப
தமிழ் புத்தாண்டைத்
தேர்ந்தெடுத்துக் கொண்டாடி
மகிழ்வோம்.
இன்பம் பொங்கிடும் தமிழ்ப்



புத்தாண்டு
திருநாள்
அனைவருக்கும்
நன்னாளக
அமையட்டும்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## வீதியோர சிறுவர்கள்.!

வீதியோர சிறுவர்களாம்..
வீசி யெறிந்த குப்பைகளாம்.!
பாதியெரிந்த. பிணங்களாம்..
பாதையோர
மரங்களாம்..!

கோணிச் சாக்கு
உடல் மறைக்க..
காணி நிலத்தே
கால் பதித்து.. கனவைப்
புசித்தே.. பசிபோக்கும்..
கண்ணீர் சுமந்த
பொற் குடங்கள்.!

பெத்துத் தெருவில்
போட்டாரே.. சுத்தி நிற்பது
தெருநாய்கள்!
எச்சல் இலை
விருந்துண்போம்..
சாக்கடையோரம் எம்
படுக்கை.. சாலைகளெல்லாம்
என் வீடாம்.!

மூங்கில் குழலாய்
மாறவில்லை.. பாடைக்கட்ட
விளைந்தோமே... நாங்கள்
தெருவில் பிறக்கவில்லை!
சமுதாயம் பிடித்துத்
தள்ளியதாம்!

வீதியோரச் சிறுவர்களின்..
வேதனைகளை யாரறிவார்.?
யாதும் இறைவன்
படைப்பென்றால்.. அன்பே
தெய்வம் என்றவன் யார்.?

**வே.கல்யாண்குமார்.**

## நம்பிக்கை

பக்கத்துவீட்டு
பிரியாணிவாசம்
பசியைத்தூண்டலாம்
நம்மவீட்டு
பழையக்கஞ்சிதான்
பசியை ஆற்றும்,,,

பனித்துளிகள் புல்லுக்கு
வேண்டுமானால்
உயிர்த்துளியை
கொடுக்கலாம்
நெல்லுக்கு பயன்படாது,,,

அடுத்தவனிடமுள்ள
ஆயிரம் ரூபாயைவிட
உன்னிடமுள்ள ஒரு
ரூபாயே நம்பிக்கை தரும்,,,

உனக்கு நான் இருக்கேன்
என்பவர்கள் பிணக்கு
வரும்போது கணக்கு
பார்ப்பார்கள்,,,

என்னால் எல்லாம்
முடியுமென்று
நம்பிக்கைக் கொள்



நன்னாளாய்
மாறும்
என்னாளும்,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## ஆயிரம் கவிதைகள்...

என் இனியவளே நம்
சந்திப்புகள் இனி
மெதுவாகவே நடக்கட்டும்,

அன்று நீ செல்லும்
பொழுது சிந்திய ஒற்றைப்
புன்னகைக்கே ஆயிரம்



கவிதைகள்
எழுதியும்,
ஆனந்தம்
குறையவில்லை

அதற்குள்
இன்னொரு
சந்திப்பா?

**எஸ். சந்திரசேகரன் அமுதா** செஞ்சிக்கோட்டை.

## "சமூக ரணம்"

நகரம் தூங்கவில்லை
அது சோர்ந்து கிடக்கிறது
ஒவ்வொரு தெருவும்
ஒரு மறைக்கப்பட்ட அலறல்!

பசியின் வயிறு சட்ட
புத்தகத்தைப் படிக்காது
உருண்டை உணவை
உருண்டை உலகில்
தேடிக் கொண்டிருக்கும்!

காலணிகள் இல்லாப்
பாதங்கள் கான்கிரீட்டில்
கருகுகையில் சுவடுகள்
வரலாறாகாது...
அடுத்த மழையில்
கழுவி போகும்!

பள்ளிக்கூட வாசலில்
புன்னகைக்கும் குழந்தை
பையைத் திறக்கையில்
புத்தகம் இருக்காது
ஒரு குடும்பத்தின்
கடன் கற்றையாய்!

மருத்துவமனை வாசலில்
மூச்சு வாங்கும் மனிதன்
உயிரோடு வாழ
கேட்கப்படுவான்
"பணமிருக்கா?"

உயர் நீதிமன்றக்
கதவுகள் திறந்திருக்கும்
ஆனால் அதன் பாதையில்
கரன்ஸிப்படிக்கட்டுகள்!

சமூகம் மெல்லச் சாகின்றது



அதை விட
வேகமாய்
நாம்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்























# WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106













## Special Invitation
To Retired Senior Housewives Businessmen Bankers CAs NRIs Age.30 to 70.Qualification. SSLC/Graduate

★ To Restart Your Second Innings With A Career Business Opportunity

- Flexible Timing Unlimited Incentive.
- No Target Work From Home Training Provided
- For Successful Business.

Contact Mr.Irudaya Raj
Ph.9486634780

WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer
Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED: FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889





! WANTED !
Muslim Lady Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet





Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business





Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House Call/Whatsapp 94386 10756

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH SUPREME
Car Wash & Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
RAVIKUMAR AND COMPANY
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
PR
TRANSPORT
9677174691
9176232026
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri ManjalMart
YOUR DESIRE WE DELIVER
20% OFF
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்



# புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா?



ஒரு சமயம் அரபுநாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு ஒரு அதிசய ரோஜா செடி ஒன்றை பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்த செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந்தன. அங்கு வந்த தெனாலி ராமனின் மகன் அதை பறித்து தனது தாய்க்கு பரிசாக கொடுக்க நினைத்து பூக்களை பறிக்க தொடங்கினான். பூக்களைப் பறித்துக்கொண்டு இருக்கும் போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்டனர்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலி ராமன் காவலர்களை பார்த்து "என்மகனை எங்கே அழைத்துக்கொண்டு செல்கிறிர்கள்?" என்று கேட்டான்.

அவர்களோ! "உங்கள் மகன் ரோஜா பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களை பார்" என்று அவன் கைகளை காண்பிக்கச் செய்தனர்.

தெனாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் தன் மகனை காப்பாற்ற விரும்பிய தெனாலி சிறுது நேரம் யோசித்து தான் அணிந்திருந்த மேலாடையை கழற்றி மகன் மேல் போர்த்திவிட்டான்.

இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்த துணி என் மகனை காப்பாற்றும் என்று கூறிவிட்டுச் சென்றார்.

புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா? தெனாலிமகன் தந்தை கூறியதை யோசிக்க தொடங்கினான். உடனே ஒவொரு பூக்களாக சாப்பிட ஆரம்பித்தான். துண்டு முடி இருபதனால் அவன் பூக்களை சாப்பிடுவதை காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னால் அழைத்துச்சென்றனர்.

காவலர்கள் மன்னரை பார்த்து "அரசே! தெனாலி ராமனின் மகன் பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்த குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறினர்.

மன்னரும் எல்லாவற்றையும் கேட்டறிந்து, பின்னர் அரசர் காவலர்களை பார்த்து, "திருடிய பூக்கள் எங்கே?" என்று கேட்டார்.

காவலர்கள் மன்னரை பார்த்து, "பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளது" என்று காவலர்கள் கூறினர். அரசர் தெனாலி மகனை பார்த்து, "உன் கைகளை காட்டு" என்று கூறினார். அவனும் வெறும் கைகளை காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை. மன்னர் தெனாலிமகனை பார்த்து, "நீ பறித்த பூக்கள் எங்கே?" என்று கேட்டார்

அவனோ! மன்னரைப் பார்த்து, "நான் பூக்கள் எதுவும் பறிக்க வில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படி செய்தார்கள்" என்று கூறினான்.

மன்னரும் அந்த இரண்டு காவலர்களையும் திட்டி அனுப்பிவிட்டார்.

தெனாலியும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் என்று சிரித்துக்கொண்டே வீட்டிற்கு புறப்பட்டனர்.

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| ஒரு குகை, 32 வீரர்கள், ஒரு நாகம் அந்த குகை எது? | வாய் |
| மரத்தின் மேலே தொங்குது மலைப் பாம்பல்ல. அது என்ன? | விழுது |
| மரத்தின் மேலே தொங்குது மலைப் பாம்பல்ல. அது என்ன? | விழுது |
| பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன? | வானொலிப் பெட்டி |
| நான் பார்த்தால் அவன் பார்ப்பான், நான் சிரித்தால் அவன் சிரிப்பான் அவன் யார்? | முகம் பார்க்கும் கண்ணாடி |
| கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்? | வெங்காயம் |

# சிங்கமும் சிறு எலியும்

ஈசாப் கதைகள்

ஒரு நாள் மதிய வேளையில் சிங்கம் ஒன்று காட்டில் தூங்கிக் கொண்டு இருந்தது.

அங்கு வந்த எலி சிங்கத்தின் மீது குதித்து விளையாடியது.

இதனால் சிங்கம் விழித்தெழுந்தது கோபம் கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து, "நீ எனக்கு இன்று நல்ல மதிய உணவாக போகிறாய்" என்று கர்ஜித்தது.

ஆனால் எலியோ! சிங்கத்திடம், "என்னை மன்னித்து விடுங்கள் நான் தெரியாமல் உங்கள் மீது ஏறிவிட்டேன். என்னை சாப்பிடாதீர்கள்". எனக் கெஞ்சிக் கேட்டது.



சிங்கத்திடம் "இன்று நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டால் என்றாவது ஒரு நாள் உங்களுக்கு என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்" என்றது.

சிங்கமோ, "இவ்வளவு சிறிய உடம்பை வைத்துகொண்டு எனக்கு நீ உதவ போகிறாயா?" என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போக விட்டது.

சில நாட்களின் பின் சிறிய இறைச்சி துண்டிற்கு ஆசைப்பட்ட அந்தச் சிங்கம் வேடர்கள் வைத்திருந்த வலையில் சிக்கிகொண்டது.

வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது.

அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு வந்து வலையைத் தன் பல்லினால் வெட்டி சிங்கத்தைத் தப்பிப் போக உதவியது.

சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றி விட்டதே என்று வெட்கப்பட்டு எலிக்கு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

நீதி: உருவத்தை பார்த்து யாரையும் ஏளனம் செய்யக் கூடாது.



# ஜோக்ஸ்

நண்பர் 1: கல்யாணம் என்பது பார்க்கில் நடந்து போற மாதிரி..

நண்பர் 2: அப்படியா.. அப்போ அவ்ளோ ஜாலியா இருக்குமா ப்ரோ

---------------------------

நண்பர் 1: ஜுராசிக் பார்க் டா..

நண்பர் 2: !!!

---------------------------

நண்பர் 1: கல்யாணம் என்பது ஒரு பேய் படம் பாக்குற மாதிரி..

நண்பர் 2: ஏன் ப்ரோ..

---------------------------

நண்பர் 1: தொடங்கும் போது ஒரு ஆர்வம் இருக்கும்..

நண்பர் 2: அப்பறம்..



நண்பர் 1: கதற ஆரம்பிச்சிடுவ டா..

நண்பர் 2: !!!

---------------------------

நண்பர் 1: கல்யாணம் என்பது ஒரு வீடியோ கேமில் கடுமையான லெவலில் விளையாடுவது போல..

நண்பர் 2: ப்ரோ..

---------------------------

நண்பர் 1: தொடங்கும் போது நான் எல்லாம் வேற லெவல் பிளேயர்டானு தோணும்..

நண்பர் 2: அப்பறம்..

---------------------------

நண்பர் 1: அது என்னனு புரியறதுக்குள்ள உன் கேமே முடிஞ்சிடும்..

நண்பர் 2: !!!

---------------------------

நண்பர் 1: கல்யாணம் என்பது வானத்தில் இருந்து குதிக்க கூடிய ஸ்கை டைவிங் சாகசம் போல..

நண்பர் 2: அது நல்லா இருக்குமே ப்ரோ..

---------------------------

நண்பர் 1: ஒரு மாதிரி எக்ஸைட்மென்ட் ஆ இருக்கும்..

நண்பர் 2: அப்பறம்.

---------------------------

நண்பர் 1: உயிர் பிழைச்சா போதும்னு கும்பிடுவ..

நண்பர் 2: !!!



# பன்முகம்



## உடல் நலத்தை மேம்படுத்தும் தினசரி பழக்கங்கள்



* சாப்பிடும் முன்பு ஒரு டம்ளர் வெந்நீர் குடிக்கவும். செரிமானத்தை மேம்படுத்த உதவும்.
* இரவு 10 மணிக்குள் உறங்கவும். மூளையின் ஆரோக்கியத்தையும், ஹார்மோன் சமநிலையையும் பாதுகாக்கும்.
* தினமும் 30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்யவும். இதயம், மனம் மற்றும் எலும்புகள் பலப்படும்.
* தினமும் 15 நிமிடங்கள் சூரிய ஒளியில் நில்லுங்கள். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மனநிலை மேம்படும்.
* நடைப்பயிற்சிக்கு பிறகு பழங்கள் சாப்பிடுங்கள். மன அமைதி கிடைக்கும்.
* 5 நிமிடங்கள் ஆழ்ந்த மூச்சுப் பயிற்சி செய்யுங்கள். மன அழுத்தம் மற்றும் பதற்றம் குறையும்.
* குடல் ஆரோக்கியத்தை பராமரியுங்கள். மனநிலை, சருமம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மேம்படும்.

இந்த சிறிய தினசரி பழக்கங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை உருவாக்கும்.

## தயிர் தரும் ஆரோக்கியம்

தயிர் என்ற புரோபயாடிக் உணவு இந்த நல்ல நுண்ணுயிர்கள் குடலில் "கெட்ட" கிருமிகளின் வளர்ச்சியை குறைத்து, செரிமான சமநிலையை பராமரித்து, உணவு செரிமானம் ஆகி குடல் உறிஞ்சிகள் மூலம் ஊட்டச்சத்துகள் உறிஞ்சப்பட்டு உடலில் சேர்வதை மேம்படுத்துகின்றன. மேலும், நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தி சளி, இருமல், வயிற்றுப்போக்கு போன்ற தொற்று பாதிப்புகளை குறைக்க உதவுகின்றன.

தயிரில் காணப்படும் புரோபயாடிக் நுண்ணுயிரிகள் என்பவை லேக்டோபாசிலஸ் மற்றும் பைபிடோ பாக்டீரியா ஆகியவை அடங்கும். அவ்வப்போது உணவில் தயிர் சேர்த்து வரும் போது இந்த நுண்ணுயிரிகள் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, வீக்கம், மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சனைகளை குறைக்க உதவும்.

பொதுவாக, தயிரில் கால்சியம், வைட்டமின் டி, புரதம் நிறைந்துள்ளதால் எலும்புகள், பற்கள் வலுவாக இருக்க உதவும். தயிரில் உள்ள புரதம் தசை வளர்ச்சி, தசை வலுவுக்கு உதவுகிறது.

தயிரில் உள்ள நல்ல கொழுப்பு, ரத்த அழுத்தத்தை குறைக்க மற்றும் இதய நோய் அபாயத்தை குறைக்க உதவுகிறது. தயிரில் உள்ள வைட்டமின் பி 2 மற்றும் பி 12 ஆகியவை சருமத்தில் உள்ள முகப்பரு, தோல் அரிப்பு பாதிப்பை குறைக்க உதவுகிறது. வெயிலுக்கு தயிர் சேர்த்து கொள்வதன் மூலம் உடலுக்கு குளிர்ச்சி மற்றும் ஏராளமான நன்மைகள் உள்ளன.



## இளமையை காக்கும் மங்குஸ்தான்

"பழங்களின் ராணி' என்ற பெருமைக்குரியது மங்குஸ் தான் பழம். வெளியே அடர் ஊதா நிறத்திலும், உள்ளே பஞ்சு போன்ற வெள்ளை சதைப்பகுதியுடனும் காணப்படும். இனிப்பு மற்றும் மென்மையான புளிப்பு கலந்த சுவையால் தனித்துவம் பெற்ற இந்தப் பழம் ஆறு வெண்மை நிற பாகங்களையும் கொண்டிருக்கும். ஒவ்வொரு பாகமும் மென்மையான சுவையுடன், சத்தானவையாகும். சுவை மட்டுமல்லாமல், உடலுக்கு பயனுள்ள பல்வேறு மருத்துவ குணங்களையும் இயல்பாகவே கொண்ட இயற்கை கொடையாகவும் விளங்குகிறது.

மங்குஸ்தான் பழம் வெப்பமண்டல காலநிலை உள்ள பகுதிகளில் செழித்து வளரும் மரமாகும். அதிக ஈரப்பதமுள்ள சூடான வானிலையே இதன் வளர்ச்சிக்கு ஏற்றதாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் அதிகளவில் பயிரிடப்படுகிறது.



இந்தியாவில் கேரளா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் சில ஈரப்பதமுள்ள பகுதிகளில் மங்குஸ்தான் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக, குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, ஆலஞ்சோலை, களியல், நெட்டா, மாறமலை, வேளிமலை உள்ளிட்ட இடங்களில் மங்குஸ்தான் பழ மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த பழங்கள் மே மற்றும் ஜூன் மாதங்களில் அதிகம் விளைகின்றன.

இதில் நார்ச்சத்து, வைட்டமின் பி1, பி2, பி9 மற்றும் ஆண்டி ஆக்சிடென்டுகள், பொட்டாசியம், தாதுக்கள் நிறைந்துள்ளன.

ஜாந்தோன்கள் மற்றும் வைட்டமின் சி இந்த பழங்களில் அதிகம் நிறைந்து காணப்படுவதால், உடலை நோய்த் தொற்றுகளிலிருந்து பாதுகாக்கிறது. ஜாந்தோன்கள் என்பது பழங்களில் உள்ள சக்திவாய்ந்த ஆண்டி-ஆக்சிடென்ட் சேர்மங்கள். நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் தன்மையை கொண்டவை.

இந்த பழத்தில் இருக்கும் பொட்டாசியம், தாதுக்கள் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகின்றன.

நார்ச்சத்து அதிகம் இருப்பதால் குடல் இயக்கம் சீராக நடைபெற்று, மலச்சிக்கலைத் தடுக்கிறது.ஆன்டி-ஆக்சிடென்டுகள் சரும செல்களை பாதுகாத்து இளமையான தோற்றத்தை தக்க வைக்க உதவுகின்றன.

இந்த பழத்தில் பி-வைட்டமின்கள் இருப்பதால் உடல் ஆற்றல் மற்றும் செல்களின் வளர்ச்சியை ஆதரிக்கின்றன.

மங்குஸ்தான் பழத்தில் மெக்னீசியம் மற்றும் மாங்கனீசு போன்ற தாதுக்களும் உள்ளன. அவை தசைகள் வலுவாகவும், எலும்புகள் பலமாகவும், இதயம் ஆரோக்கியமாகவும் செயல்பட உதவுகின்றன.

## கற்றாழை தரும் கலக்கல் அழகு...

தற்போதைய குளிர்காலத்தில் பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால், சருமத்தில் ஈரப்பசை வேகமாக நீங்கி, வறட்சி ஏற்படுகிறது. இந்நாட்களில் உண்டாகும் பொதுவான பிரச்சனை தான் இது.

இந்த சரும வறட்சியைப் போக்க தினம் தவறாமல் மாய்சரைசரை பயன்படுத்த வேண்டும். அதேசமயம் முகத்துக்கு ஒரு சில 'பேஸ் பேக்'குகளையும் போட வேண்டும்.

இதனால் சரும வறட்சி தடுக்கப்படுவதுடன், சருமத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி, முகம் 'பளிச்'சென்று பிரகாசமாக ஆகும்.

இந்த விஷயத்தில், கற்றாழை வெகுவாக உதவும். கற்றாழையைக் கொண்டு அடிக்கடி பேஸ் பேக் போடும்போது சருமம் நீரேற்றத்துடனும், மென்மையாகவும், பளபளப்பாகவும் இருக்கும்.

கற்றாழையைப் பயன்படுத்தி பேஸ் பேக்குகள் தயாரிக்கும் விதம்...

இந்த பேஸ் பேக்குக்கு ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கற்றாழை ஜெல்லை எடுத்துக் கொள்ள வேண்டும். பின் அதனுடன் 1 ஸ்பூன் கிரீம் மற்றும் 1 ஸ்பூன் தேன் சேர்த்து கலந்துகொள்ள வேண்டும். பின்னர் அதை முகத்தில் தடவி, 15-20 நிமிடம் ஊற வைக்க வேண்டும். தொடர்ந்து, குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இந்த பேஸ் பேக்கை வாரத்துக்கு 2 முறை பயன்படுத்தினால், சருமம் எப்போதும் ஈரப்பதத்துடன் இருக்கும்.

ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கற்றாழை ஜெல்லை எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் 1 ஸ்பூன் தயிர் மற்றும் ½ ஸ்பூன் தேன் சேர்த்து கலந்துகொள்ள வேண்டும். பின்பு அதை முகத்தில் தடவி, 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். அதன் பின், குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இந்த பேஸ் பேக், சருமத் தில் உள்ள இறந்த செல்களை நீக்குவதோடு, சருமத்தை ஈரப்பதத்துடனும் வைத்துக்கொள்ள உதவுகிறது.



ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கற்றாழை ஜெல்லை எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடன், சிறிது பாலில் ஊற வைத்த 4-5 குங்குமப்பூ இதழ்களுடன், ½ டீஸ்பூன் பாதாம் எண்ணெய் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். அதை முகத்தில் தடவி, 20 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்பு குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும்.

இந்த பேஸ் பேக்குக்கு, 1 ஸ்பூன் கற்றாழை ஜெல்லை எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் 1 டீஸ்பூன் ரோஸ் வாட்டர், 1 டீஸ்பூன் முல்தானி மெட்டி சேர்த்து கலந்துகொள்ள வேண்டும். பின்னர் அதை முகத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வைக்க வேண்டும். அதன் பின் குளிர்ந்த நீரால் முகத்தை மென்மையாக தேய்த்துக் கழுவ வேண்டும். இந்த பேஸ் பேக், சரும எரிச்சலைப் போக்கி, சருமத்துக்கு போதுமான ஈரப்பதத்தை அளிக்கும்.

## காலை-இரவு: முடி வளர்ச்சிக்கு எண்ணெய் தடவ சிறந்த நேரம் எது?

குழந்தை பருவம் முதலே தலை முடிக்கு எண்ணெய் தேய்க்கும் வழக்கத்தை பலரும் பின்பற்றுகிறார்கள். தேங்காய் எண்ணெய், பாதாம் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், ஆலிவ் எண்ணெய் என ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவதொரு எண்ணெய் இடம் பிடித்திருக்கும். தலைமுடிக்கு தொடர்ந்து எண்ணெய் தடவி வந்தாலும் முடி வளர்ச்சிக்கு சிறந்தது காலை நேரமா அல்லது மாலை நேரமா? என்ற குழப்பம் பலருக்கும் அடிக்கடி எழுவதுண்டு.

காலை நேரத்தில் எண்ணெய் தடவுவது தலைக்கு ரத்த ஓட்டத்தை அதிகரிக்க செய்யும் என்று சிலர் நம்புகின்றனர். தலைக்கு எண்ணெய் தேய்த்துவிட்டு இரவு முழுவதும் அப்படியே வைத்திருப்பதால் முடியின் வேர் வரை ஊட்டச்சத்து கிடைக்கும் என்று சிலர் கூறுகிறார்கள். உண்மை என்னவென்றால் வாழ்க்கை முறை, முடி வகை, தேய்க்கும் நேரத்தை பொறுத்து தலைமுடிக்கு கிடைக்கும் நன்மைகள் மாறுபடும்.

### முடி வளர்ச்சிக்கு எண்ணெய் தடவுவது ஏன் முக்கியம்?

முடிக்கு எண்ணெய் தடவுவது தலை சருமத்திற்கு ஊட்டமளிக்கும். முடி உலர்வடைவதை குறைக்கும். முடி வேர்களை வலுப்படுத்தும், தலைக்கு மெதுவான மசாஜ் செய்வது ரத்த ஓட்டத்தை அதிகரிக்க செய்து முடி வளர்ச்சிக்கு உதவிடும். மேலும் எண்ணெய் தடவுவது முடியில் ஏற்படும் உராய்வை குறைக்கும். முடி உடைதல் மற்றும் பிளவு ஏற்படாமல் பாதுகாக்கும். ஆனால், எண்ணெய் தேய்ப்பது மட்டும் போதுமானது அல்ல. சீரான உணவு, நல்ல உறக்கம், மன அழுத்தமின்மை மற்றும் சரியான முடி பராமரிப்பு ஆகியவை முக்கியமானவை.



### முடி வளர்ச்சிக்கு எது சிறந்தது?

உலர்ந்த அல்லது சேதமடைந்த முடி உள்ளவர்கள் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை இரவு நேரத்தில் தலைக்கு எண்ணெய் தடவலாம். எண்ணெய் சுரப்பு அதிகம் உள்ளவர்கள் காலை நேரத்தில் தலைக்கு எண்ணெய் தேய்த்துவிட்டு குளிப்பது பாதுகாப்பானது. வாரத்திற்கு இரண்டு அல்லது 3 முறை தலைக்கு எண்ணெய் தடவினால் போதும். தலைமுடிக்கு மெதுவாக மசாஜ் செய்யவும். அதிக எண்ணெய் தடவுவதை தவிர்க்கவும். தலை முடியை நன்றாக அலசவும்.

காலை நேரமா இரவு நேரமா நேரத்தை விட எளிமையான, தொடர்ச்சியான பராமரிப்பே முடி வளர்ச்சிக்கு உதவிடும்.

* தலைச்சருமத்தை சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.
* தலைமுடி வறட்சி அடைவதை குறைக்க உதவும்.
* தலைமுடியில் லேசாக எண்ணெய் தேய்த்து 30 நிமிடம் முதல் 2 மணி நேரம் வரை தக்கவைப்பது அதிக எண்ணெய் தலையில் சேர்வதை தடுக்க உதவும். எண்ணெய் பசைத்தன்மை மற்றும் முகப்பரு பிரச்சனை கொண்டவர்களின் தலைக்கு காலை நேரத்தில் எண்ணெய் தேய்ப்பது சிறந்தது.
* எண்ணெய்யை முழுமையாக உறிஞ்ச முடிக்கு போதிய நேரம் கிடைக்காது.
* எண்ணெய் தேய்த்தபடி வெளியே சென்றால் தூசி, மாசுக்கள் முடியில் ஒட்டும் அபாயம் உண்டு.
* வெயில் சமயத்தில் காலையில் எண்ணெய் தேய்ப்பது தலைச்சருமத்தில் அழுக்கு சேரக்கூடும்.
* தலையில் எண்ணெய் தடவி மசாஜ் செய்துவிட்டு ஷாம்பு உபயோகித்து குளிப்பவர்களுக்கு காலையில் எண்ணெய் தேய்ப்பது ஏற்றது.
* எண்ணெய் நீண்ட நேரம் தலையில் படிந்திருந்து முடிக்கு ஊட்ட மளிக்கும்.
* உலர்ந்த, சேதமடைந்த முடியை சீரமைக்க உதவும்.
* தலை முடி உலர்தல் பிரச்சனை குறையும்.
* இரவில் தலைக்கு எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்வதால் நல்ல உறக்கம் கிடைக்கும். மன அமைதிக்கும் உதவும்.
* சிலருக்கு சரும துளைகள் அடைபட்டு பொடுகு பிரச்சனை அதிகரிக்கலாம்.
* தலைமுடியை முழுவதுமாக மூடவில்லை என்றால் தூசி ஒட்ட வாய்ப்பு உண்டு.
* எண்ணெய் சுரப்பு அதிகம் உள்ளவர்கள் அடிக்கடி இரவில் தலைமுடிக்கு எண்ணெய் தடவினால் பொடுகு பிரச்சனை ஏற்படலாம்.
* வறண்ட தலைமுடி மற்றும் சேதமடைந்த முடி உள்ளவர்களுக்கு இரவு எண்ணெய் தடவுவது ஏற்றது.

## வயதானால் என்ன?



வயதாவது, எவருக்குமே கவலையை ஏற்படுத்தும் விஷயம்தான். அதிலும் பெண்கள், வயது கூடுவதை வெறுப்பார்கள்...

ஆனால், 50 வயது ஆனாலும், பெண்கள் சில உணவுப்பொருட்களை உட்கொண்டு வருவதன் மூலம், அழகு மாறாமல் திகழலாம், வயதான தோற்றத்தைத் தவிர்க்கலாம் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள்.

தினமும் ஏதாவது இரண்டு பழங்களை சாப்பிட வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இப்படி உட்கொள்ளும்போது அது நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலிமையாக்குவதோடு, சருமத்தின் ஆரோக்கியத்துக்கும் நன்மை பயக்கிறது. அதுவும் பப்பாளி, ஆப்பிள், கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களில் சரும செல்களின் ஆரோக்கியத்துக்குத் தேவையான வைட்டமின்களும், சக்தி வாய்ந்த ஆண்டி ஆக்சிடென்டுகளும் அதிகம் உள்ளன. எனவே நீண்ட காலம் இளமையாக, அழகாக இருக்க விரும்பும் பெண்கள், எந்தப் பழம் பிடிக்குமோ அதை தவறாமல் சாப்பிடுங்கள்.

பசலைக்கீரை, முருங்கைக்கீரை போன்ற கீரைகளில் இரும்புச்சத்து, கால்சியம் மற்றும் நார்ச்சத்து போன்றவை அதிகமாக உள்ளன. இந்த கீரைகளை உணவில் அதிகம் சேர்க்கும் போது, அவை எலும்புகளை வலிமையாக வைத்துக்கொள்வதோடு உடலில் ஆற்றலும் நிலையாக இருக்கும். முக்கியமாக கீரைகளை அதிகம் உணவில் சேர்க்கும்போது, சருமத்தின் ஆரோக்கியமும் அழகும் மேம்படும்.

கொட்டைப்பருப்புகள், விதைகள்பா தாம், முந்திரி, பிஸ்தா போன்ற கொட்டைப்பருப்புகள், பூசணி, ஆளி விதைகள் போன்றவற்றில் ஆரோக்கியமான கொழுப்புகளும் புரதங்களும் அதிகம் உள்ளன. இவற்றை தினமும் உட்கொள்ளும் போது, இவை இதயத்தை வலிமையாக வைத்துக்கொள்வதோடு, சருமத்தை பொலிவாகவும் இருக்கச் செய்யும்.

தயிர் அல்லது மோரில் புரோபயாடிக்குகள் அதிகம் உள்ளன. இவை செரிமானத்தை எளிமையாக்கும், குடல் ஆரோக்கியத்தைக் காக்கும் என்பது நிபுணர்கள் கருத்து. உடலில் செரிமான மண்டலம் சிறப்பாக செயல்பட்டு வந்தாலே, பாதி சரும பிரச்சனைகள் தீர்ந்துவிடும். எனவே தினமும் தயிர் அல்லது மோரை உணவில் சேர்த்துவர வேண்டும்.

### சிறுதானியங்கள், முழுத் தானியங்கள்

தினசரி உணவில் சிறுதானியங்கள் மற்றும் முழுத் தானியங்களை சேர்த்து வந்தால், அவை உடலில் இன்சுலினை சீராக வைத்துக்கொள்ள உதவும். நீண்ட நேரம் உடலில் ஆற்றல் நிலைத்திருக்கும். அதுவும் இவற்றை தினமும் தவறாமல் உட்கொண்டு வந்தால், சர்க்கரை நோயின் அபாயமும் குறையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, பெண்கள் வயது கூடிக் கொண்டே செல்லும்போதும் இளமையாகவும், பொலிவான சருமத்துடன் அழகாகவும் தோன்ற வேண்டும் என்றால், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள 5 உணவுகளை அன்றாடம் உட்கொள்வது நல்லது.




## ஆண்டவன் ஆஸ்ரம தேசிகர் ஆலய திருமஞ்சனம்




திருப்புல்லாணி ஆண்டவன் ஆஸ்ரம தேசிகர் ஆலய திருமஞ்சனம்

## கொடியேற்றம்



மந்தைவெளி மாரி செட்டித் தெரு கொடியேற்றம்

## பகவத் கீதை, விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம்





கோயம்புத்தூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பகவத் கீதை, விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் செய்து வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சீர்காழி சட்ட மன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ம.சக்தி தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிப்பு



**சீர்காழி , ஏப் , 13:** நல்லாட்சி மலர்ந்திட தமிழகத்தை மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஆட்சி அமைய நாடு நலம்பெற,மக்கள் அனைவரும் பாதுகாப்புடன் வாழ்ந்திட வாக்களிப்பீர் இரட்டை இலைக்கு என்ற முழக்கத்துடன் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ம.சக்தி தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார். சீர்காழி நகரம் சமாது குட்டை என்கிற குமரக் கோவில் மேல தெருவில் வாக்காளர்களை சந்தித்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். தெருவாசிகள் சாக்கடை பிரச்சினையை சரி செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். உடனே அ.தி. மு.க. வேட்பாளர் ம.சக்தி , வெற்றி பெற்றவுடன் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதாக உறுதி அளித்தார்.

வேட்பாளருடன் மாநில அம்மா பேரவை துணை செயலாளர் மார்கோனி , சீர்காழி நகர கழக செயலாளர் சுரேஷ், லண்டன் அன்பழகன், பாலதண்டாயுதம் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள்.

# பெங்களூரு தமிழ் மன்றம் சார்பில் 271 வது பாவாணர் பாட்டரங்கம்



பெங்களூரு தமிழ் மன்றம் சார்பில் 271 வது பாவாணர் பாட்டரங்கம் நேற்று சிறப்பாக நடந்தது. செயலாளர் மாசிலாமணி வரவேற்றார். வளமோங்க சித்திரையே வா.! என்ற தலைப்பில் பெங்களூர் தமிழ்க் கவிஞர்கள் கவிதை வழங்கினர் . பாவலர் இராம இளங்கோவன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் பாவலர் வே.கல்யாண் குமார்.. வே.அரசு.. அந்தோணி தாஸ் ஆகியோருக்கு பிறந்தநாள் பாராட்டும் நல்லாடையும் பரிசும் வழங்கப்பட்டது..

பாட்டரங்கில் வே.அரசு, வீணைதேவி.. சதாசிவம்.. இராம இளங்கோவன்.. வ.கல்யாண்குமார். தனம் வேளாங்கண்ணி. மதலை மணி.. சுப்ரமணியன்.. ரத்திணம்..கே.பிஹரி . தேன் மொழியன்.. பாரதி முத்துராஜ்.. நடேசன்.. பெரு. ராமகாருஷ்ணன்.. ஆஞ்சிநேயன்.. ஆகியோர் கலத்து கொண்டனர். லாரன்ஸ் நன்றி கூறினார்.

# காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் வெற்றிலை அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!






**வேலூர்,ஏப்.13:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீசத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீக. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஞாயிற்றுக் கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது.

இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

# அருள்மிகு திருக்குமரன் திருக்கோயிலில் மண்டல பூஜை 12- ஆம் நாள் சிறப்பு வழிபாடு





**திருவண்ணாமலை ஏப்,13:** அருணை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு திருக்குமரன் திருக்கோயிலில் மண்டல பூஜை 12 -ஆம் நாள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாரதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்கள் புளியோதரை,தயிர் சாதம்,கேசரி வழங்கப்பட்டது வெகு சிறப்பாக பூஜைகள் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# தேர்தல் பிரச்சாரம்



**சென்னை, ஏப்.13:** சட்டமன்ற தேர்தலை யொட்டி ராயபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் திரு.Dr.சுபேர்கான் நேற்று 12/04/2026 காலை ராயபுரம் 2வது சர்க்கிள், 52வது வட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் உட்பட ராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

# திருவண்ணாமலை சட்டமன்ற வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிப்பு








**திருவண்ணாமலை, ஏப்.13:** திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி பகுதி 4க்கு உட்பட்ட வார்டு எண் 22, 34,35, 36, 37 பகுதிகளில் பொதுமக்களிடம் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எ. வ. வேலு அவர்கள் தீவிரவாக்கு சேகரிப்பில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் வாக்கு சேகரிப்பில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை


## ரவுசு மணி

ஒருவர் புரிந்தும் புரியாதது போல் இருந்தால்....

நாம் தெரிந்தும் தெரியாதது போல் நடப்பது தான் நல்லது....



V. முத்து ராமகிருஷ்ணன்


# கடை திருவோணம்



ஸ்ரீ பார்த்தசாரதி (கடை திருவோணம்)

# திருவோணம் சிறப்பு திருமஞ்சனம்



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வரதராஜபெருமாளுக்கு இன்று திருவோண நட்சத்திரத்தை முன்னிட்டு சிறப்பு திருமஞ்சனம் மற்றும் மகா தீபாராதனையும் நடைபெற்றது பக்தர்களுக்கு தீர்த்தம் சடாரி துளசி மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

**J நாராயணன் கோட்டுப் சேரி**

# விசில் சின்னத்திற்கு வாக்களிக்களியுங்கள்: வேட்பாளர் பரப்பரை..!



**வந்தவாசி, ஏப் 13:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி மற்றும் தெள்ளாறு உள்ளிட்ட கிராமங்களில் வந்தவாசி (தனி) சட்டமன்ற தொகுதியின் தவெக வேட்பாளர் உதயகுமார் தன்னுடைய ஆதரவாளர்களுடன் தீவிர பரப்புரையில் ஈடுபட்டார். மேலும் அனைத்து பொதுமக்களிடமும் விசில் சின்னத்திற்கு வாக்களிக்க வலியுறுத்தினார். உடன் மாவட்ட இணை செயலாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். பா. சீனிவாசன், வந்தவாசி.

# தேனி மாவட்டச் சுற்றுலாத் தலங்கள்: இயற்கையின் சொர்க்கம்!




தேனி மாவட்டத்தில் சுற்றுலா செல்வதற்கு ஏகப்பட்ட பகுதிகள் உள்ளன. தேனி மாவட்டம் மேகமலை பகுதியில் பார்க்க வேண்டிய இடங்கள் அதிகம் உள்ளன. தேயிலை தோட்டங்கள் சுருளி நீர்வீழ்ச்சி மணலார் அணை மேகமலைவனவிலங்குசரணாலயம் மற்றும் கும்பக்கரை அருவி போடி மெட்டு கௌமாரி அம்மன் கோவில் போன்ற சிறப்புமிக்க பகுதிகளும் கண்களுக்கு விருந்தளிக்கும் இயற்கை சூழ்ந்த இடங்களும் நம்மை வரவேற்கிறது

அக்டோபர் முதல் மே மாதம் வரை பார்வையிட சிறந்த நேரமாகும்.

மேகமலையில்இயற்கைகாடுகள் தேயிலை தோட்டங்கள் நிரம்பி வழிகிறது. மேகமலை பச்சம்மா குச்சி என அழைக்கப்படுகிறது. எங்கு பார்த்தாலும் பசுமையாக உள்ளதால் இந்த பெயர் வந்தது. 18 ஊசி வளைவுகள் உள்ளன. அதில் வளைந்து நெளிந்து செல்வது புதிய அனுபவமாக இருக்கும். மூடுபனி இந்தப் பகுதியில் நிரந்தரமாக உள்ளது. தேயிலை தோட்டங்கள் பசுமையான போர்வையை போர்த்தியது போன்று காணப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 1500 மீட்டர் உயரத்தில்உள்ளதுஇந்தமேகமலை பகுதி. தேயிலை தோட்டங்களும் ஏலக்காய் தோட்டங்களும் அதிகம் காணப்படும் பகுதி ஆகும்.

இதமான வானிலை கண்கவர் காட்சிகள் மென்மையான காற்று நம்மை வரவேற்கிறது. இங்கு வனவிலங்கு சரணாலயம் வெள்ளிமலை ஏலக்காய் தோட்டம் தேயிலை தோட்டம் நிறைந்து காணப்படுகிறது. சுருளி அருவி இரண்டு இடங்களில் விழுகிறது. வெள்ளிமலை 1250 மீட்டர் உயரத்தில் உள்ளது. தேனியில் இருந்து மேகமலைக்கு 54 கிலோ மீட்டர் செல்லவேண்டும். மேகமலை வனப்பகுதியில் புகழ்பெற்ற கண்ணகி கோவில் உள்ளது. இந்த கோவில் ஆனது தமிழ்நாடு மற்றும் கேரளா வனப்பகுதியில் அமைந்துள்ளது.



போடியில் இருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் குரங்கணி பகுதியில் சிறந்த சுற்றுலா பகுதியாக காணப்படுகிறது. இங்குள்ள சுருளி அருவி சுமார் 150 அடி உயரத்தில

இருந்து விழுகிறது. அருவி விழுந்த இடத்திலிருந்துவெகுதூரம் ஆறு போன்று காட்சியளிக்கும்.

### கும்பக்கரை அருவி

பெரிய பாறைகள் இடையே இருந்து வரும் அருவியாகும். கண்கவர் நீர்வீழ்ச்சி பார்ப்போரை பரவசமடையச் செய்யும். இந்தப் பகுதியில் குளிப்பதற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### போடி மெட்டு

போடியில் இருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்த போடி மெட்டு. 4500 அடி உயரத்தில் உள்ளது. இந்தப் பகுதியில் நிறைய திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. கேரளாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

### கௌமாரி அம்மன் கோவில்

தேனியில் இருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவில் இந்த கோவில் அமைந்துள்ளது. இதன் மேற்பகுதிக்கு செல்பவர்கள் இந்த அம்மனை வழிபட்டு சொல்வது வழக்கம்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## அணுமின் கழக மருத்துவமனையில் நர்ஸ், பார்மசிஸ்ட் பணிகள்

இந்திய அரசின் அணுசக்தித் துறையின் கீழ் ஹைதராபாத்தில் (தெலங்கானா), பழையகாயல் (தூத்துக்குடி, தமிழ்நாடு) - சிர்கோனியம் வளாகம் மற்றும் ராவத்பாட்டா (கோட்டா, ராஜஸ்தான்) ஆகிய அணுஎரிபொருள் வளாக மருத்துவமனைகளில் நிரப்பப்பட உள்ள மருத்துவம் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள் (குரூப் "ஏ, பி, சி") பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: Scientific Assistant - B (Radiographer)

வயது வரம்பு: 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: குறைந்தது Radiography 60% மதிப்பெண்களுடன் பி.எஸ்சி முடித்திருக்க வேண்டும் அல்லது ஏதாவதொரு துறையில் பி.எஸ்சி முடித்திருப்பதுடன் 1 ஆண்டு ரேடியோகிராபி படிப்பை முடித்திருக்க வேண்டும்.

பணி: Technician(X-ray Technician)

வயது வரம்பு: 18 முதல் 25-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: அறிவியல் பாடப்பிரிவில் +2 தேர்ச்சியுடன் ஒரு வருட எக்ஸ்ரே டெக்னீசியன், மெடிக்கல் ரேடியோ கிராபர் படிப்பை முடித்திருக்க வேண்டும்.

பணி: Scientific Assistant - B (Pathology Technician)


வயது வரம்பு: 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: ஏதாவதொரு பிரிவில் பி.எஸ்சி படிப்புடன் எம்எல்டி முடித்திருக்க வேண் டும் அல்லது ஏதாவதொரு பிரிவில் பி.எஸ்சி படிப்புடன் டிஎம்எல்டி முடித்திருக்க வேண்டும்.

எழுத்துத் தேர்வு, தொழிற் திறன் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் பணிக்கு தேர்வு செய்யப்படுவர். எழுத்துத் தேர்வில் General Awareness, Quantitative Aptitude மற்றும் தொழிற் பாடப்பிரிவுகளிலிருந்து கேள்விகள் கேட்கப்படும். எழுத்துத் தேர்வு ஆன்லைன் முறையில் நடத்தப்படும். எழுத்துத் தேர்வு தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும். Pharmacist, X-Ray Technician பணிக்கு ரூ. 100. Scientific Assistant, Nurse பணிக்கு ரூ.150. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும். எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர்கள், பெண்களுக்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்துவத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: www.nfc.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 18.4.2026

# 'ஜனநாயகன்' லீக் குறித்து ஆதாரமற்ற குற்றச்சாட்டு: தணிக்கை வாரியம் மறுப்பு



**மும்பை, ஏப். 13:**

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் மும்பை மண்டல அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

'ஜனநாயகன்' திரைப் படத்தை சினிமா தணிக்கை வாரியம் கசியவிட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. இது தவறாக வழிநடத்தும் குற்றச்சாட்டு. தணிக்கை வாரியம் கேடிஎம் ((Key Delivery Message) என்ற பாதுகாப்பு முறையை பின்பற்றுகிறது.

இந்த கேடிஎம் கடவுச் சொல் சினிமா தயாரிப்பாளரிடம் மட்டுமே இருக்கும்.

இந்த கடவுச் சொல் இல்லாமல் யாரும் படத்தை பார்க்க முடியாது.

ஜனநாயகன் படத்தின் டிசிபி (டிஜிட்டல் சினிமா தொகுப்பு) விண்ணப்பதாரரிடம் உரிய ஒப்புதலுடன் கடந்த 17-ம் தேதி மும்பையில் ஒப்படைக்கப் பட்டது. அப்போது முதல் அந்த நகல் அவர்களிடம்தான் உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டிக்கெட் பரிசோதனை மூலம் ரூ.160.75 கோடி வருவாய் - தெற்கு ரெயில்வே தகவல்

**சென்னை, ஏப்.13:**

தெற்கு ரெயில்வேயில் ரெயில் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் பயணிகளின் வசதிக்காக பல்வேறு புதிய ரெயில் சேவைகளை அறிமுகம் செய்து வருகிறது. இதுஒருபுறம் இருக்க, ரெயில்களில் பயணம் செய்யும் பயணிகள் சிலர் டிக்கெட் இன்றி பயணம் மேற்கொள்வது வாடிக்கையாகி வருகிறது.

இதை தடுக்கும் வகையில், டிக்கெட் பரிசோதகர்கள் மற்றும் சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்படுகிறது. இவர்கள் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யும் பயணிகளுக்கு அபராதம் விதித்து வருகின்றனர். இதன் மூலம் வரும் வருவாய் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.



அந்தவகையில், தெற்கு ரெயில்வேயில் கடந்த 2024-25-ம் நிதியாண்டில் டிக்கெட் பரிசோதனை முறையில் ரூ.129.82 கோடி வருவாய் கிடைத்துள்ளது. இந்த வருவாய் 2025-26-ம் நிதியாண்டில் ரூ.160.75 கோடியாக உயர்ந்திருப்பதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

டிக்கெட் பரிசோதனை முறையில் ஆண்டுக்கு ரூ.142.81 கோடி மட்டுமே ரெயில்வே வாரியம் இலக்காக நிர்ணயித்திருந்ததாகவும், ஆனால், இலக்கைவிட கூடுதலாக வருவாய் கிடைத்திருப்பதாகவும் அதிகாரிகள் கூறினர்.

டிக்கெட் பரிசோதனையில் வருவாய் அதிகரிப்பதால், முறையாக டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யும் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், இதை தடுக்க தெற்கு ரெயில்வே கூடுதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 15-ந்தேதி தொடங்குகிறது மீன்பிடி தடைக்காலம்..

**சென்னை, ஏப்.13:**

தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் கீழ், கடல் வளத்தைப் பாதுகாக்கவும் மீன் உற்பத்தியைப் பெருக்கவும் ஆண்டு தோறும் மீன்பிடி தடைக்காலம் 61 நாட்கள் கடைபிடிக்கப்படுகிறது. அதாவது ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலம் மீன்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் காலமாகும். இந்த காலத்தில் விசைப்படகுகளின் எந்திர இரைச்சல் மற்றும் ராட்சத வலைகளால் மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவே ஏப்ரல் 15-ந்தேதி முதல் ஜூன் மாதம் 14-ந்தேதி வரை கடலுக்கு 'ஓய்வு' அளிக்கப்படுகிறது.

இதன் மூலம் சிறிய மீன் குஞ்சுகள் அழிவதைத் தடுத்து, வருங்காலங்களில் மீன் வளம் பெருக வழிவகை செய்யப்படுகிறது. தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படும் இந்த மீன்பிடித் தடைக்காலம் வரும் 15-ந்தேதி புதன்கிழமை முதல் தொடங்குகிறது. இந்த தடை



அமலுக்கு வரும்போது மீனவர்கள் கடலில் இருக்கக்கூடாது என்பது விதிமுறை ஆகும்.

எனவே, ஏற்கனவே கடலுக்குச் சென்றுள்ள விசைப்படகுகள் அனைத்தும் ஏப்ரல் 14-ந்தேதி நள்ளிரவுக்குள் கரை திரும்ப அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதனால் குறுகிய தூர மீன்பிடிப்புக்காக விசைப்படகுகள் ஆழ்கடலுக்குச் செல்வது நேற்றே கடைசி நாளாக இருக்கும்.

இந்த மீன் தடையின் காரணமாக அடுத்த இரண்டு மாதங்களுக்கு ஆழ்கடல் மீன்வரத்து இருக்காது என்பதால், தடைக்காலத்திற்கு முந்தைய கடைசி ஞாயிற்றுக்கிழமையான (ஏப்ரல் 12) மீன் சந்தைகளில் விற்பனை வரலாறு காணாத உச்சத்தைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் சென்னை காசிமேடு, வானகரம், சிந்தாதிரிப்பேட்டை போன்ற மீன் மார்க்கெட்டுகளில் மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. இதனிடையே மீனவர்களுக்கு தடைக்காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.8 ஆயிரம், தேர்தல் காலம் என்பதால் தமிழக அரசு கடந்த மாதமே அவர்களது வங்கி கணக்கில் செலுத்திவிட்டது.

# தமிழக உள்துறைச் செயலர் மாற்றம்: மணிவாசனை நியமித்தது தேர்தல் ஆணையம்

**சென்னை, ஏப்.13:**

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியானது. அன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக பறக்கும் படைகள், நிலைக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வாகன சோதனை, கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதவிர, தமிழகத்துக்கு 250 கம்பெனி துணை ராணுவப் படையும் ஒதுக்கப்பட்டு, அவர்களும் தொடர்ச்சியாக தமிழகம் வந்தவண்ணம் உள்ளனர். இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அனைத்துக் கட்சியினரும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

8 எஸ்.பி.க்கள் மாற்றம்: தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு, புகார்கள் அடிப்படையில் அரசுத் துறை அதிகாரிகள் மாற்றம் செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில், விருதுநகர், நாமக்கல், கரூர் உட்பட 8 மாவட்ட எஸ்.பி.க்கள் ஏற்கெனவே மாற்றப்பட்டனர். பின்னர், தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்துக்கு அனுமதி மறுத்தது, காவல் துறை போதிய பாதுகாப்பு வழங்காதது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு புகார்கள் சென்றன.

புதிய டிஜிபி நியமனம்: இதையடுத்து, கடந்த ஏப்.2-ம் தேதி தமிழக காவல் துறையின் சட்டம் - ஒழுங்கு டிஜிபியாக இருந்த ஜி.வெங்கடராமன் மாற்றப்பட்டு, அவருக்கு பதிலாக, சந்தீப் ராய் ரத்தோர் நியமிக்கப்பட்டார்.

இதுதவிர, தாம்பரம் காவல் ஆணையர் ஏ.அமல்ராஜுக்கு பதிலாக சஞ்சய்குமார், மதுரை காவல் ஆணையர் ஜெ.லோகநாதனுக்கு பதிலாக அபிஷேக் தீக்ஷித் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மேற்கு மண்டல ஐ.ஜி.யாக இருந்த சரவண சுந்தர் மாற்றப்பட்டு ரம்யா பாரதி நியமிக்கப்பட்டார். சேலம் ஆட்சியராக அருண் தம்புராஜ், தூத்துக்குடி ஆட்சியராக விசு மகாஜன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, கடந்த ஏப். 8-ம் தேதி தமிழக தலைமைச் செயலராக இருந்த நா.முருகானந்தம் மாற்றப்பட்டு எம்.சாய்குமார் புதிய தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டார். நேற்று முன்தினம் சென்னை காவல் ஆணையர் அருண் மாற்றப்பட்டு, அவருக்கு பதிலாக அபின் தினேஷ் மோடக் புதிய காவல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், தமிழக உள்துறைச் செயலர் தீரஜ்குமாரை மாற்றிவிட்டு, அவருக்கு பதிலாக சுற்றுலா, பண்பாடு, அறநிலையத் துறை செயலராக இருந்த க.மணிவாசனை தமிழகத்தின் புதிய உள்துறைச் செயலராக நியமித்து தேர்தல் ஆணையம் நேற்று உத்தரவிட்டுள்ளது. கடந்த 1993-ம் ஆண்டு தமிழக பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான மணிவாசன், பொதுப்பணி, நீர்வளம் உள்ளிட்ட துறைகளின் செயலராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் டேவிட்சன்.. இதற்கிடையே, கடந்த 8-ம் தேதி தலைமைச் செயலர் மாற்றப்பட்டபோது, லஞ்ச ஒழிப்பு, ஆயுதப்படை டிஜிபி டேவிட்சன் தேவாசிர்வாதத்துக்கு பதிலாக சந்தீப் மிட்டலை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இந்த சூழலில், லஞ்ச ஒழிப்பு மற்றும் ஆயுதப்படை டிஜிபியாக நியமிக்கப்பட்ட சந்தீப் மிட்டலுக்கு, ஆயுதப்படை டிஜிபி பதவியை மட்டுமே அளித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம், லஞ்ச ஒழிப்பு டிஜிபியாக மீண்டும் டேவிட்சன் தேவாசிர்வாதமே தொடர்வதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# ஏப்ரல் 30-க்குள் சொத்துவரி செலுத்தினால் 5 சதவீதம் தள்ளுபடி: தூத்துக்குடி மாநகராட்சி அறிவிப்பு

**தூத்துக்குடி, ஏப்.13:**

தூத்துக்குடி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பல்வேறு வரிகளை பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் உடனடியாக செலுத்தி மாநகராட்சி நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாநகராட்சி கமிஷனர் பிரியங்கா கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:




தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் சொத்துவரி, காலியிட வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், கடை வாடகை, குத்தகை தொகை மற்றும் உரிமைத் தொகை உள்ளிட்ட வரிகளை நிலுவையின்றி செலுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நடப்பு நிதியாண்டிற்கான சொத்துவரியினை வரும் 30-4-2026-க்குள் செலுத்தும் வரி செலுத்துவோருக்கு 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்தச் சலுகையானது அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வரை கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் வரிகளை எளிமையான முறையில் செலுத்த மாநகராட்சி பல்வேறு வசதிகளை செய்துள்ளது.

நேரடியாக: மாநகராட்சி கணினி வரி வசூல் மையங்கள். இணையதளம் வழியாக: HTTPS://TNURBANEPAY.TN.GOV.IN என்ற முகவரி மூலம் 'QUICK PAYMENT' வசதியைப் பயன்படுத்தலாம்.

செயலிகள்: TN URBAN ESEVAI ஆண்ட்ராய்டு ஆப் மற்றும் GOOGLE PAY, PHONEPE, PAYTM, FEDMOBILE போன்ற UPI செயலிகள் மூலமாகவும் எளிதாகச் செலுத்தலாம்.

எதிர்காலத்தில் வரி செலுத்துவதை மேலும் எளிதாக்கும் வகையில், வரி விதிப்புதாரர்களின் கைபேசி எண்களை சொத்துவரி கணக்குடன் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே, அனைத்து வரி செலுத்துவோரும் தங்களது சரியான கைபேசி எண் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை மாநகராட்சி மைய அலுவலகம் அல்லது மண்டல அலுவலகங்களைத் தொடர்புகொண்டு உறுதிசெய்திட வேண்டும் என மாநகராட்சி கமிஷனர் அறிவுறுத்தியுள்ளார்.

## க்ரைம் கார்னர்

### 2 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**திருவள்ளூர், ஏப்.13:**

சென்னை ஆவடி அடுத்த பட்டாபிராம் பகுதியைச் சேர்ந்தவர் 36 வயது தொழிலாளி. இவர் கடந்த 2019-ம் ஆண்டு தனது முதல் மனைவியின் 16 வயது மகளையும், 2-வது மனைவியின் 13 வயது மகளையும் தொடர்ந்து பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி வந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்த புகாரின்பேரில் ஆவடி அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். பின்னர் அவர் திருவள்ளூர் போக்சோ கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கு திருவள்ளூர் மாவட்ட போக்சோ கோர்ட்டில் விசாரணை நடந்து வந்தது. வழக்கின் இறுதி விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி உமாமகேஸ்வரி, தனது சொந்த மகள்களை பாலியல் வன்கொடுமை செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து, தொழிலாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1.64 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். அபராத தொகையை செலுத்தத் தவறினால் கூடுதலாக 6 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட இரு சிறுமிகளுக்கும் தலா ரூ.5 லட்சம் இழப்பீடு அரசால் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து, ஆவடி அனைத்து மகளிர் போலீசார் குற்றவாளியை மீண்டும் புழல் சிறையில் அடைத்தனர்.

### பெண்ணுக்கு பாலியல் தொல்லை: போலீஸ் ஏட்டு மீது வழக்குப்பதிவு

**தூத்துக்குடி, ஏப்.13:**

தூத்துக்குடி அருகே உள்ள தெற்கு காலங்கரைப் பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி ஒருவர், உடல்நலக் குறைவு காரணமாக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவியாக அவரது மனைவி மருத்துவமனையில் தங்கியிருந்தார். அதே வார்டில், தூத்துக்குடி சிப்காட் காவல் நிலையத்தில் பணிபுரியும் போலீஸ் ஏட்டு ஒருவர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். நள்ளிரவு நேரத்தில், அந்த பெண்ணிடம் சென்ற போலீஸ் ஏட்டு, தனது செல்போனை சார்ஜ் செய்ய 'சார்ஜர்' உள்ளதா எனக் கேட்டுப் பேச்சுக் கொடுத்துள்ளார். அதனைத் தொடர்ந்து, அந்த பெண்ணிடம் அநாகரிகமாக நடந்துகொண்டதோடு, பாலியல் ரீதியான துன்புறுத்தல்களிலும் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் இந்த சம்பவம் குறித்து வெளியே யாரிடமாவது கூறினால் கொலை செய்து விடுவேன் என அந்த பெண்ணிற்கு அவர் மிரட்டலும் விடுத்துள்ளார். பாதிக்கப்பட்ட பெண் இதுகுறித்து தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்திய போலீசார், சம்பந்தப்பட்ட போலீஸ் ஏட்டு மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். சீருடையில் இருந்த காவலரே மருத்துவமனையில் இத்தகைய செயலில் ஈடுபட்டது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### கஞ்சா விற்ற வாலிபர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, ஏப்.13:**

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம், கீழமேடு பகுதியை சேர்ந்த சக்திவேல் மகன் விஜய் (வயது 20) என்பவர் சட்ட விரோதமாக கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சீவலப்பேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் சுபாஷ், மேற்சொன்ன வாலிபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில் திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் உத்தரவின்பேரில், விஜய் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று அடைக்கப்பட்டார். திருநெல்வேலி மாவட்டத்தில் மக்களின் பாதுகாப்பை கருதி, சட்ட ஒழுங்கை பாதுகாக்கவும், குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், அதனை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 44 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### ஹைதராபாத்தை வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ் அணி

**முலான்பூர், ஏப்.13:**

ஐபிஎல் தொடரில் நேற்று நியூ சண்டிகரில் உள்ள முலான்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 219 ரன்கள் குவித்தது. தொடக்க வீரரான அபிஷேக் சர்மா 28 பந்துகளில், 8 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 74 ரன்கள் விளாசினார்.

மற்றொரு தொடக்க வீரரான டிராவிஸ் ஹெட் 23 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 38 ரன்கள் சேர்த்தார். அபிஷேக் சர்மாவின் அதிரடியால் ஹைதராபாத் அணி 5.5 ஓவர்களிலேயே 100 ரன்களை குவித்தது.

முதல் விக்கெட்டுக்கு அபிஷேக் சர்மா, டிராவிஸ் ஹெட் ஜோடி 49 பந்துகளில் 120 ரன்களை வேட்டையாடியது. கடும் அச்சுறுத்தல் கொடுத்த இந்த ஜோடியை 9-வது ஓவரை வீசிய ஷசாங் சிங் சீரான இடைவெளியில் வெளியேற்றினார்.

இஷான் கிஷன் 27, ஹெய்ன்ரிச் கிளாசன் 39, அங்கித் வர்மா 18, சலில் அரோரா 9 ரன்களில் நடையை கட்டினர். முதல் 8 ஓவர்களில் 120 ரன்களை குவித்த ஹைதராபாத் அணியில் அடுத்த 12 ஓவர்களில் 99 ரன்களை மட்டுமே எடுக்க முடிந்தது. பஞ்சாப் அணி தரப்பில் ஷசாங் சிங் 3 ஓவர்களை வீசி 20 ரன்களை வழங்கி 2 விக்கெட்களை கைப்பற்றினார். அர்ஷ்தீப் சிங் 4 ஓவர்களை வீசி 50 ரன்களை தாரைவார்த்து 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

220 ரன்கள் இலக்குடன் பேட் செய்த பஞ்சாப் கிங்ஸ் அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 223 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. கேப்டன் ஸ்ரேயஸ் ஐயர் 33 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 69 ரன்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார். முன்னதாக தொடக்க வீரர்களான பிரியன்ஷ் ஆர்யா 20 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 57 ரன்களும், பிரப்சிம்ரன் சிங் 25 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 51 ரன்களும் விளாசி ஆட்டமிழந்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 6.2 ஓவர்களில் 99 ரன்கள் குவித்திருந்தது. 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு இது 3-வது வெற்றியாக அமைந்தது. 4 ஆட்டங்களில் விளையாடி உள்ள அந்த அணி 7 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளது. ஹைதராபாத் அணிக்கு இது 3-வது தோல்வியாக அமைந்தது. 4 ஆட்டங்களில் விளையாடி உள்ள அந்த அணி 2 புள்ளிகளுடன் பட்டியலில் 6-வது இடத்தில் உள்ளது.

### கேண்டிடேட்ஸ் செஸ்: வைஷாலி வெற்றி

உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் நடப்பு சாம்பியனுடன் மோதும் வீரர், வீராங்கனையை தேர்வு செய்வதற்கான கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் சைப்ரஸ் நாட்டில் நடந்து வருகிறது. 14 சுற்றுகளை கொண்ட இந்த போட்டியில் நேற்று 11-வது சுற்று ஆட்டங்கள் நடந்தன.

இதில் பெண்கள் பிரிவில் ஒரு ஆட்டத்தில் தமிழக வீராங்கனை ஆர்.வைஷாலி, ரஷியாவின் அலெக்சாண்ட்ரா கோரியச்சினாவுடன் மோதினார். கருப்பு நிற காய்களுடன் ஆடிய வைஷாலி 45-வது நகர்த்தலில் அலெக்சாண்ட்ரா கோரியச்சினாவை வீழ்த்தி 4-வது வெற்றியை பெற்றார். 11-வது சுற்று முடிவில் வைஷாலி 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

## விடுமுறை தினம்: கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**கன்னியாகுமரி, ஏப்.13:**

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள்.



இந்த நிலையில் இன்று ஞாயிறு விடுமுறையையொட்டி காலையில் இருந்தே கன்னியாகுமரியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை, சன்ரைஸ் பாயின்ட் போன்ற பகுதிகளில் நள்ளிரவு முதல் காத்திருந்து சூரிய உதயத்தை கண்டு ரசித்தனர்.

அதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். படகுத்துறையில் இருந்து சுற்றுலா பயணிகள் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று பார்த்து ரசித்து வருகின்றனர். காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள தமிழன்னை பூங்கா, சன்செட் பாயிண்ட், அரசு அருங்காட்சியகம், சுற்றுச்சூழல் பூங்கா உள்பட அனைத்து இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது.

## தமிழகம் முழுவதும் 'பூத் சிலிப்' வழங்கும் பணி தொடங்கியது!



**சென்னை, ஏப்.13:**

தமிழகம் முழுவதும் வாக்காளர் தகவல் சீட்டுகள் (பூத் சிலிப்) வழங்கும் பணி (ஏப். 12) தொடங்கியது.

வாக்காளர் தகவல் சீட்டு அச்சிடப்பட்டு, இன்று முதல் வீடு வீடாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

வாக்குப் பதிவு சதவீதத்தை அதிகரிக்க விரிவான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தவர்களில் பெரும்பாலானோருக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கும் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், அதில் வரிசை எண் மற்றும் பாகம் எண் வழக்கத்தைவிட இம்முறை பெரிதாக அச்சிடப்பட்டுள்ளது. அதனுடன் க்யூ ஆர் குறியீடும் இடம்பெற்றிருக்கும்.

வாக்குப் பதிவுக்கு ஐந்து நாள்களுக்கு முன்பாக வரும் 17-ஆம் தேதிக்கு முன்பாக அனைத்து வாக்காளர்களுக்கும் தகவல் சீட்டுகளை விநியோகித்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பூத் சிலிப்பை வாக்களிப்பதற்கான அடையாள ஆவணமாகப் பயன்படுத்த இயலாது. வாக்காளர் அடையாள அட்டை அல்லது அதற்கு மாற்றாக ஆதார் உள்பட 12 ஆவணங்களைப் பயன்படுத்தலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## வணிகச் செய்திகள்

### இந்தியாவின் உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி ஒரு மாதத்தில் 40%-லிருந்து 60% ஆக உயர்வு

**புதுடெல்லி, ஏப்.13:**

இந்தியாவின் எல்பிஜி உள்நாட்டு உற்பத்தி ஒரு மாதத்துக்குள் 40 சதவீதத்தில் இருந்து 60% ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் சுஜாதா சர்மா கூறும்போது, "இந்தியாவிடம் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. நமது சுத்திகரிப்பு நிலையங்கள் அவற்றின் முழுத் திறனில் இயங்கி வருகின்றன. திரவ மயமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவின் (எல்பிஜி) உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. இது நமது தேவையில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது" என்றார்.


சமீபத்திய தரவுகளின்படி, 2025-26-ம் ஆண்டில் இந்தியாவின் வருடாந்திர எல்பிஜி நுகர்வு 3.3 கோடி டன்களாக இருந்தது. பிப்ரவரி 28-ல் வெடித்த மேற்கு ஆசியப் போர் காரணமாக ஏற்பட்ட விநியோகத் தடைகளால், மார்ச் மாதத்தில் எல்பிஜி நுகர்வு கடுமையாகக் குறைந்துள்ளதாக மாதாந்திர தரவுகள் காட்டுகின்றன. போருக்கு முன்பு, இந்தியா தனது எல்பிஜி தேவையில் 60 சதவீதத்தை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்தது. இதில் பெரும்பகுதி மேற்கு ஆசியாவில் இருந்து, குறிப்பாக கத்தாரில் இருந்து இறக்குமதியானது.

எல்பிஜி நுகர்வு ஜனவரியில் 30 லட்சம் டன்னாகவும், பிப்ரவரியில் 28 லட்சம் டன்னாகவும் இருந்தது. இது மார்ச் மாதத்தில் 23.79 லட்சம் டன்னாகக் குறைந்தது. இது ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 26.6% சரிவாகும்.

## சென்னை ரிப்பன் மாளிகையில் ராட்சத பலூன் பறக்கவிட்டு தேர்தல் விழிப்புணர்வு

**சென்னை, ஏப்.13:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை வருகிற 23-ந்தேதி நடைபெற இருக்கிறது. இதையொட்டி, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 'தேர்தல் திருவிழா-தமிழ்நாட்டின் பெருவிழா' எனும் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு வகைகளில் நடத்தப்பட்டு வருகிறது.



அந்தவகையில், சென்னை மாநகராட்சி தலைமையிடமான ரிப்பனர் மாளிகை, எழிலகக் கட்டிடம், அண்ணாசாலை மற்றும் கோயம்பேடு மேம்பாலம் அருகில் உள்ளிட்ட முக்கியமான 4 இடங்களில் 'தேர்தல் திருவிழா-தமிழ்நாட்டின் பெருவிழா' 100 சதவீதம் வாக்களிப்போம், வாருங்கள் என்கிற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களுடன் கூடிய ராட்சத பலூன்கள் பறக்கவிடப்பட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# 22 நாடுகளின் பிரதிநிதிகள்! தேர்தல் ஆணையத்துக்கு பாராட்டு

புதுச்சேரி, ஏப்.13:

‘கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் கடந்த ஏப்.8, 9 ஆகிய தேதிகளில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பயணம் மேற்கொ ண்டனர்.

நன்கு திட்டமிடப்பட்ட தளவாட ஏற்பாடுகள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின்கீழ் வாக்கு ப்பதிவு உபகரணங்களுடன் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் பணியாளர்களின் முறையான நகர்வை பார்வையிட்டனர்.

வாக்கு ப்பதிவு மையங்களில் 100 சதவீத இணையவழி கண்காணிப்புக்காக, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறைகளுக்கு வருகை தந்த அவர்கள்,



உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினர். வாக்குப்பதிவு நாளில் மாதிரி வாக்குப்பதிவு முறையை பார்வையிட்ட அவர்கள், வாக்குச்சாவடிகளுக்கும் நேரில் சென்றனர். முழுவதும் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளே நிர்வகிக்கும் வாக்குச்சாவடி களுக்கு வரவேற்பு தெரிவித்த அவர்கள், அனைத்து தரப்பு வாக்காளர்களுக்கான வசதிகளைக் குறிப்பிட்டு பாராட்டினர். ‘இந்திய தேர்தல்களின் வீச்சு, துல்லியத்தன்மை, துடிப்பான செயல்முறை ஈர்ப்புக்குரியது; இந்தத் தேர்தல்கள், ஒட்டுமொத்த உலகுக்கும் உண்மையான ஜனநாயகத் திருவிழா’ என்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் புகழாரம் சூட்டியதாக தேர்தல் ஆணைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.22 கோடி

திருப்பதி, ஏப்.13:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 65 ஆயி ரத்து 534 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 24 ஆயிரத்து 560 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தான அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 22 லட்சம் ஆகும்.

## மேற்குவங்காளம்: முதற்கட்ட தேர்தலில் வாக்களிக்க 3.60 கோடி பேர் தகுதி

கொல்கத்தா, ஏப்.13:

மேற்குவங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. அத ன்படி, 152 தொகுதிகளுக்கு முதற்கட்ட தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது.

மேலும், எஞ்சிய 142 தொகுதிகளுக்கு 2ம் கட்ட தேர்தல் வரும் 29ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள அடுத்த மாதம் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இந்நிலையில், மேற்குவங்காளத்தில் 152 தொகுதிகளுக்குமான முதற்கட்ட தேர்தலில் வாக்களிக்க 3 கோடியே 60 லட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முதற்கட்ட தேர்தலில் 16 மாவட்டங்களில் உள்ள 142 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன. முதற்கட்ட தேர்தலில் வாக்களிக்க தகுதிபெற்ற 3 கோடியே 60 லட்சம் வாக்காளர்களில் 1 கோடியே 84 லட்சம் வாக்காளர்கள் ஆண்கள் என்றும், 1 கோடியே 75 லட்சம் வாக்காளர்கள் பெண்கள் என்றும், 465 வாக்காளர்கள் மூன்றாம் பாலினத்தவர்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## காரைக்கால் மீனவர்கள் 12 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை



காரைக்கால், ஏப்.13:


கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் தமிழகம் மற்றும் காரைக்கால் மீனவர்களை எல்லை தாண்டி அத்துமீறி மீன் பிடித்ததாக கூறி கைது செய்வதை இலங்கை கடற்படை வாடிக்கையாக கொண்டுள்ளது. இலங்கை கடற்படையின் இந்த அட்டூழியத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

காரைக்கால் மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இலங்கை காரைநகர் கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படை, மீனவர்களை சிறைபிடித்து சென்றது. சிறைபிடித்த 12 மீனவர்களையும் காங்கேசன் துறைமுகத்துக்கு இலங்கை கடற்படையினர் அழைத்துச் சென்றனர். ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 12 மீனவர்களையும் சிறைபிடித்தனர்.

## ஒடிசாவில் ரூ.95 லட்சம் பணமோசடி செய்ததாக பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது வழக்கு பதிவு

புவனேஸ்வர், ஏப்.13:

ஒடிசா மாநில அரசின் உள்துறை கூடுதல் செயலாளராக பணியாற்றி வருபவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி அர்ச்சனா தாஸ். இவர் கட்டாக் மாவட்ட மேம்பாட்டு ஆணைய (CDA) திட்டப் பகுதியில் நிலம் தருவதாக வாக்குறுதியளித்து, மாற்றுத்திறனாளியான கமல் குமார் பவ்சிங்கா என்பவரிடம் இருந்து 95 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



கமல் குமாரிடம் பணத்தை பெற்ற அர்ச்சனா தாஸ், அவர் கூறியபடி நிலத்தை வழங்கத் தவறியதாகவும், பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. மேலும், கமல் குமார் தனது பணத்தை திருப்பி கேட்டபோது அவருக்கு அர்ச்சனா தாஸ் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்டாக் காவல் நிலையத்தில் கமல் குமார் தரப்பில் புகார் அளிக்கப்பட்ட நிலையில், இந்த புகார் மீதான விசாரணைக்கு அர்ச்சனா தாஸ் ஒத்துழைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்து, அரசு ஊழியர்கள்/ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கான விதிகளின்படி, அர்ச்சனா தாஸ் மீது முறைப்படி நடவடிக்கை எடுக்க அனுமதி கோரி, மாநில உள்துறை மற்றும் பொது நிர்வாகத் துறைக்கு காவல்துறை ஆணையரகம் கடிதம் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரபல பின்னணி பாடகி ஆஷா போஸ்லே காலமானார்!



புதுடெல்லி, ஏப்.13:

புகழ்பெற்ற திரைப்பட பின்னணி பாடகி ஆஷா போஸ்லே (92) உடல்நலக்குறைவால் மும்பையில் (ஏப்ரல் 12) காலமானார்.

மகாராஷ்டிர மாநிலம் சாங்கிலியில் 1933 ஆம் ஆண்டு செப். 8இல் பிறந்தவர் ஆஷா போஸ்லே. நெஞ்சு தொற்று, கடுமையான உடல் சோர்வு காரணமாக மும்பை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி பாடகி ஆஷா போஸ்லேவின் உயிர் இன்று பிரிந்தது.

பல்வேறு இந்திய மொழிகளில் 12,000-க்கும் மேற்பட்ட பாடல்களை ஆஷா போஸ்லே பாடியுள்ளார். 80 ஆண்டுகளுக்கும் மேலாக அவரின் கலைப் பயணம் நீடித்தது.

பன்முகத்தன்மைக்குப் பெயர் பெற்ற அவர், காதல் பாடல்கள் தொடங்கி கஜல், துள்ளலான பாடல்கள் வரை பல மறக்க முடியாத மெல்லிசைப் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் மறைந்த புகழ்பெற்ற திரைப்பட பின்னணி பாடகி லதா மங்கேஷ்கரின் தங்கை ஆவார்.

## சட்டக் கட்டமைப்புகள் முழுவதிலும் சீர்திருத்தம்: உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வலியுறுத்தல்

புதுடெல்லி, ஏப்.13:

டில்லியில் இந்திய வழக்கு ரைஞர்கள் சங்கம் சார்பில் 10 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார சக்தியாக பாரதத்தை உருவாக்கும் வகையில் சட்ட சீர்திருத்தம் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு, ‘சட்ட விதி மாநாடு 2026’ நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தலைமை நீதிபதி சூர்ய காந்த் பேசியதாவது:

10 டிரில்லியன் டாலர் பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுப்பது நிச்சயம்.

இந்த 10 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை மூலதனத்தாலோ அல்லது கொள்கையாலோ மட்டும் உருவாக்க முடியாது.

இதற்கு நல்ல சட்ட அமைப்பும் அவசியமாகும். அந்த சட்ட அமைப்பால்தான்,



சட்ட அமலாக்கத்தை உறுதி செய்யவும், வாக்குறுதிகளை செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் முடியும். அத்தகைய நல்ல சட்ட அமைப்பை உருவாக்க நமது நாட்டில் திறமையான சட்ட நிபுணர்கள் பலர் உள்ளனர் என்றார்.

இதேபோல், டில்லியில் நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சியில் சூர்ய காந்த் பேசுகையில், ‘சட்ட அமைப்புகளில் தொழில்நுட்பங்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். தொழில்நுட்பத்தை நிர்வாகம் செய்வதற்கான காரணியாக மட்டும் பார்க்கக் கூடாது. சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை தொழில்நுட்பமே வலுப்படுத்து கிறது.

சாதாரண மக்களுக்கும், வழக்குரைஞர்களுக்கும், நீதித் துறை சம்பந்தப்பட்டோருக்கும் எப்படி பயனளிக்கிறது என்பதை வைத்தே, நீதித் துறை சீர்திருத்தம் மதிப்பிடப்படுகிறது.

ஒவ்வொரு நீதிமன்றத்திலும் தொழில்நுட்பக் கருவிகளை மட்டும் வைத்தால் போதாது. காகிதம் இல்லாமல் நீதிமன்றம் செயல்படுவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும்’ என்றார்.

## மேற்குவங்காளம்: டிஐஜி உள்பட 12 போலீஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் - தேர்தல் ஆணையம் அதிரடி

கொல்கத்தா, ஏப்.13:

மேற்குவங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்ட தேர்தல் 23ம் தேதியும், 2ம் கட்ட தேர்தல் 29ம் தேதியும் நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இதனிடையே, தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அதேவேளை, தேர்தலை வன்முறை உள்பட எந்தவித பிரச்சினைகளும் இன்றி நடத்த தேர்தல் ஆணையமும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், மேற்குவங்காளத்தில் டிஐஜி உள்பட 12 பேரை பணியிடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மேற்கு வங்காளத்தில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் தொடர்ந்து அதிரடியாக இடமாற்றம் செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடக மலையில் காணாமல் போன கேரள சிறுமி 4 நாட்களுக்கு பின் சடலமாக மீட்பு

பெங்களூரு, ஏப்.13:

கர்நாடக மாநிலம் சிக்கமகளூருவில் காணாமல் போன கேரள சிறுமி 4 நாட்களுக்கு பிறகு 1,500 அடி ஆழ பள்ளத்தாக்கில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த ஸ்ரீநந்தா (15), கடந்த 7-ம் தேதி தனது பெற்றோர், உறவினர்கள் 40 பேருடன் கர்நாடகாவுக்கு சுற்றுலா வந்தார். அன்று மாலை 6 மணியளவில் சிக்கமகளூருவில் உள்ள சந்திரோனா மலைப்பகுதிக்கு அனைவரும் சென்று இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தனர். அதன்பிறகு ஸ்ரீநந்தா, மாணிக்தாரா அருவிக்கு அருகில் சென்று புகைப் படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

மாலை 7 மணியளவில் இருட்டிய நேரத்தில் ஸ்ரீநந்தா காணாமல் போனது தெரிய வந்தது. இதையடுத்து அவரது பெற்றோர் சிக்கமகளூரு காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

சிக்கமகளூரு காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திரகுமார், வனத்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மீட்புப் படையினர் அடங்கிய 60 குழுக்களை அமைத்து தேடுதல் வேட்டையைத் தொடங்கினார். இரவும் பகலுமாக நடந்த தேடுதல் வேட்டையில், மனிதர்கள் செல்ல முடியாத செங்குத்தான பள்ளத்தாக்குப் பகுதிகளில் தேடுவதற்கு அதிநவீன ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 1,500 அடி பள்ளத்தாக்கில் சிறுமி சடலமாக மீட்கப்பட்டார். அவரது உடலை கண்டு பெற்றோரும் உறவினர்களும் கண்ணீர் விட்டு அழும் காட்சி சோகத்தை ஏற்படுத்தியது.

## வாக்கு வங்கி அரசியலுக்கு முடிவு கட்ட பொது சிவில் சட்டம்: மேற்கு வங்கத்தில் பிரதமர் மோடி வாக்குறுதி

கொல்கத்தா, ஏப்.13:

மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சிக்கு வந்தால், வாக்கு வங்கி அரசியலுக்கு நிரந்தரமாக முடிவுகட்டும் வகையில் பொது சிவில் சட்டம் அமலாக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி வாக்குறுதி அளித்தார்.

மேற்கு வங்கத்தில் வரும் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளும் திரிணமூல் காங்கிரஸும், பாஜகவும் பலப்பரீட்சை நடத்தும் இந்தத் தேர்தலையொட்டி, அரசியல் கட்சியினர் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் முர்ஷிதாபாத் மாவட்டத்தின் ஜாங்கிபூர், பூர்பா வர்தமான் மாவட்டத்திலுள்ள கத்வா ஆகிய இடங்களில் சனிக்கிழமை நடைபெற்ற பாஜக பிரசாரக்



கூட்டங்களில் பிரதமர் மோடி பங்கேற்றார். ஜாங்கிபூர் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

பாஜகவைப் பொருத்தவரை, நாட்டின் பாதுகாப்பே முதன்மையானது. தாய்-தாய்மண்-மக்கள் என்ற தனது பழைய முழக்கத்தை மறந்துவிட்ட திரிணமூல் காங்கிரஸ், ஊடுருவல்காரர்களின் வாக்குகளுடன் மீண்டும் ஆட்சியமைக்க விரும்புகிறது.

குறிப்பிட்ட தரப்பினரை திருப்திப்படுத்தும் இந்த ‘ஆட்டத்தையும்’, வாக்கு வங்கி அரசியலையும் மேற்கு வங்கம் இனியும் சகித்துக் கொள்ளாது.

சட்டவிரோத ஊடுருவலால் மக்கள்தொகை ரீதியிலான மாற்றம் வேகமாக நிகழ்ந்து வருகிறது. எனவே, மாநிலத்தின் அடையாளம் மற்றும் எதிர்காலத்தைக் காப்பதற்கான தேர்தல் இதுவாகும்.

பொது சிவில் சட்டம் அமலாக்கப்படும்: சொந்த மாநிலத்திலேயே வங்காளிகள் சிறுபான்மையினராக மாற நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இங்கு பாஜக ஆட்சிக்கு வந்ததும், வாக்கு வங்கி அரசியலுக்கு நிரந்தரமாக முடிவுகட்ட பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும். மேற்கு வங்க மக்களிடம் கொள்ளையடித்தவர்கள், ஊழலைப் பாதுகாத்தவர்கள், அடக்குமுறையாளர்கள் அனைவரும் சிறையில் தள்ளப்படுவர்.

ஆங்கிலேயர்கள் முதல் காங்கிரஸ், இடதுசாரிகள் வரை ஆணவ ஆட்சியாளர்களைத் தூக்கியெறிந்த வரலாற்றைக் கொண்டது மேற்கு வங்கம். இப்போது திரிணமூல் காங்கிரஸின் முறை. தேர்தலில் தோற்றுவிடுவோம் என்பதை உணர்ந்துகொண்ட திரிணமூல் காங்கிரஸ், சதித் திட்டங்களில் ஈடுபட்டு, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மூலம் உருவாக்கப்பட்ட போலி விடியோக்களைப் பரப்புகிறது.

இத்தகைய விடியோக்களுக்கு மக்கள் யாரும் இரையாகிவிடக் கூடாது என்றார்.

‘ஊடுருவல்காரர்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டுங்கள்’: கத்வா பிரசாரக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, மேற்கு வங்கத்தின் தென் பகுதிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ள மதுவா, நாமசூத்ரா சமூகத்தினர் (ஹிந்து அகதிகள்) பலனடையும் வகையில் குடியுரிமை திருத்தச் சட்ட அமலாக்கம் விரைவுபடுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

## அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தரின் முழு உருவ சிலை திறப்பு



**வாஷிங்டன், ஏப்.13:**

அமெரிக்கா - சியாட்டில் மாநகரின் மையப் பகுதியான புகழ்பெற்ற வெஸ்ட்லேக் சதுக்கத்தில் சுவாமி விவேகானந்தரின் சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்திய கலாசார உறவுகளுக்கான கவுன்சில் பரிசாக வழங்கிய இச்சிலையை சியாட்டில் மேயர் கேட்டி வில்சன் திறந்து வைத்தார். அமெரிக்காவில் ஒரு மாநகர அரசால் விவேகானந்தர் சிலை நிறுவப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்தச் சிலை அமைந்துள்ள வெஸ்ட்லேக் சதுக்கம் மிகவும் புகழ்பெற்ற இடமாகும். இது நாளொன்றுக்கு சுமார் 4 லட்சம் மக்கள் வந்து செல்லும் பகுதியாகும். அமேசான் தலைமையகம் (THE SPHERES), சியாட்டில் மாநாட்டு மையம் மற்றும் மோனோரயில் நிலையம் போன்ற முக்கிய இடங்களுக்கு மிக அருகில் இந்த சிலை அமைந்துள்ளது. இதன் மூலம், மாதந்தோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் விவேகானந்தரின் திருவுருவத்தைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சுவாமி விவேகானந்தரின் இந்த அற்புதச் சிலையை இந்தியாவின் புகழ்பெற்ற சிற்பி நரேஷ் குமார் குமாவத் செதுக்கியுள்ளார். இவர் இதுவரை 80-க்கும் மேற்பட்ட நாடுகளில் 600-க்கும் மேற்பட்ட சிலைகளை நிறுவி, இந்தியக் கலையைப் உலகெங்கும் கொண்டு சேர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானுக்கு ஆயுதங்களை வழங்கினால் சீனா பெரும் சிக்கல்களை சந்திக்கும் - டிரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஏப்.13:**

நிலையற்ற போர்நிறுத்தத்திற்கு மத்தியில் ஈரானுக்கு ஆயுதங்களை அனுப்பினால் பெரும் சிக்கல்களை சந்திக்க நேரிடும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சீனாவை எச்சரித்துள்ளார்.

அடுத்த சில வாரங்களில் ஈரானுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்க சீனா தயாராகி வருவதாக அமெரிக்க உளவுத்துறையை மேற்கோள் காட்டி வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, வெள்ளை மாளிகையிலிருந்து புளோரிடாவுக்குப் புறப்பட்டபோது டிரம்ப் இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளார்.

இதற்கிடையில் சீனா இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. வாஷிங்டனில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் மோதலில் ஈடுபட்டுள்ள எந்தத் தரப்புக்கும் சீனா ஒருபோதும் ஆயுதங்களை வழங்கியதில்லை கேள்விக்குரிய தகவல் உண்மையற்றது என்று கூறியுள்ளார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் பரபரப்பூட்டும் செய்திகளையும் வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அந்த செய்தித் தொடர்பாளர் அமெரிக்காவை வலியுறுத்தினார்.

## ஐக்கிய அரபு அமீரக வெளியுறவுத்துறை மந்திரியுடன் ஜெய்சங்கர் சந்திப்பு

**அபுதாபி, ஏப்.13:**

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி 4 நாட்கள் பயணமாக மொரீசியஸ், ஐக்கிய அரபு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அதன்படி, மொரீசியஸ் சென்ற ஜெய்சங்கர் 9வது இந்திய பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்றார்.

மொரீசியஸ் சுற்றுப்பயாத்தை நிறைவு செய்த ஜெய்சங்கர் நேற்று ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்றார். ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபி சென்ற ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவுத்துறை மந்திரி அப்துல்லா பின் சயத் அல் நஹ்யானை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம், மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

## "எங்களை அச்சுறுத்திய ஈரான் இப்போது உயிர்பிழைக்கப் போராடுகிறது" - நெதன்யாகு

**டெல் அவிவ், ஏப்.13:**

அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தைதோல்வியடைந்த நிலையில், "நம்மை முற்றிலுமாக அழித்துவிடுவோம் என்று ஈரான் அச்சுறுத்தியது. ஆனால், இப்போது அவர்களே உயிர் பிழைக்கப் போராடுகிறார்கள்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விமர்சித்துள்ளார்.



இதுகுறித்து பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "ஈரானுக்கு எதிரான நடவடிக்கை மூலம், அவர்களின் அணு ஆயுதம் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களை நசுக்குவதில் வெற்றி பெற்றுள்ளோம். இந்த நடவடிக்கை இன்னும் முடிவடையவில்லை, ஆனால் நாம் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்துள்ளோம் என்பது ஏற்கெனவே தெளிவாகியுள்ளது.

காசாவில் ஹமாஸ், லெபனானில் ஹிஸ்புல்லா, சிரியாவில் அசாத் ஆட்சி, ஈராக்கில் உள்ள போராளிக் குழுக்கள், ஏமனில் ஹவுதிகள் என ஈரான் நம் கழுத்தை நெரித்துச் சுற்றி வளைக்க முயன்றது.

ஆனால் நாம் தான் அவர்களின் கழுத்தை நெரிக்கிறோம். அவர்கள் நம்மை முற்றிலுமாக அழித்துவிடுவதாக அச்சுறுத்தினார்கள். ஆனால், இப்போது அவர்களே உயிர்பிழைக்கப் போராடுகிறார்கள்" என்று கூறினார்.

பாகிஸ்தானில் அமெரிக்காவும் ஈரானும் நேற்று பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், நெதன்யாகுவின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்தன.

அமெரிக்கா - ஈரான் இடையிலான இந்தப் பேச்சுவார்த்தை எந்த முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

## ஈரானின் மோஜ்தபா முகம் சிதைந்து பலத்த காயம்: ஒரு கால் துண்டிக்கப்பட்டதாக அமெரிக்கா தகவல்

**தெஹ்ரான், ஏப்.13:**

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படை நடத்திய தாக்குதலில் ஈரான் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரது மகன் மோஜ்தபா காமேனி (56), புதிய உச்சத் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் இஸ்ரேல், அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தியதில் அவரும் காயமடைந்தார்.



அமெரிக்கா நடத்திய தாக்குதலில் அவர் தீவிர காயமடைந்திருப்பது தெரியவந்துள்ளது. அவரது உடல், முகம் ஆகியவை உருக்குலையும் வகையில் காயத்தின் தன்மை தீவிரமாக இருப்பதாக அங்கிருந்து வரும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரத்தில், அவர் மனதளவில் திடமாக இருப்பதாகவும், அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. போர், பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம் தொடர்பான விஷயங்களை அவரிடம் பகிர்ந்து வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.


அதே நேரம் மோஜ்தபா காமேனி எங்கு தங்க வைக்கப்பட்டுள்ளார். அவரது உடல் நிலை எப்படி இருக்கிறது. அவருடைய உண்மையான நிலை என்ன, அவருக்கு என்ன மாதிரியான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன என்பது தொடர்பாக இதுவரை ஈரான் வெளிப்படையாக எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை.

அமெரிக்க உளவுத்துறை வட்டாரங்கள் கூறும்போது, "அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் மோஜ்தபா தனது காலை இழந்துவிட்டார்" என்று தெரிவித்துள்ளன.

## கடல் கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்க முடியாததால் ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதில் சிக்கல் நீடிப்பு

**தெஹ்ரான், ஏப்.13:**

அமெரிக்கா உடனான போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளை ஈரான் ராணுவம் வீசியுள்ளது. குறிப்பாக கடலுக்கு அடியிலும், சில நூறு அடி ஆழத்திலும் கடலுக்கு மேலேயும் கண்ணி வெடிகள் வீசப்பட்டன. இதனால் சரக்குக் கப்பல் போக்குவரத்து முடங்கி உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எரிவாயுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.



தற்போது அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை உடனயாக திறக்க வேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து கடலுக்கு மேலே மிதந்த கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் அகற்றி உள்ளது. ஆனால் கடலுக்கு அடியிலும் சில நூறு அடி ஆழத்திலும் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எங்கெல்லாம் கண்ணிவெடிகள் வீசப்பட்டன என்பது குறித்தும் தெளிவான விவரங்கள் இல்லை.

இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக ஈரான் அரசு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், வழக்கமான ஹார்முஸ் ஜலசந்தி பாதையைத் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதோடு எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது தொடர்பான வரைபடத்தையும் வெளியிட்டிருக்கிறது. இந்தப் பாதை வழியாக நேற்று முன்தினம் 10 எண்ணெய் கப்பல்கள் மட்டும் கடந்து சென்றன.

இதுகுறித்து சர்வதேச பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கூறியதாவது: ஈரான் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதலை தொடங்கிய உடன், ஈரான் ராணுவத் தரப்பில் ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் சிறிய ரக படகுகள் மூலம் கடல் கண்ணிவெடிகள் வீசப்பட்டன. அவற்றை முறையாக அகற்றும் தொழில்நுட்பம் ஈரானிடம் இல்லை.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடம் மட்டுமே கடல் கண்ணிவெடிகளை அகற்றும் சிறப்பு கப்பல்கள் உள்ளன. ஆனால், அந்த கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் நுழைய ஈரான் ராணுவம் தடை விதித்துள்ளது. இதன் காரணமாக இந்த ஜலசந்தியின் மிக குறுகிய பாதை வழியாகவே கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது.

## அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை தோல்வி: பாகிஸ்தானில் இருந்து புறப்பட்ட ஈரான் குழு



**லாகூர், ஏப்.13:**

அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், அரபிக்கடலில் ஹர்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளது.

இதனால், அரபு நாடுகளில் இருந்து சர்வதேச சந்தைக்கு கச்சா எண்ணெய் கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் வரத்து குறைவால் சர்வதேச சந்தையில் விலை அதிகரித்து உலகின் பல்வேறு நாடுகளில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளது.

இதனிடையே, ஈரான் , அமெரிக்கா இடையே தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கடந்த 8ம் தேதி அமலுக்கு வந்த போர் நிறுத்தம் 2 வாரங்களுக்கு அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. இந்த போர் நிறுத்த காலகட்டத்தில் இரு தரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு மோதலை தடுக்க முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி போர் நிறுத்தம், அமைதி பேச்சுவார்த்தை குறித்து இரு தரப்பும் பாகிஸ்தானில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. இந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸ், ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பஹர் கலிபாப் தலைமையிலான குழுக்கள் இடம்பெற்றிருந்தன. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று தொடங்கிய பேச்சுவார்த்தை சுமார் 21 மணிநேரம் நீடித்தது. ஆனால் இந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இரு தரப்பும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததையடுத்து அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸ் பாகிஸ்தானில் இருந்து அமெரிக்கா புறப்பட்டு சென்றார். இந்நிலையில், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் ஈரான் சபாநாயகர் முகமது பஹர் கலிபாப் தலைமையிலான பேச்சுவார்த்தை குழுவினரும் இன்று பாகிஸ்தானில் இருந்து விமானம் மூலம் ஈரான் புறப்பட்டு சென்றனர்.

## இலங்கையில் மக்கள்தொகை கணக்கெடுப்பு: முதியோர்களின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகரிப்பு



**கொழும்பு, ஏப்.13:**

தெற்காசியாவிலேயே மிக வேகமாக வயதானவர்கள் மக்கள் தொகை அதிகரித்து வரும் நாடாக இலங்கை மாறியுள்ளது. இலங்கையின் மக்கள் தொகை அமைப்பு வேகமாக மாறிவருவது குறித்த அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது. 2024-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்தான அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது.

அதன்படி நாட்டின் மொத்த மக்கள்தொகை 2 கோடியே 17 லட்சத்து 81 ஆயிரத்து 800 ஆகும். இதில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் எண்ணிக்கை 18 சதவீதம் ஆகும். இதன்மூலம் கடந்த 40 ஆண்டுகளில் அங்குள்ள முதியோர்களின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகரித்துள்ளது. சிறந்த சுகாதார வசதிகளால் ஆயுட் காலம் அதிகரித்தது ஒருபுறம் இருந்தாலும், பிறப்பு விகிதம் குறைந்து வருவது மற்றும் இளைஞர்கள் வேலை தேடி வெளிநாடுகளுக்குச் செல்வதும் இதற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகிறது.

உழைக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், எதிர்காலத்தில் நாட்டின் உற்பத்தித் திறன் மற்றும் முதியோர் பராமரிப்புச் செலவுகள் அரசுக்கு பெரும் சவாலாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த போக்கு நாட்டின் தொழிலாளர் சக்தி மற்றும் பொருளாதாரத் திட்டமிடலுக்கான நீண்டகால தாக்கங்களை குறிக்கிறது.

## அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தை தோல்வி: ஜே.டி.வான்ஸின் கருத்தும், ஈரானின் எதிர்வினையும்

**இஸ்லாமாபாத், ஏப்.13:**

மேற்கு ஆசியாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துவிட்டதாக அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ் தெரிவித்துள்ளார். ஈரானுக்கு இறுதியான மற்றும் சிறந்த சலுகையை வழங்கிய பின்னர் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகுவதாகவும் அவர் கூறியுள்ளார்.



அமெரிக்கா - ஈரான் இடையே கடந்த பிப்.28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வந்தது. கடந்த 8-ம் தேதி இருதரப்பும் இணைந்து தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தன. இந்த போர்நிறுத்தம் 2 வாரங்களுக்கு மட்டும் அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை நேற்று தொடங்கியது. இதில் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப், அதிபர் ட்ரம்ப்பின் மருமகன் ஜெராட் குஷ்னர் ஆகியோரும், ஈரான் தரப்பில் அந்த நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப், வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி, பாதுகாப்புச் செயலர் அலி அக்பர் அகமதியான், ஈரான் மத்திய வங்கி ஆளுநர் அப்தோல் நாசர் ஹெம்மாட்டி ஆகியோரும் கலந்துகொண்டனர். பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீர், வெளியுறவுத் துறை அமைச்சர் இஷாக் டார், உள்துறை அமைச்சர் மொஹ்சின் ரஸா நக்வி ஆகியோர் இருதரப்புக்கும் இடையே சமரச தூதுவர்களாக செயல்பட்டனர்.

பேச்சுவார்த்தையை தொடர்ந்து அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், (ஏப்ரல் 12) அதிகாலையில் பாகிஸ்தானில் செய்தியாளர்களிடம் பேசுகையில், "அமெரிக்க அதிகாரிகள் ஈரானுடனான பேச்சுவார்த்தையிலிருந்து எந்தவொரு ஒப்பந்தமும் இன்றி வெளியேறி, அமெரிக்காவிற்குத் திரும்பத் திட்டமிட்டுள்ளோம்.

21 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த தீவிர முயற்சிகளுக்குப் பிறகும், இரு தரப்பினராலும் கருத்து வேறுபாடுகளுக்கு இடையேயான இடைவெளியைக் குறைக்க முடியாததால், ஈரானுடனான இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தது. பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் மற்றும் ராணுவத் தலைமைத் தளபதி அசிம் முனீர் அற்புதமான விருந்தோம்பிகள்" என்று அவர் தெரிவித்தார்.

# மகளிர் இடஒதுக்கீடு: நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்ற வேண்டும்





# "வெற்றியை உறுதிசெய்யும் உழைப்பை எதிர்பார்க்கிறேன்": தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

# டிக்கெட் பரிசோதனை மூலம் ரூ.160.75 கோடி வருவாய்

# "எங்களை அச்சுறுத்திய ஈரான் இப்போது உயிர்பிழைக்கப் போராடுகிறது"

# 15-ந்தேதி தொடங்குகிறது மீன்பிடி தடைக்காலம்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 13.04.2026 திங்கட்கிழமை இலவச இ–பேப்பர்